Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, கார்த்திகை 5- ஆம் நாள். ஜமாதிஹவல் பிறை 19 (21-11-59) சனிக்கிழமை இதழ் 42.

கலாநிலயப் பதிப்பக
தினக்குறிப்பு
1960
மிக அழகான முறையில்
வெளிவருகின்றது.
மாணவர்களுக்கும், மற்றோருக்கும்
உபயோகமானது.
விலை சதம் 75

# தகநாயக்கா ஆட்சிக்கு அந்தியகாலம்

## இலங்கை அரசியல் நிலை நிமிடத்துக்கு நிமிடம் மாறுகிறது

## விமலா, டிக்கி சொய்சா கைது செய்யப்பட்டதன் விளைவு

### அடுத்தபடி என்ன? என். எம்.மா? கவர்னர்-ஜெனரல் ஆட்சியா?

—நமது அரசியல் நிருபர்—

இலங்கை அரசியலில் இப்போது பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கக் கட்சி, மந்திரி சபை, எல்லாவற்றிலுமே குழப்பம்.

பண்டாரநாயக்கா மந்திரி சபையில் பத்து மந்திரிகள் சேர்ந்து, 'வேலை நிறுத்தம்' செய்து, இரு மந்திரிகளை நீக்குமாறு வற்புறுத்தினர். இப்போது ஆறு மந்திரிகள் சேர்ந்து விமலா விஜயவர்த்தனவை மந்திரி சபையிலிருந்து நீக்கச் செய்ததுடன், பண்டாரநாயக்கா கொலை சதி வழக்கு சம்பந்தமாக அவரைக் கைது செய்யவும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

இது இத்துடன் நிற்கவில்லை. நிதி மந்திரி ஸ்டான்லி சொய்ஸாவின் மூத்த சகோதரரான டிக்கி சொய்ஸாவும் இப்போது இதே வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். (சோமராமதேரோ கொடுத்தவாக்கு மூலத்தைத் தழுவியே இவரும் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப் படுகிறது). இதனால் நிதி மந்திரி ஸ்டான்லியின் நிலைமை பலமடைய முடியாது.

இதே சமயம் நிதி மந்திரி ஸ்டான்லியை மந்திரி சபையிலிருந்து நீக்க வேண்டுமென்று அரசாங்கக் கட்சியிலேயே சிலர் பகிரங்கமாகக் கேட்கின்றனர். அவர் மீது இவ்வாரம் வெள்ளியன்று வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தாங்கள் ஆதரிக்கப் போவதாகவும் சில அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர். இந்த நிலைமை பிரதமர் தகநாயக்காவுக்குப் பெரிய சங்கடமாக இருக்க வேண்டும்.

விமலா விஷயமாகச் செய்தது போல், ஸ்டான்லி சொய்ஸாவையும் மந்திரி சபையிலிருந்து பிரதமர் நீக்குவாரா? இப்போது நீக்கி விட்டால், அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வர வேண்டிய அவசியம் நேரிடாது. ஆனல் பிரதமர் இந்த நடவடிக்கையை எடுப்பாரா? அல்லது மந்திரி ஸ்டான்லியே ராஜினமாச் செய்து விலகி விடுவாரா?

இன்று சனிக்கிழமை நிதிமந்திரி ஸ்டான்லி இலங்கை திரும்புவதாக பிரதமர் தெரிவித்தார். வருகிற வெள்ளிக்கிழமை அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை பார்லிமெண்டில் விவாதத்துக்கு வரும். நீதி மந்திரிமீதும் இவ்வித பிரேரணை கொண்டுவரப்பட இருக்கின்றது.

இலங்கையில் நடப்பது கூட்டுப் பொறுப்பு மந்திரிசபை; ஒரு மந்திரி செய்யும் காரியங்

[9 ஆம் பக்கம் பார்க்க]

## மாநகரசபையின் திட்டங்கள்

### நவீன வசதிகள் நிறைந்த புதிய சந்தை பண்ணையில் நிறுவப்படவிருக்கும் வாடி வீடு

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் புது பஸ் நிலையம், புது நூல் நிலையம், புது வாடி வீடு, புதுச்சந்தை, இப்படியாகப் பல புதிய திட்டங்கள் உருவாகின்றன.


நூல் நிலையமும் பஸ் நிலையமும் ஏற்கனவே உருவெடுக்க ஆரம்பித்து விட்டன.

சகல விதமான நவீன வசதிகளும் நிறைந்த மாதிரிச் சந்தையின் (Model Market) முதற் கட்டம் அடுத்த மாதம் 5 லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பமாகப் போகிறது. இப்பணம் அரசாங்கத்தால் மாநகர சபைக்கு கடனக வழங்கப் பட்டது. இப் புதிய சந்தை பழைய பஸ் நிலையத்துக்கு கிழக்கேயுள்ள வாய்க்கால் தொடக்கம் கங்கா சத்திரம் வரை அமைக்கப்படும். ஆஸ்பத்திரி வீதியிலிருந்து மின்சார நிலைய வீதி வரையுள்ள கஸ்தூரியார் தெருவின் பகுதி மூடப்படும். இரண்டு மாடிகள் கொண்ட இச் சந்தை கண்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளமாதிரிச் சந்தையைப் போன்றதாயிருக்கும். சகல விதமான சாமான்களையும் இங்கு பெறக்கூடியதாயிருக்கும். புதிய சந்தையிலேயே மீன், இறைச்சி முதலியவையும். கிடைக்குமாதலால் இப்பொழுதுள்ள மீன் சந்தையும் இறைச்சிக் கடைகளும் அகற்றப்பட்டு, அந்த இடம் லொறிகள் முதலிய வாகனங்கள் நிறுத்துவதற்கு உபயோகிக்கப்படும். புதிய பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதற்கும் இந்த இடம் உபயோகிக்கப்படும்.

### வழிகாட்டி நூல்

உல்லாசப்பிரயாணிகளுக்கான வழிகாட்டி நூல் தயாரிப்பது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட இருப்பதாகவும், வெகு

(9 ஆம் பக்கம் பார்க்க)



Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினல் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினல் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

## தமிழர் ஒன்றுபடாவிடில் ஒரு பல்கலைக்கழகமும் கிடையாது

### தப்பெண்ணங்களை நீக்கி ஒற்றுமைத் திட்டம் தயாரிக்க முயற்சி

—நமது சிறப்பு நிருபர்—

**யாழ்ப்பாணத்திலோ, திருக்கோணமலையிலோ தமிழ் மூலம் போதனை செய்யும் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க தமிழர் அனைவரும் ஒன்றுபட்டுக் கேட்டால், உடன் அரசாங்கம் அதை அங்கீகரித்து 20 லட்ச ரூபாய் மான்யமும், பின்னர் ஒவ்வொரு வருஷமும் 10 லட்சமும் அளிக்க முன்வருமென்று கூறப்படுகின்றது.**

இவ்விஷயமாகத் தமிழரிடையே ஒற்றுமை ஏற்படாவிடில், தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகமும் அங்கீகரிக்கப்படாமல் போகலாம். ஆகவே இவ்விஷயமாக ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை நீக்க, தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவர்களிற் சிலர், யாழ்ப்பாணம் சென்று தப்பெண்ணங்களை நீக்கி, ஓர் ஒற்றுமையான திட்டத்தை பிரதம மந்திரியிடம் கூடிய சீக்கிரம் சமர்ப்பிக்க முயற்சிகள் செய்வரென்று தெரிகிறது.

"மலை நாட்டிலே பத்து லட்சம் தமிழருக்கும் பயன் படும் முறையிலேயே, திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். அவர்கள் மலைநாட்டிலே 'எஸ்டேட் லையன்' அறைகளுக்குள் சிறைபட்டு அடிமைகள் போல் என்றென்றும் வாழமுடியாது. அவர்கள் சிறப்பாக கிழக்கு மாகாணத்தில் பரவிக் குடியேற வேண்டும். இதற்கெல்லாம் வசதியாக இருக்கும் பொருட்டே தீர்க்க தரிசனத்துடன், திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படுகிறது" என்று தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவர்களான டாக்டர் சின்னத்தம்பியும், சொலிஸிட்டர் ஜெனரல் திருச்செல்வமும் தெரிவித்தனர்.

இவ்விரு தலைவர்களும் சென்ற வாரம் பிரதமர் தகநாயக்காவைக் கண்டு பேசிய பின், ஹட்டன் வழியாக திருக்கோணமலைக்குச் சென்று பல்கலைக்கழக விடுதி முதலியவைகளுக்காக உப்பு வெளியிலே நூறு ஏக்கர் நிலம் வாங்க ஏற்பாடு செய்துள்ளனர். ஏற்கெனவே அங்கு 7 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. சிவன்கோவில் நிர்வாகிகளிடமிருந்து மேலும் 8 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இந்த 15 ஏக்கரும், துறைமுகத்தை அடுத்து இருப்பதாகவும், பல்கலைக் கழக வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும் தெரிவித்தனர்.

"கொழும்பிலே புதிதாக ஆரம்பித்துள்ள இரு பௌத்த பல்கலைக் கழகங்களிலும் விஞ்ஞானம் முதலிய பாடங்கள் போதிக்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவை இரண்டும் வெறும் கலாசார ஸ்தாபனங்களாக அல்லாமல், முதல் தரமான நவீன பல்கலைக் கழகங்கள் ஆகி விடலாம்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**அறிவித்தல்**

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வரரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்


# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

### ஐக்கிய முன்னணி அவசியம்

தமிழர்களுக்கென ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கிளர்ச்சி இப்பொழுது நாடெங்கும் பரவி வருகிறது. பழைய கதைகளைப் புரட்டிப் பார்க்காமல், கடந்த சுமார் பத்து வருடங்களுக்குள் தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தது தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கமே என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். இராமநாதன், பரமேஸ்வரக் கல்லூரிகளை சேர் பொன்னம்பலம் இராமநாதன் திரு. எஸ். நடேசனுக்கு வாரிசாக விட்டுப் போனர்.

தமிழருக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்பதை அரசாங்கம் இப்பொழுது கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு விட்டபடியால், தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர், பரமேசுவரக் கல்லூரி தலைவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தலைவர்கள், சைவ பரிபாலன சபைத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு திட்டத்தை அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று தமிழர்களின் சார்பாக நான் விண்ணப்பிக்கிறேன்.

பத்திரிகைகள் தெரிவித்ததும்பால, தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் பிறர் உதவியில்லாமல் தனித்தியங்க, இராமநாதன் பெயரில் திரு. நடேசன் ஒரு கலாசாரப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்க, சைவ பரிபாலன சபை ஒரு இந்துப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று விரும்ப திரு. தஹநாயக்காவுக்குப் பெரிய சங்கடமாய்ப் போய்விடும்.

இவ்விதம் ஒற்றுமைப்பட்ட தமிழ் கட்சிகள் அரசாங்கத்தின் முன் எவ்வித கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்பதைக் காட்டுவதற்காக, 1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பல்கலைக் கழக கொமிஷன் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட ஓர் விஞ்ஞாபனத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறேன்.

சனத் தொகை அதிகரித்துக் கொண்டு வருகிற படியினால் கடைசி மூன்று தேசிய பல்கலைக் கழக நிலையங்களும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட பல்கலைக் கல்லூரிகளும் தேவைப்படுகின்றன. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்கலைக் கழகங்கள் அல்லது பல்கலைக் கழக நிலையங்கள் (Centres) அவசியம் தேவைப்படுகின்றன. 1942 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக் கழகம் கொழும்பில் இருந்து வந்தபடியினால் அந்தக் கட்டடங்களை உபயோகிக்கலாம். இன்னும் சில கட்டடங்களை எழுப்பி விட்டால் பல்கலைக் கழகப் படிப்புக்குத் தவிக்கும் மாணவர்களுக்குப் பெரும் நன்மையாயிருக்கும். நாலு லட்சத்துக்கு மேலுள்ள சனத் தொகை கொண்ட கொழும்புக்கு அடுத்தாற்போல், கிட்டத்தட்ட 1 லட்சம் சனத் தொகை கொண்ட யாழ்ப்பாணம் வருகிறது. இலங்கை பல்கலைக் கழகத்தில் இடமின்மையால் வருடா வருடம் பல்லாயிரக் கணக்கான யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இந்திய பல்கலைக் கழகங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். கொழும்பை விட யாழ்ப்பாணத்தில்தான் பல்கலைக் கழக நிலையம் முதலில் அவசியம் என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழக நிலையம் அமைப்பது சிரமமான காரியமல்ல. அதிக பணமும் தேவையில்லை. ஏனென்றால், தொடக்கத்துக்கு, 1- வெகு துரிதமாக பெருத்துக் கொண்டு வரும் யாழ்ப்பாணப் பெரிய ஆஸ்பத்திரியில் வைத்தியக் கல்வி அளிக்கலாம். 2- திருநெல்வேலியிலுள்ள கமத் தொழில் பாடசாலையையும் ஆராய்ச்சி நிலையங்களையும் விவசாயக் கல்விக்குப்பயன் படுத்தலாம். 3- ஏற்கனவே முடிவடைந்து வரும் என்ஜினியரிங் கலாசாலை கட்டடத்தை அரசாங்க உதவி கொண்டு மேலும் விஸ்தரித்து என்ஜினியரிங் படிப்பிக்கலாம். 4- தற்சமயம் அரசினர் ஆசிரியை பயிற்சிக் கல்லூரிக்கு அணித்தாகவுள்ள விசாலமான காணிப்பரப்பை காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தர்மகர்த்தாக்களைக் கொண்டு பல்கலைக் கழகத்துக்கு மாற்றுவித்து, அதில் பல கட்டடங்களை எழுப்பி, சட்டக்கல்லூரி, கலை, பொது விஞ்ஞானக் கல்லூரி, விடுதிகள் ஆகியவற்றை அமைக்கலாம்.

அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழக நிலையம் அளிக்க முன்வந்துவிட்டால், தேசிய உணர்ச்சியுள்ள பல கொடையாளிகளும், தமிழ் பல்கலைக்கழக இயக்கம், இராமநாதன், பரமேசுவரக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலியவற்றின் மனேச்சர்மார், சைவ வித்தியா விருத்தி சங்கம் (இந்து போட்) முதலிய ஸ்தாபனங்களும் மனமுவந்து காணிகளும், பொருளும், கட்டடங்களும் நன்கொடை வழங்குவார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை.

யாழ்ப்பாணத்தவரின் பிரதான தொழில் கல்வியே என்று சேர் ஜவோர்ஜெனிங்ஸ் ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளார். கல்வியில் இவ்வளவு ஆர்வமுள்ள யாழ்ப்பாண மக்கள் பல்கலைக்கழகம் மேலோங்குவதற்காக கட்டடங்களை எழுப்பப் பணமும் தாராளமாகத் தருவார்களென்பது திண்ணம்.

அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த சமயத்தில், அறிவும் தேச பக்தியுமுள்ள எங்கள் தமிழ்த் தலைவர்கள் ஏற்கனவேயுள்ள குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தி தமிழ் மக்களிடையே பிளவு உண்டாக்க விரும்புவார்களா?

மேற்சொன்ன ஸ்தாபனங்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு ஏகோபித்த திட்டத்தை சமர்ப்பித்தால், பல்கலைக்கழக நிலையங்கள் நிறுவுவதற்கு அரசாங்கம் மேலும் தாமதிக்காது.

அரசியல் மதக் கொள்கை வேறுபாடுகளை ஒரு புறத்தில் வைத்துவிட்டு 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றபடிக்கு எல்லோரும் ஓர் ஐக்கிய முன்னணி அமைக்கவேண்டும்.

**தி. முத்துக்குமாரு**
யாழ்ப்பாணம்.

## தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் கட்சி பேதமற்றது

திரு. எஸ். நடேசன் இலங்கைவாழ் தமிழினத்திடையே வேற்றுமையை ஏற்படுத்தி விட்டார் என்பது எனது கருத்து. இது மிகவும் வருந்தத்தக்கது. கடந்த சில வருடங்களாக எல்லா மதத்தைச் சேர்ந்த தமிழர்களிடையேயும், தென்னிந்தியா, மலைநாடு, வடகிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையேயும் தமிழ் ஐக்கியம் அவசியம் என்ற உணர்ச்சி வளர்ந்து வந்திருக்கிறது. தங்கள் மொழிக்கும் கலாச்சாரத்துக்கும்—ஏன், தங்கள் சீவியத்துக்குமே ஆபத்து வந்துவிட்டதென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். தமிழ் மொழியும் இலக்கியமும் தமிழரின் மதக் கொள்கைகளுடன் இரண்டறக் கலந்துள்ளன.

தமிழரின் பரம்பரை மதங்களாகிய சைவமும் வைஷ்ணவமும் மேனாட்டு சமயங்களின் தாக்குதலையும் பௌத்தத்தின் தாக்குதலையும் எதிர்த்து நின்று இன்றும் அழியாதிருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு திண்டு தேவையில்லை. கிறிஸ்தவம் இலங்கையில் அழிந்து போனாலும்கூட, சைவம் தழைத்தோங்கி நிற்கும்.

இந்து மதங்களுக்கும் கலாச்சாரத்துக்கும் பாதுகாப்பிடமாகிய தென்னிந்தியாவிலேயே ஒரு தனிப்பட்ட இந்து பல்கலைக்கழகம் வேண்டுமென்று எவரும் கோரவில்லை. அப்படி எத்தனை பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் இருக்கின்றன!

ஆழ்வார்களும் நாயன்மாரும் கடவுளின் அன்பைப்பற்றிப் பாடிக்கொண்டு திரிகையில் பௌத்தர்கள் தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலும் நாலந்தாவிலும் பல்கலைக் கழகங்களை அமைத்தார்கள். அப்படியிருந்தும் பௌத்தம் இந்தியாவிலிருந்து மறைந்துவிட்டது.

தமிழ்ப் பெரும் மகனாகிய சேர் பொன்னம்பலம் இராமநாதன் வாரிசாக விட்டுப் போன இரு கலாசாலைகளையும் திரு. நடேசன் கவனமெடுத்து மேலும் அபிவிருத்தி செய்வாரானல் தமிழ் மக்கள் அவருக்கு கடமைப்பட்டவராவார்கள்.

நான் ஒரு கிறிஸ்தவனயிருந்த போதிலும் தமிழன் என்ற முறையில் தமிழரின் பழம் பெரும் சமயங்களுக்கும் பண்பாட்டுக்கும் பெரு மதிப்பு அளிப்பவன்.

கத்தோலிக்க குருமாரும் புரொட்டெஸ்டன்ட் குருமாரும் இல்லாவிட்டால் கிறிஸ்தவம் தத்தளித்துப் போகும். ஆனல் சைவம் அவ்வாறல்ல. திராவிட இனம் அமைத்துக்கொண்ட இந்த இயற்கையான சமயக் கோட்டையைத்தூக்கிநிமிர்த்திக்கொண்டிருப்பதற்குப் பிரசாரங்களும் ஸ்தாபனங்களும் தேவையில்லை. சைவ அடியார்கள் சமய குரவர்களின் உதவியால் அது பல நூற்றுண்டுகளாக ஏற்பட்ட ஆபத்துக்கள் எல்லாவற்றையும் சமாளித்து இன்றும் தலை தூக்கி நிற்கிறது. கருத்து வேறுபாடுகளும் சந்தேகங்களும் வாக்குவாதங்களும் நிரம்பிய ஒரு சூழ் நிலைக்குள் சைவத்தை இழுத்துக் கொண்டு வந்தால், சைவத்துக்கு மட்டுமன்று தமிழினம் முழுவதற்குமே ஆபத்துண்டாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் எண்ணியுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் கட்சிபேதமற்றதாய், தமிழ் மக்கள் பின்பற்றும் சகல மதங்களுக்கும் இடமளிக்கக் கூடியதாயிருக்கும். எத்தனையோ நூற்றுண்டுகளாகப் பலவித இடையூறுகளைத் தாண்டி வந்த தமிழினத்தின் பண்பாடும் இலட்சியங்களுமே அதன் உயிர்நாடியாயிருக்கும்.

**எஸ். ஜே. குணசேகரம்.**
கோப்பாய்.

## இருள் சூழ்ந்த ஒழுங்கை

ஓட்டுமடம் ரோட்டிலிருந்து பி. ஏ. தம்பி ஒழுங்கைக்குத் திரும்பும் பாதை இருள் சூழ்ந்த இடமாகவும், கள்வர் காடையர்களுக்கு வசதியளிக்கக் கூடிய ஒதுக்கிடமாகவும் இருக்கின்றது. அண்மையில், அங்குள்ள சில வீடுகளில் திருடர்கள் புகுந்து, வெளியிலிருந்த துணிமணிகளையும், வேறு சில பித்தளைப் பாத்திரங்களையும் அபகரித்துச் சென்றுவிட்டனர். இத் திருட்டுக்களைத் தடை செய்ய முடியாது பி. ஏ. தம்பி ஒழுங்கை வாசிகள் தவிக்கின்றனர். இவ்வொழுங்கைக்கு மின்சார வசதிகள் அளிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவே திருட்டுக்களுக்கு உதவியாகவும் இருக்கின்றது. ஒழுங்கை வாசிகள் யாழ்ப்பாணம் மேயருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். தங்களுக்கு உடனடியாக மின்சார வசதிகள் அளிக்கும்படி அவர்கள் மேயரைக் கேட்டுள்ளனர். எமது வட்டார அங்கத்தவரும், மேயரும் இவ்விஷயத்தில் அக்கறை காட்டி, ஒழுங்கை வாசிகளின் முக்கியமான குறை ஒன்றைத் தீர்த்து வைப்பார்களென எதிர்பார்க்கலாமா?

**'ஒழுங்கை வாசி'**
பி. ஏ. தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## முல்லேரியாவா மக்களின் பீதி

கொழும்பிலிருந்து 8 மைல் தூரத்திலிருக்கும் முல்லேரியாவாவிலுள்ள பைத்திய ஆஸ்பத்திரியால் முல்லேரியாவிலுள்ள மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கின்றார்கள். இப்பைத்திய ஆஸ்பத்திரியிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஆஸ்பத்திரிக்குச் சுற்றிவர உள்ள சுவரை உயர்த்திக் கட்டுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டிருந்தும், இதுகாறும் இக்கோரிக்கை நிறைவேற்றப்படாமலே இருந்து வந்திருக்கின்றது.

இவ்விதமாகத் தகுந்த பாதுகாப்பின்மையால் அங்கிருக்கும் 100 நோயாளிகளும் தம் விருப்பப்படி தெருவில் திரிகின்றார்கள். இவ்விதம் இவர்கள் வெளியே திரிவதால் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் பெரும்பீதி அடைந்து வருகின்றார்கள்.

இந்நோயாளிகள் வீட்டினுள்ளும் கடைகளுள்ளும் சென்று மக்களைத் துன்புறுத்துகின்றார்கள். அலிஸ்நோனா என்ற இளம்பெண்ணை சமீபத்தில் ஒரு பைத்தியகாரன் பலவந்தமாகத் தூக்கிச் சென்றான். ஆனல் அதிர்ஷ்டவசமாக வழியில் சென்ற மக்களால் காப்பாற்றப்பட்டாள்.

இவ்வித அபாயகரமான சூழ்நிலையில் இருந்து வாழ்வதற்கஞ்சி சிலர் ஊரை விட்டே வெளியேற முற்பட்டிருக்கின்றார்களாம்.

இவ்விதம், தகுந்த பாதுகாப்பில்லாமல் பைத்தியகாரர்களை வெளியே திரியவிட்டால் நிலைமை மோசமாகி ஊரிலுள்ள மக்களெல்லோரும் ஊரைவிட்டுப் போகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவார்கள்.

## அரசாங்க ஆசிரியர்களுக்கான சலுகைகள் ஏனைய ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படல் வேண்டும்

### அனுராதபுரம் கிளைச் சங்கத்தின் தீர்மானம்

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, அரசினர் எத்தனையோ விதமான சலுகைகள் வழங்கிக் கொண்டு வரும் போது உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒன்றும் செய்யாமலிருப்பதை வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று அனுராதபுர ஆசிரியர் சங்கக் கிளைக் கூட்டம் ஒன்றில் நிறைவேறியது.

திருக் குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையில் திரு. லோறன்ஸ் ஏ. தேவசகாயம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இப் பிரச்சினையை திரு. கே. இரத்தினசபாபதி விவாதத்துக்குக் கொண்டு வந்தார்.

இக் கருத்தை வலியுறுத்திப் பேசுகையில் அவர் ஆசிரியர்களுக்குள் பாரபட்சம் காட்டும் அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

சில சுய மொழி ஆசிரியர்கள் கல்வி பயிற்றிக் கொண்டே பரீட்சைகளை எழுதிப், பட்டதாரிகளாக மாறி விடுகின்றனர் என்றும், அவர்களது பட்டப் படிப்பை மதிப்பீடு செய்து அவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கும் அரசாங்கம் அவர்களது பழைய சேவைக் காலத்தையும் கணக்கிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பெண்கள் கல்லூரியில் பயிற்றுவிக்கும் சில ஆசிரியைகள் தமது பிரசவ கால விடுமுறையின் போது, பதில் ஆசிரியைகளை நியமிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். அவர்களின் சம்பளத்தின் ஒரு பகுதியை அந்தப் பதில் ஆசிரியைகளுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருப்பதால் உதவி பெறும் பாடசாலையை நடாத்துகின்ற நிர்வாகிகள், இம்மாதிரியான பதில் ஆசிரியைகளுக்குத் தங்கள் கணக்கிலேயே சம்பளம் அளிக்க வேண்டும் எனவும் அவர் வற்புறுத்தினர்.

அவரது தீர்மானங்களைத் தாய்ச் சங்கத்துக்குத் தெரிவித்து, ஆவன செய்ய குழுவினர் ஒப்புக்கொண்டனர்.

திரு. எல். பீட்டர் பெரேராவின் திடீர் மாற்றலினல் காலியாகியுள்ள சங்கப் பொருளாளர் பதவிக்கான தேர்தலை இம்மாதம் 26-ந் தேதியன்று நடைபெறும் பொதுக் கூட்டத்தில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### சாரணர் இயக்கம்

சாரணர் இயக்கத்தின் நன்மைகளைப் பலர் அறிந்த போதிலும், அனுராதபுரச் சாரண இயக்கம் செம்மையாகச் செயலாற்றவில்லை. எனவே புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்யும் பொருட்டு, பிரதம கொமிஷனர் திரு. ஈ. டயிள்யூ. கன்னங்கரா, சென்ற ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரம் வந்து புது நிர்வாகிகளைத் தெரிவுசெய்தார்.

அதன்பின்னர் அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா, பி. விஜேரத்தின அவர்களைத் தலைவராகவும், திரு. எச். பி. டி. ஜயவிக்கிரமாவைச் செயலாளராகவும் கொண்ட புது நிர்வாக சபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

# இந்து கலாசாரப் பல்கலைக் கழகம்

## தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தைப் பாதிக்காது

### யாழ்ப்பாண இந்துப் பிரமுகர்களின் தீர்மானம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

"இலங்கையில் பௌத்தர்களுக்கு அடுத்தாற்போல சனத்தொகையில் கூடியவர்கள் இந்துக்கள். பௌத்தர்களுக்கென்று அரசாங்கம் ஏற்கெனவே இரண்டு பல்கலைக்கழகங்களை நிறுவியிருக்கிறது (வித்யோதயா, வித்யாலங்கார). ஆகையினால் இந்துக்களுக்கென ஒரு பல்கலைக்கழகமாவது அமைப்பதற்கு அரசாங்கம் கட்டாயம் உதவி அளிக்க வேண்டும். சேர் பொன் இராமநாதன் பரமேசுவர, இராமநாதன் கல்லூரிகளை நிறுவியபோது அவை பிற்காலத்திற் பல்கலைக் கழகமாக அமையவேண்டுமெனத் திட்டமிட்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. சு. நடேசபிள்ளை, இராமநாதன் கல்லூரியையும் பரமேசுவரக் கல்லூரியையும் அவற்றிற்கு சொந்தமான நில புலங்களையும் யாழ்ப்பாணத்தில் ஓர் இந்து கலாசார பல்கலைக்கழகம் அமைப்பதற்காக உதவ முன் வந்தது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு செயலாகும். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவருக்குப் பக்கபலம் அளிக்க வேண்டும். எங்களுக்கிடையே பூசல்கள் எழுந்துவிட்டால் கடைசியில் ஒன்றுமே கிடைக்காது போய் விடும். தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு பக்கத்திலிருக்க நாம் யாழ்ப்பாணத்தில் ஓர் இந்துக் கலாசாரப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கு முயல வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தாரின் நோக்கங்களுக்கு இந்துக் கலாசாரப் பல்கலைக்கழகம் குந்தகம் விளைக்கப்போவதில்லை. அவர்களின் திட்டங்கள் விரிந்த அடிப்படையில் அமைந்துள்ளன." இவ்வாறு சென்ற ஞாயிற்றுக்கிழமை இந்து கல்வி சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் முடிக்குரிய நியாயவாதியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் கிளைப் பள்ளிக்கூடங்களினதும் மனேஜருமாகிய திரு. ரி. முத்துசாமிப்பிள்ளை தெரிவித்தார்.

வைத்தீசுவர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், பரமேசுவரக் கல்லூரி அதிபர் திரு. சிவபாதசுந்தரம், கலைப் புலவர் க. நவரத்தினம், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. முத்துவேற்பிள்ளை, முன்னாள் எம். பி. திரு. வீ. வீரசிங்கம், திரு. எஸ். சிவசுப்பிரமணியம் முதலிய பல இந்து வித்தியா பிரமுகர்கள் இக் கூட்டத்திற் கலந்து கொண்டார்கள்.

திரு.சிவசுப்பிரமணியம், தலைவர் கூறியவற்றை ஆமோதித்து திரு. நடேசனை இந்துக்கள் எல்லோரும் ஆதரிக்க வேண்டுமெனவும் தலைவர் தெரிவித்த அத்தனையும் பண்பும் புத்திசாலித்தனமும் வாய்ந்தனவென்றும் கூறினர்.

திரு. வீரசிங்கம் பேசுகையில் இத்தகைய ஒரு நன்னோக்கமுள்ள இயக்கத்துக்குச் சிலர் இடையூருக நிற்கப் பார்க்கிறார்கள் என்றும், இதை அரசாங்கம் விரும்பமாட்டாதென்றும் திரு. நடேசனை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் பண உதவி அளிக்காவிட்டால் இந்துப் பொது மக்களே பொருள் உதவுவார்களென்றும் கூறினர்.

திரு. சிவபாதசுந்தரம், திரு. ரி. முத்துக்குமாரு, முன்னாள் வடபகுதி வித்தியாதரிசி திரு. ஏ. சரவணமுத்து ஆகியோரும் பேசினர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. யாழ்ப்பாணத்தில் ஓர் இந்து கலாசார பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை இக்கூட்டம் அரசாங்கத்துக்கு வற்புறுத்திச் சுட்டிக் காட்டுகிறது.
2. இந்து கலாசார பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு உதவியாக இராமநாதன், பரமேசுவரக் கல்லூரிகளையும் அவற்றின் சொத்துக்களையும் இந்து பொதுமக்களுக்கு அளிக்க முன்வந்த திரு. சு. நடேசபிள்ளையின் செயலை இக்கூட்டம் வரவேற்று, அரசாங்கம் இதற்கு வேண்டிய உதவியை அளிக்கவேண்டுமென்று கோருகிறது.

இம்முடிவுகள் சம்பந்தமான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஏற்று நடத்துவதற்கு ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது.

# சிங்களத் திணிப்பு முயற்சியில் அர்த்தமற்ற ஒரு செயல்

### வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் சிரமம்

யாழ்ப்பாணம்

இலங்கையிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் அரசாங்கத்துடன் கடிதப் போக்கு வரத்து நடாத்தும் போது சிங்கள மொழியிலேயே நடாத்த வேண்டுமென்ற கட்டளைதான் சிங்கள திணிப்பு முயற்சியில் கடைசியாக நடந்துள்ள அர்த்தமற்ற செயலாகும். இலங்கையிலுள்ள வியாபார நிலையங்களில் நூற்றுக்கு 75 வீதத்துக்கு மேற்பட்டவற்றை நடாத்துபவர்களும் அவற்றில் வேலைசெய்பவர்களும் சிங்களவரல்லாத பிறமொழியினர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இச் சட்டத்தினல் இவர்களுக்குச் சொல்லொணுச் சிரமம் உண்டாவது ஒருபுறமிருக்க, இதைவிட கொடிய விளைவும் ஒன்றுண்டு. அதுதான் நாட்டின் பொருளாதாரத்துக்கு உண்டாகப் போகும் இன்னெரு பேரிடி. இந்தச் சட்டம் முக்கியமாக யாழ்ப்பாணத்து வியாபார நிலையங்கள் எல்லாவற்றையும் பெரிதும் தாக்குமென்பதில் சந்தேகமில்லை. மற்றும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள நிலையங்களுக்கும் அவ்விதமே. இவையெல்லாம் இனிமேல் சம்பளம்கொடுத்து சிங்கள மொழிபெயர்ப்பாளர்களையும் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக, யாழ்ப்பாண மாநகரசபையின் அடுத்த மாதாந்தப் பொதுக்கூட்டத்து நிகழ்ச்சிநிரலில் பின்வரும் பிரேரணையையும் சேர்த்துக் கொள்ளும்படி ஹாஜி. வா. மீ. மு. அபூசாலிஹ் யாழ்ப்பாண மேயருக்கு முன்அறிவித்தல் கொடுத்திருக்கிறார்:

"வர்த்தக நிலையங்களில் அரசாங்கம் சிங்கள மொழியைத் திணிக்க எடுத்துள்ள நடவடிக்கைகளால் வர்த்தகத் துறையின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுவதுமன்றி இலங்கையின் பொருளாதாரத்திலும் வீழ்ச்சி ஏற்படுமாதலாலும், அரசாங்கத்தின் "நியாயமான அளவு தமிழ் மொழி உபயோக" மசோதாவின் நோக்கமே பாதிக்கப்படுமாதலாலும், இந் நடவடிக்கை தனியார் சுதந்திரத்துக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளதாலும், இம் முயற்சியை உடனடியாகக் கைவிட்டு, தாம் பிரதமர் பதவியை ஏற்ற காலத்தில் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியைக் கௌரவிக்க வேண்டுமென இச் சபை கௌரவ பிரதம அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது."

# கடைகளுக்கான வரிகள் பரிசீலனை செய்ய உப குழு

## மாநகரசபை செய்துள்ள முடிவு

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

இரண்டு மூன்று யாழ்ப்பாணத்தவர் கூடிப் பேசும்போது தமிழும் ஆங்கிலமும் கலந்து மணிப்பிரவாளமாய் வருவது சகஜம். ஏதாவதொரு விஷயம் பற்றி ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டிக்கொண்டிருப்பார்கள். 'டக்'கென்று தமிழும் வந்து புகுந்துவிடும். இது சிலருக்கு, முக்கியமாக நமது சிங்களச்சகோதரர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கும். ஆனல் இதில் ஆச்சரியப்பட வேண்டிய விஷயமொன்றுமில்லை.

இலங்கைப் பிரதிநிதிகள் சபையை எடுத்துக்கொள்ளுங்கள். சிங்களத்தில் பேசவேண்டுமென்பதற்காக ஒரு எம். பி. சிங்களத்தில் பிரசங்கம் செய்துகொண்டிருப்பார். திடீரென்று யாராவது குறுக்குக் கேள்விகளைக் கேட்டு அவருடையமூளையைக் கலக்கிவிட்டால் உடனே ஆங்கிலத்தில் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்துவிடுவார். இது ஏனென்றுல் அவர்கள் நினைப்பது ஆங்கிலத்தில், நினைத்ததை மொழிபெயர்த்துப் பேசுவது சிங்களத்தில். சடுதியாக ஒரு குறுக்கீடு வந்தவுடனே மொழி பெயர்க்க நேரமிராது. ஆங்கிலத்திலேயே அடித்துவிடுவார்.

### முற்றிலும் வேறு

கொழும்புபார்லிமெண்ட்சபையில் இப்படியென்றுல், இலங்கையின் இரண்டாவது பெரும் பட்டினமாகிய யாழ்ப்பாணத்தின் மாநகரசபையில் முற்றிலும் வேறுவிதமாயிருக்கும். இங்கே பெரும்பாலான அங்கத்தவர்களும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். திடீரென்று வாக்குவாதம் மிஞ்சியவுடனே தமிழில் இறங்கிவிடுவார்கள்! மேயர்கூட சுத்தமான ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சமயாசமயங்களில் "யார் சொன்னது?", "என்ன, சரிதானே!" என்று தமிழிலும் பேசுவது கேட்போருக்கு ஆனந்தமாயிருக்கும்.

யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை (13-11-59) நடைபெற்றபோது இவற்றையெல்லாம் கவனிக்க நேரிட்டது. தமிழில்தான் பேசவேண்டும், ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடில்லாமல், சொல்லவேண்டிய விஷயத்தை மற்றவர்களுக்கு தெளிவாகச் சொல்லவேண்டுமென்ற நோக்கத்துடன் இருமொழிகளிலும் தாராளமாக வழங்கப்பட்டன.

### முன் போல்

இக் கூட்டத்தில் ஒரே ஒரு முக்கியமான விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சொத்து வரி சம்பந்தமாக உதவி மேயர் திரு. எஸ். இராசரத்தினம் கொண்டுவந்த ஓர் பிரேரணை மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் காணி சொத்துக்களின் வரிகளைச் சொந்தக்காரரே நகரசபைக்கந்தோரில் கொண்டுவந்து கட்டும் முறை அவர்களுக்குப் பெரும் இடைஞ்சலையும் தொந்தரவையும் கொடுக்கிறபடியினுல், முன்னிருந்த வழமைப்படி நகர சபையின் வரி வசூலிப்பவர்களே அவ்வரிப்பணத்தை அறவிட வேண்டுமென்றும், இது சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன அமைச்சருடன் பேசி மாநகர சபைச் சட்டத்தை உடனே மாற்றியமைக்க வேண்டுமென்றும் அவர் பிரேரித்தார். அமைச்சருடன் சமீபத்தில் தான் பேச்சு வார்த்தைகள் நடாத்தியிருக்கிறபடியால் இந்தப் பிரேரணையை விட்டுவிடலாமே என்று மேயர் திரு. அல்பிரட் தங்கராஜா துரை

(14ஆம் பக்கம் பார்க்க)


மில்க்கோஸ்

குழந்தைகளை திடகாத்திரமாக வளர்க்கிறது


உங்கள் குழந்தையின் தேகாரோக்கியமே அதிமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டமுடியாது போனல் அவனின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு உகந்த போஷாக்களிக்கும் சிசு-உணவை அவனுக்கு ஊட்டுவதற்கு நிச்சயப்படுத்துங்கள்.

டாக்டர்கள், மில்க்கோஸ்தான் குழந்தைகளுக்கு இன்றிமையாத சிசு உணவு என்று கூறுவார்கள். மில்க்கோஸில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரிநீரகைகள், கொழுப்புச் சத்துகள், சேர்க்கப்பட்டிருக்கின்றன. மில்க்கோஸில் தேகவளரச்சியையும் நல்ல தேகாரோக்கியத்தையும் தரும் மேலதிக விட்டமின் சத்துகளும், இரும்பு சத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முழு ஆடை நிரம்பிய பசுப்பாலிலிருந்து விஞ்ஞான ரீதிப்படி தயாரிக்கப்படும் இந்த மில்க்கோஸ். இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கேற்றவாறு விசேஷமாகப் பொதியப்பட்டு—உங்களுக்கு சுத்தமாகவும் பத்திரமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் கொடுக்க ஆரம்பியுங்கள்.



மில்க்கோஸ்

இன்றியமையாத சிசு-உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது.

HLM 3487

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 11. வெடி கேட்டது

தென்னோலைச் சுவர் வைத்த சின்னஞ்சிறு குடிசை அது. முன்பக்கம் அரைவாசி திறந்தாற்போலவே இருந்தது. உள்ளே பலகையின் மேலே மூன்று நான்கு வாயகன்ற மிட்டாய் போத்தல்கள். அதாவது முன்னொரு காலத்தில் அவற்றிலே மிட்டாய்கள் இருந்தன. இப்போது இரண்டு வெறுமையாகவே இருக்கின்றன. மூன்றாவதில் 'பணிஸ்' என்று சொல்லப்படும் கோதுமையப்பம் இருந்தது. மற்றதிலும் ஏதோ ஒன்று இருக்கத்தான் இருந்தது. பேர் சொன்னால் உங்கட்கு விளங்காது!

இந்த முன் மண்டபத்துக்கு அருகாமையில் இருந்த சாய்ப்பிலே மண் பானையில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது.

அடடா! இன்னொன்றைச் சொல்லவில்லையே. கடையிலே ஒரு வாழைக்குலையும் இருக்கவே இருந்தது.

'குத்தரிசி குத்தும் இடத்திலே வாய்க்கரிசிக்கு வழியில்லை' என்று சொல்வார்கள். இந்த ஈழவள நாட்டின் தேயிலையின் கம்மென்ற வாசம், இங்கிலாந்திலே கொடி கட்டிப் பறக்கலாம். ஆனால், இங்கோ வாய்க்கரிசிக்கு வழியில்லாத கதைதான். தெருப் புழுதி போன்ற தேயிலை இங்கே இருப்பதே பெரிய காரியந்தான்! அந்தக் கசாயத் தண்ணீரை அவ்வழியால் இளைத்துக் களைத்து வரும் பாதசாரிகட்கு, அந்தக் கடைக்கார முதலாளி வார்த்துக் கொடுப்பதே ஒரு புண்ணிய கைங்கரியந்தான்.

வேலாயுதம் கடைக்குள் நுழைந்தான். ஒரு 'பிளெயின் ரீ' போடச் சொல்லி உத்தரவு கொடுத்துவிட்டு, போத்தலுக்குள் இருந்த 'பணிஸ்' ஒன்றை எடுத்துக் கடிக்கத் தொடங்கினான் வேலாயுதம்.

'பணிஸ்' காய்ந்துபோய் இருந்தது. வேலாயுதத்தின் வரண்ட தொண்டைக்குள் அது செல்ல மறுத்தது. எனவே தேநீர்தயாராகும்வரை அவன் காத்துக்கொண்டிருக்கவேண்டியிருந்தது.

'யோன் முதலாளி' கடகட வென்ற சப்தத்தோடு தேநீர் தயாரித்து வேலாயுதத்தின் கையிற் கொடுத்தார். காய்ந்த பணிசைக் கடித்து, கடிபட்ட துண்டத்தை, தேநீரை ஒரு வாய் உறிஞ்சிக் குடிப்பதன் மூலம், இளக்கி வயிற்றுக்குள் அனுப்பத் தொடங்கினான் வேலாயுதம்.

சாப்பிட்டு முடிந்துவிட்டது. ஆமாம், இன்றையப் பகற்போதை இந்தச் சிற்றுண்டியுடனேயேமுடித்துக்கொள்வது என்று தீர்மானித்துவிட்டான். சிற்றுண்டியாக இருப்பினும், உண்ட களை இருக்கத்தான் செய்தது. வேலாயுதத்தின் உடலெல்லாம் வெயர்த்துக் கொட்டியது. கடைக்குளிருக்கவே அவனால் முடியவில்லை. வெளியேஎழுந்துபுங்கை மரத்தின்கீழேபோய்ப்படுத்துக் கொண்டான் வேலாயுதம்.

கடைக்கார யோனும், தன் கடையைவிட்டுக் குருவி துரத்துவதற்காக வயற்பக்கம் போய்க்கொண்டிருந்தான்.

வேலாயுதத்தின் எண்ணங்களும் யோனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தன.

யோனின் பூர்வாசிரம ரகசியம் எவருக்குமே—அவன் சிங்களவன் என்பதைத்தவிர—சரியாகத் தெரியாது. வருடத்தின் சரிபாதி நாட்களிற் இந்தப் பிராந்தியங்களிற் கச்சான் சுழற்றியடிக்கும் நாட்களில் மீன்பிடிப்பதற்கென்று வரும் நீர்கொழும்பு வலைகாரரோடு அவன் இங்கே வந்திருக்கலாம்.

மூன்று வருடங்களுக்கு முன்புதான் அவன் கங்கைக் கரையில் குடிசையைக் கட்டினான். தொடர்ந்து அது தேநீர்க் கடையாக விஸ்வரூபம் எடுத்தது.

ஆனால், யோன், தன் வயிற்றுக்காக இந்த தேநீர்க் கடையை மட்டும் நம்பியிருக்கவில்லை. இயல்பாகவே அவன் நல்ல பிரயாசி. கங்கைக் கரையிலே சதுப்புநிலமாகக் கிடந்த காட்டுத்தரையை வெளியாக்கி, வரம்பு கட்டி வயல் நிலமாகவே ஆக்கிவிட்டான். மாரியிலும் கோடையிலும் அந்தத் துண்டுக்காணியிலிருந்து சோற்றுக்கு நெல் கிடைத்துவிடுகிறது. இப்போதும் விளைந்த கதிர்களைக் கொய்யவரும் தினைக்குருவிகளைத் துரத்தத்தான் அவன் போகிறான்!

ஆனால் அவன் நல்ல பிரயாசி என்று யார் சொல்கிறார்கள்? சிங்களவன் வந்து இங்கே காணிபிடித்துக் கொண்டானே என்றுதான் எல்லோரும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இற்றைவரைக்கும் கோரைப்புல்லும், மருதமரமும், நச்சுமாஞ்செடியும் விரவிக் காடாகிக் கிடந்த இந்தச் சதுப்புநிலம், அப்போதெல்லாம் எவர் கண்ணிலேயும் படவில்லை. இப்போது அவன் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பட்டினியும் பசியும் கிடந்து அந்தத் தரையைப் பண்படுத்தி விட்டபின் சிங்களவன் என்ற நியாயம் பேசுகிறார்கள்!

பார்க்கப் போனால் சாதாரணமான மனிதர்களுக்கு இந்தக் கோணற்புத்தி கிடையாது. மெத்தப் படித்த சிலர்தான் இப்படியெல்லாம் வெளிப்படையாகப் பேசிக் கொள்கிறார்கள். 'கிழக்கும் வடக்கும் தமிழர்களின் ஜன்ம பூமியாம். அங்கே, வேற்று இனத்தவனுக்கு இடமில்லையாம்.' என்றெல்லாம் அன்றைக்கு மூதூரில் நடந்த கூட்டத்திலே, ஒரு அப்புக்காத்து தொண்டைத் தண்ணீர் வரளக் கத்தினாரே. அவருக்கென்ன? பலத்துப் பேசினாலும் போட்டிருக்கிற சட்டை கசங்காதுதான். இப்படியெல்லாம் வெட்டிவீரம் பேசுகிறவர்கள், இந்த மகாவலிகங்கைக் கரையிலே நாலு ஏக்கர் காட்டை வெட்டிக் கொண்டு வந்து குடியேறிச் சீவிக்கலாமே. தன்னாலும் செய்ய முடியாது. செய்கிறவனைப் பார்த்துக் கொண்டு இருக்கவும் பொறுக்கவில்லை. நல்ல மனிதர்கள் இவர்கள்.

வேலாயுதம் காறித்துப்பினான். தீய்க்கும் வெய்யிலின் அகோரத்தில் மண்டை ஓடு காய்ந்துவிட்டது. ஓங்காளித்த போது சளியும் வரவில்லை. கண்ணாற் தண்ணீர்தான் வந்தது! ஆம் கண்ணீர்தான்! கையாலாகாத தன் இனத்தவர்கட்காக வேலாயுதம் விட்ட கண்ணீர்!

தூரத்தே யோன் குருவிகளை விரட்டும் சப்தம் கேட்டது. வெருண்ட குருவிகள் ஜிவ்வென்று பறந்து பக்கத்தேயிருந்த மருத மரத்தின்மீது குந்திக் கொண்டன. ஆனாலும் யோனின் கூக்குரல் இன்னமும் கேட்டுக் கொண்டுதான் இருந்தது.

அவனுக்கு ஆத்திரமாக இராதா! சென்ற புரட்டாசி ஐப்பசி மாதங்களிலே முழங்காலளவு புதையும் இந்தச் சதுப்பு நிலச் சேற்றிலே நின்றுகொண்டு கொஞ்சங் கொஞ்சமாக, ஆனால் சோர்வும் களைப்பும் இன்றி நிலத்தைத் தன் கையாலேயே கொத்திப் புரட்டினான். பெட்டியில் முளையைச் சுமந்து கொண்டு தன்னந் தனியாகவே வயல் விதைத்தான். பயிரானதும் தன் பயிரை முள்ளம் பன்றிகள் அழித்துவிடாதபடி இரவிலே தலையிற் சாக்கைப் போர்த்திக்கொண்டு கொட்டும் மழையிலும் பனியிலும் நனைந்தபடி எத்தனையோ இரவுகள் காவல் காத்திருக்கிறான். இத்தனை பிரயாசத்தின் பின் விளைந்த நெல்லை இந்தக் குருவிகள் கொண்டுபோவதென்றால் அவனாற் பொறுக்க முடியுமா? ஆகவே அவன் இன்னமும் சப்தமிட்டுத் துரத்திக் கொண்டேயிருந்தான். கொத்தாமல் விதைக்காமல், விளைந்ததை மட்டும் தட்டிப்பறிக்க வரும் சோம்பேறிக் குருவிகளை இந்தப் பிராந்தியத்திலேயே தங்க ஒட்டாமற் செய்துவிட வேண்டும் என்ற வெறியோடு அவன் துரத்திக் கொண்டேயிருந்தான்.

அவனது ஆலோலக் குரலில் வேலாயுதம் நித்திரையாகி விட்டான். உச்சிப் புழுக்கத்தின் பின்னர் இலேசாக அசையத் தொடங்கிய புதுத்தென்றலின் திராணியற்ற அசைவும், பால்போன்ற குருமண்ணின் மெத்தென்ற இதமும், எல்லாவற்றுக்கும் மேலாக உடற் சோர்வும் அவனை ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்துவிட்டன.

வாழ்க்கையின் வக்கிர விசித்திரங்களைச் சதா அசை மீட்கும் அவன் நினைவுகளும் அவன் தலைக்குள்ளேயே அடங்கி விட்டன. அவனுக்குத் தைரியம். வேகும் வெய்யிலில், அத்தியாவசியமாகவோ, அல்லது அறியாத புது மனிதர்களாகவோ இல்லாதவர்கள் வரவே மாட்டார்கள். அப்படி வந்தாற் கூடக் கடைக்கார யோன் எழுப்பி விடுவான்!

ஆமாம்; அழுகையும் பற்கடிப்பும், இரத்த வெள்ளமும் உயிர் வாதையும், முனகலும் அதன் காரணமான முழக்கமும் தன்னை நித்திரையினின்று எழுப்பப் போவதை அவன் அறிவானா? வற்றாத வள நதி பாயும் மாவலியின் கரையிலே வாழும் மனிதன், தன் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளத் தன் உயிரையே திரணமாக மதித்து நடாத்தும் பயங்கரமான தொழிலை அவன் கேள்விப் பட்டுத்தான் இருக்கிறான். ஆனால் அந்தக் கோரம் அவன் கண் முன்னாலேயே நடக்கும் என்று அவனுக்குத் தெரிந்தால் சிந்திக்கத் தெரிந்த அவனால் நிம்மதியாகப் படுத்துறங்கத்தான் முடியுமா?

வேலாயுதம் அரசியல் வாதியல்ல. ஆனால் வயிற்றுச் சோற்றுக்காகத் தான் நாட்டில் வேண்டாத சம்பவங்களும், மறக்கமுடியாத காரியங்களும், நினைக்கமுடியாத செயல்களும் நடப்பதை அவனால் உணர முடிந்தது. அந்த உணர்வு அவன் மன நிம்மதியை எத்தனையோ தடவை கலைத்தும் இருக்கிறது.

ஆனால் அவன் மனச்சாந்தியை நிரந்தரமாகக் கலைத்து விட, அந்த வெடிச் சப்தம் கேட்டது! சுற்றுப்புறத்தையே அதிரவைத்துக் கொண்டு, காதே அடைத்து விடும்படியாக, அந்த வெடிச்சப்தம் கேட்டது. மருத மரங்களில் உல்லாசமாகக் குந்திக்கொண்டிருந்த குரங்குகளும், தினைக் குருவிகளும், காகங்களும், கடைக்குமுன்னால் வாலைச் சுருட்டிக் கொண்டு முடங்கிக்கிடந்த சொறி நாய்களும், தறிகெட்டு ஓடும்படியாக, அந்தச் சப்தம் பயங்கரமாகக் கேட்டது. திடுக்கிட்டு விழித்துக்கொண்ட வேலாயுதத்திற்குக் கணநேரம் ஒன்றுமே ஓடவில்லை.

ஆனால் அழுகைச் சத்தம் கேட்டதும், சப்தம் வந்ததிசையில் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான்.

(தொடரும்)

## சிங்களத்தில் திருக்குறள்

### தமிழ் மறைக் கழகத்தின் முயற்சி

"திருக்குறளைச் சிங்களத்தில் பெயர்ப்பிக்க இலங்கைச் சாகித்திய மண்டலம் முடிவு செய்திருப்பதை தமிழ்மறைக் கழகம் வரவேற்கிறது; தமிழ்மறைக் கழகம் திருக்குறளைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பிக்க ஏற்கனவே ஒழுங்கு செய்துள்ளது. மொழிபெயர்ப்பு வேலையும் தொடங்கிவிட்டது". இவ்வாறு தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

கலாசார அலுவற் பணிப்பாளருக்குத் தமிழ்மறைக் கழகம் அனுப்பிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

"எமது தமிழ்மறைக் கழகம் சென்ற சில ஆண்டுகளாகத் திருக்குறளைச் சிங்களத்திலே பெயர்ப்பிக்க முயன்று வந்தது. எமது வேண்டுகோட்படி அருட் திரு தம்மரத்தின தேரோ திருக்குறளை மொழிபெயர்த்துத் தருவதற்குஉடன்பட்டார். அவர் இப்பொழுது இவ்வேலையில் ஈடுபட்டுள்ளார். அடுத்த ஆண்டில் (1960) மொழிபெயர்ப்பை முடித்துத் தருவதாகவும் அவர் எமக்கு எழுதியிருக்கின்றார். இம்மொழி பெயர்ப்பாளர் முன்னர் மணிமேகலையையுஞ் சிலப்பதிகாரத்தையும் மொழிபெயர்த்துளர் எனவே திருக்குறளை மொழிபெயர்த்தற்கு அவர் மிகுந்த தகுதியுடையவர் என்பதை யாவரும் ஒப்புவர். எனவே இம்மொழி பெயர்ப்பைச் சாகித்திய மண்டலம் ஏற்றுப் பதிப்பித்தல் நன்று. அன்றேல் இதனை வெளியிடுதற்கு எமது கழகத்துக்குப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். அடுத்த ஆண்டு யூன் திங்களில் நடைபெறும் எமது கழகத்தின் எட்டாவது திருக்குறள் மாநாட்டில் இம்மொழி பெயர்ப்பு நூலை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

திருக்குறளை உலகெங்கும் பரப்புதற்கும், உலகத்துமொழிகள் யாவற்றிலும் அதனை மொழி பெயர்ப்பதற்கும் எமது கழகம் சென்ற பல ஆண்டுகளாக முயன்று வருகிறதென்பதையும், ஆண்டுதோறும் திருக்குறள் மாநாடுகளையும் தமிழ் மறைத் தேர்வுகளையும் நடாத்தி வருகிறதென்பதையும், திருக்குறள் பற்றி இரு நூல்களை வெளியிட்டுள்ளதென்பதையும் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறோம்.




உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

ஒரு காலத்தில் சரித்திராசிரியர் சக்திகள் பற்றி அதிகம் பேசினரல்லர்; ஆனல் பணிவுடன் 'செய்யத்தக்க வியாக்கியானம்' என்றும், 'போக்கு' என்றும் 'ஓட்டம்' என்றும் பேசினர்.

# காலமெனும் நதிக் கரையில் சரித்திர ஆசிரியன் காணும் சக்திகள்

**வி**ஞ்ஞான ரீதியான சரித்திரம் புயலென எழுந்து ஐரோப்பிய பல்கலைக்கழகங்களைக் குலுக்கி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்டது. அறிஞர்கள் சென்றகாலம் பற்றிய 'உண்மை'யைக் கண்டு பிடித்தற் கேற்ற முறைகளும் கருவிகளும் தம் கையில் உள்ளன என நம்பினர். இருந்தாலும், இக்கால பௌதிக சாஸ்திரி யொருவன் தான் விஞ்ஞானம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்கிறனே அப்பொருளில் "சரித்திரமும் ஒரு விஞ்ஞானமே" என்று கூறுவோரைப் பார்த்துச் சிரிப்பான். பழைய முறையில், சரித்திரமென்பது பிழை நிறைந்தோராகிய மானிடரின் செய்கைகள் பற்றியது எனக் கருதப்பட்ட வரையில்—உதாரணமாகமத்தியகாலவரலாற்று ஆசிரியர்கள், பாவ புண்ணிய நெறிகளில் ஒன்றை அரசர் தேர்ந்தெடுக்கின்றனர் என்று நினைத்த வரையில்—சரித்திரத்தில் மனிதரது செய்கைகளை இயக்க விதிகளைக் (Mechanical Laws) கொண்டு தீர்மானிக்கலாம் என யாரும் கற்பனை செய்திலர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் விஞ்ஞானப் புரட்சி ஆரம்பிக்கும் காலத்தில் தோமஸ் கார்லைல் என்பார் பெரியாரது வாழ்க்கை வரலாறு எனும் சங்கிலிக்கோவையே சரித்திரம் எனப் போதித்தார். இன்றே, சமுதாயங்கள் புலன்களுக்கப் பாற்பட்ட 'சக்தி'களுக்கு அடங்கியிருப்பவை;- அவை பொருளாதார சக்திகளாயினும் சரி, சமூக, அறிவுச் சக்திகளாயினும் சரி—அவற்றைக் கட்டுப் படுத்த சமுதாயங்களால் இயலாது என்று நினைப்பதே நாகரிகமாகி விட்டது. ஆராய்ச்சி நூல் எதைக் கையிலெடுத்தாலும், அதில் இக்கருத்து மிளிர்வதைக் காணலாம். ஓர் அமெரிக்க பல்கலைக் கழகச் சரித்திராசிரியர் எழுதிய சமீபகால வெளியீடு ஒன்றில் இவ்வாக்கிய முள்ளது; "பல்வேறு வகுப்பு மனிதரும் வேறுபட்ட வழிகளில் பதினறும் நூற்றாண்டுச் சரித்திரத்தின் சக்திகளுக் குட்பட்டு நடந்து கொண்டனர்." ஆனல் இவ்வேறுபாடுகளே சகல வித்தியாசங்களையும் உண்டாக்குபவை.

## போக்கு—ஓட்டம்

ஒரு காலத்தில் சரித்திராசிரியர் சக்திகள்பற்றி அதிகம் பேசினரல்லர்; ஆனல் பணிவுடன் 'செய்யத்தக்க வியாக்கியானம்' என்றும், 'போக்கு' என்றும், 'ஓட்டம்' என்றும் பேசினர். பொருளாதார,சமூக, இராணுவ, அரசியலமைப்பு சம்பந்தமான சரித்திரங்கள், பற்றித் தனித்தனி நூல்கள் எழுதப்பட்டன. அரசியற் சரித்திர நூல்களில் பிற் சேர்க்கையாக இலக்கியம், கலை சம்பந்தமான சரித்திரம் பற்றிய வியாசங்கள் இடம் பெற்றன. பின் ஒரு துறை பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி அதிக தூரம் சென்றுவிட்டதாகக் கருதப்பட்டது; (ஒக்ஸ்போர்டு வெளியீடான ஆங்கில நாட்டு வரலாறு போன்ற) பொதுவான சரித்திரங்களை எழுதினேர் கலைக் களஞ்சியங்களையே ஆக்கினர். ஒரே பெரிய புத்தகத்தினுள் மனித வாழ்வின் சகல அம்சங்களையும் ஒன்றுதிரட்ட வேண்டும் என தீர்மானிக்கப் பட்டதும் (அக்ரன் பிரபு தாம் எழுதாத மாபெரும் நூலில் இங்ஙனம் திரட்டுவர் என எதிர் பார்க்கப்பட்டது) அதற்கு ஒரு திறவுகோல் இன்றியமையாததாயிற்று. மார்க்ஸீயம் அப்படிப்பட்ட ஒரு சாவியைத் தந்தது; நடுவயதையடைந்த சரித்திராசிரியர்கள் சிலர் கைப்பட்டு அது உற்சாகமூட்டும் பொருளாயிற்று. வர்க்க அமைப்பை ஆராய்ந்து சரியாக விளங்கினலன்றிப் பழைமையைச் சரியாக விரித்துரைக்க முடியாது எனக் கூறுவாருளர். 'அமைப்புகள்' பற்றிய ஆராய்ச்சிசி,க்கலான பிரச்சினைகளைத் தீர்த்துள்ளது என்பதையோ அன்றேல், நமசரித்திரத்தின் இருட்டு மூலைகளுக்கு ஒளி வீசவாயினும் உதவியுள்ளது என்பதையோ வெகு சிலரே மதிப்பர்.

## காலமெனும் நதி

ஆனல், மனிதர் பலவழிகளில் செயல் புரியும் தூண்டுதல்களைப் பெறுகின்றனர். வீரமிக்க மனிதர்வறுமை, வேலைநீக்கம்பற்றி வரும் அச்சத்தைவெற்றிகொள்வர். பிறர் ஒரு பெண்ணின் காதலைப் பெறவோ, ஒரு இலட்சியத்தை நிறைவேற்றவோ, வருவது வரட்டும் என்று எதிர்காலத்தைப்பற்றி நினையாமல் குதிப்பர்; இவர்கள் தம் வர்க்கத்துக்குத் துரோகம் செய்யவும் கூடும். ஒவ்வொரு சரித்திராசிரியனும் காலமெனும் நதிக்கரையில் ஒரு ஸ்தானத்தில்—ஒருவேளை தன்னுணர்வின்றி—நின்று கொண்டே பழைமைபற்றிய வியாக்கியானம் செய்கின்றன். ஒருவன் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றினூடே சரித்திரத்தைக் காண்பான்; இன்னெருவன் கடவுளின் திருவுள்ளத்தையே சரித்திரம் செயல் முறையில் காட்டுகிறதுஎன்பான்; வேறெருவன் சரித்திரம் தற்கால ஸ்தாபனங்களின் பரிணமிப்பை நோக்கியே செல்கிறது என்பான்; மற்றெருவன் சரித்திரத்தில் பொருளாதார, சமூக சக்திகளின் மோதலைக் காண்பான். சரித்திரத்தில் உள்ள விஞ்ஞானம் அதன் தரவு (data) களைச் சேகரிப்பதில் மட்டுமே இருக்கின்றது. அவற்றைத் தேர்ந்தெடுப்பதும், ஒழுங்கு செய்வதும் கலைஞனின் எல்லைக்குட்பட்டது. மீண்டும் ஒரு அமெரிக்க சரித்திராசிரியன் கூற்றை இங்கு தருகிறேம்:

"சரித்திராசிரியன் தனது முறையில் விஞ்ஞானியின் கடுமையான கட்டுப்பாடுகளை கலைஞனின் உள்ளுணர்வுபற்றிய திறமையோடு கலக்கின்றன்; ஆனல் அவன் முடிபுகள் பரிசோதனை முறையில் உள்ளன; குறிப்பால் உணர்த்துவன; தாழ்மையுடன் வெளியிடப்படுவன; ஏனெனில் உண்மையின் உருவம் எந்த யுகத்திலும் விளக்கமும் நிச்சயமும் அற்றதாயும், பெரும்பாலும், முறிவுற்றதாயுமே இருக்கும் என அறிந்துள்ளான். தற்செயலாக வெளிவந்த இக் கருத்தைஆழ்ந்து சிந்தித்தல் நலம்.

[லண்டன் பி. பி. ஸி. வெளியீடான "லிஸினர்" இதழின் தலையங்கம் இது. மொழிபெயர்ப்பு: ஆ. சபாரத்தினம்.]

'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# இலங்கைத் தமிழரின் எதிர்காலப் பொருளாதாரம்

— எஸ். எஸ். பிள்ளை —

இலங்கையின் சனத்தொகையானது ஒரு கோடியைநோக்கி விரைந்து சென்றுகொண்டு இருக்கிறது. இலங்கையின் இன்றைய சனத்தொகை அதிகரிப்பு இரண்டரைவிகிதமாக இருப்பதால் இப்போது 90 இலட்சத்துக்குச் சற்று அதிகமாக இருக்கும் எண்ணிக்கையானது அடுத்து வரும் ஒரு சில ஆண்டுகளில் நூறு இலட்சத்தை அடைந்துவிடும். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தொகை மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு. அதாவது 30 இலட்சமாகும். இவர்களின் சனத்தொகை அதிகரிப்பும் இரண்டரை விகிதமாக இருப்பதால் இவர்கள் எண்ணிக்கை அடுத்த 40 வருடங்களில் அதாவது 2000-ம் ஆண்டில் இரண்டு மடங்காகி 60 இலட்சமாகியும் 2050-ம் ஆண்டில் 150 இலட்சமாகவும் பெருகுமென மதிப்பிட வேண்டியிருக்கிறது. 30 இலட்சம் தமிழ் பேசும் மக்களில் 20 இலட்சம்பேர் தென் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறியோ தொழில் உத்தியோகம் நிமித்தமாகவோ வாழ்ந்து வருகின்றர்கள்.

## தமிழர் பிரதேசம்

தமிழர் பிரதேசமென கூறப்படும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேற்றமடையாததே இதற்குக் காரணங்களாகும். இலங்கையின் பொருளாதாரம் அந்நியரான ஆங்கிலேயரினல் அமைக்கப்பட்டு நமக்கு அளிக்கப்பட்டது. தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, றப்பர், தென்னை போன்று, வரண்ட பிரதேசத்திலும் உண்டாக்கக் கூடிய வேறு பயிர்கள் இருந்த போதிலும் இப்பிரதேசங்களின் வரட்சி அவற்றின் விருத்திக்கு உதவியளிப்பதாயில்லை. வடக்கு கிழக்குப் பிரதேசங்கள், அபிவிருத்தி செய்யப்பட்ட தென்னிலங்கைப் பகுதிக்கு அதிக தூரத்தில் இருப்பதால், இப்பிரதேசம் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியவில்லை. தென் கிழக்கு ஆசிய நாடுகளுள் இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம் நன்றுக இருப்பதற்கும், தென் இலங்கையின் பொருளாதாரமே முக்கிய காரணமாகும்.

## தமிழர் துயர்

தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் வருவாய், துரிதமாக அதிகரிக்கும் ஜனத்தொகைக்கேற்ப பெருகத்தவறியதன் காரணமாகத் தென் இலங்கையிலே வேலையற்றேரின் தொகை திடீரென அதிகரித்துள்ளது. தென் இலங்கை மக்களின் இந்த அவலநிலைக்கு இந்திய மக்களே காரணமென்றனர் சிலர். வேறுசிலர் இலங்கைத்தமிழர்தான் காரணமென எண்ணினர். இதனல் துவேஷ மனப்பான்மை வளர்ந்து எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தென் இலங்கையில் உத்தியோகமோ, அல்லது வேறு தொழில்களோ செய்யமுடியாதபடி சில நடவடிக்கைகள் கையாளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு மிகுந்த துயரத்தை உண்டாக்கின. எனவே தமிழ் பிரதேச பொருளாதாரத்தை விருத்தி செய்யவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இவ்வித நிர்ப்பந்தங்களும் அதிர்ச்சிகளுமே பலநாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக்காரணமாகஇருந்துவருகின்றதென கொலம்பியா தேச பொருளாதார அபிவிருத்தியில் அனுபவம் பெற்றவரும், யேல் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டவருமான பேராசிரியர் அல்பேட் ஏ. கிர்ச்மென் கருதுகின்றர்.

## தேசிய வருமானம்


காலம் மாறிவருகின்றது. அதற்குத் தக்கதாக நமது பொருளாதார அமைப்பும் மாற வேண்டியிருக்கிறது. தென் இலங்கையின் வருவாயிலேயே நமது பொருளாதாரம் தங்கியிருப்பதால் நமது வாழ்வும் தாழ்வும் அதனுடன் இணைந்து கொண்டன.

தேசிய வருமானத்தில் ஒரு எண் அதிகரிக்க வேண்டுமாயின் ஏற்கெனவே உள்ள மூலதனத்தோடு 3 முதல் 4 எண்கள் வரை புதிய மூலதனமிடப்பட வேண்டுமென்பது பொருளாதார நிபுணர்களின் ஏகோபித்த அபிப்பிராயம். ஆண்டுதோறும் இரண்டரை விகித ஜனத்தொகை அதிகரிக்கும் நம் நாட்டில் புதிய மூலதனம் ஏழரை முதல் 10 சத விகிதமே சேர்க்கப்பட்டால் தேசிய வருமானமும் சனத்தொகை அதிகரிக்கும் விகிதத்தில் தான் பெருகும். ஆழ்ந்திருக்கும் மந்த நிலைமை நீங்கி மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்நிலை அடைய வேண்டுமாயின் தேசிய வருமானத்தில் 15 சத விகிதத்துக்குக் குறையாது ஆண்டுதோறும் புதிய மூலதனம் இடம்பெற வேண்டும்.

## நான்கு அம்சங்கள்

இலங்கையின் தேசிய வருமானம் 1958-ல் 549,30,00,000 ரூபாய் என அறிக்கை தருகின்றது. 25,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு 7300 சதுர மைலாகும். தமிழ் மக்கள் எங்குதான் வாழ்ந்தபோதிலும் இலங்கையின் மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினராகவே இருக்கின்றனர். ஆகவே, இவர்களது பிரதேசம், நாம் விரும்பும் வகையில் அபிவிருத்தியடைய வேண்டுமாயின் இலங்கையின் தேசிய வருமானமாகிய ரூபாய் 549,30,00,000 இல், 15 சதவிகிதமாகிய ரூபாய் 72,39,50,000 இல் மூன்றில் ஒரு பங்காகிய 24,13,16,000 ரூபாய்க்குக் குறையாது. ஆண்டுதோறும் இப்பகுதியில் மூலதனமிடப்பட வேண்டும். பின் தங்கி நின்ற ஒரு பிரதேசம் நவீன பொருளாதார அபிவிருத்தி பாதையில் முன்னேறும் பொழுது நான்கு முக்கிய அம்சங்களில் அபிவிருத்தியை அவதானிக்க முடியும். 1. பண வருவாயைக் கொடுக்கும் பயிர்களை உண்டாக்குவதில் காட்டப்படும் ஆர்வமே அபிவிருத்தியின் ஆரம்ப அறிகுறியாகும். பண வருவாயைக் கொடுக்கும் விவசாயப் பொருள்கள் பிறநாட்டு வருவாயைத் தருதலால் அந்நாட்டின் ஏனைய தொழிலாளர்களுக்கும் வேண்டிய உணவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சக்தியைக் கொடுக்கும். 2. அதி

[15ஆம் பக்கம் பார்க்க]



பிரிட்டிஷ் விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இந்திய தூதுவர்-இந்திய விஞ்ஞான காங்கிரஸின் பொதுக் காரியதரிசி டக்டர் ஏ. கே. தேயும், அவரது பாரியாரும், பிரிட்டிஷ் விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் தலைவரான சேர் ஜேம்ஸ் கிரேயுடன் அளவளாவுகின்றனர்.

# தன்னடக்கமும் ஒழுக்கமும் நற் பூஷணம்

## வித்தியாலய மாணவர் கலை விருந்து

— அஜன் —

ஆர்வம் மிக்க ஆசிரியர்களும் உற்சாகம் நிறைந்த சில மாணவர்களும் அயராது உழைத்தால் எத்தனையோ நல்ல காரியங்களைச் சாதித்து விடலாம். இந்த உண்மை சென்ற திங்கட்கிழமையன்று மாலைவைத்தீசுவர வித்தியாலய ஏச். எஸ். ஸி.—எஸ். எஸ். ஸி மாணவர்களின் ஆண்டு வைபவத்தின் போது பிரத்தியட்சமாயிற்று.

சுவையான சிற்றுண்டி விருந்தின்பின்னர் மாணவர் சங்கத் தலைவர் திரு. ஆர். பத்மநாபன் தலைமையில் யாழ்ப்பாணப் பகுதி என்ஜினியர் திரு. எம் கார்த்திகேசன் மாணவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி அரியதோர் அறிவுரையாற்றினர். தன்னடக்கமும், கட்டுப்பாடும், ஒழுக்கமும், விடா முயற்சியும் மாணவர்களின் பூஷணங்கள் என அவர் குறிப்பிட்டு இலட்சிய வாழ்வின் அவசியத்தை வற்புறுத்தினர். நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்து வருவதுடன், வேலையில்லாத்திண்டாட்டமும்பெருகி வருவதால் மாணவர்கள் அரசாங்க சேவையே கதி மோட்சம் என்பதை மறந்து தொழில் துறையில் ஈடுபட்டு உழைக்க வேண்டுமென அவர் யோசனை கூறினர். மாணவிகளும் தமிழ்ப் பண்பைக் கைவிடாமல் பெண் குலத்தின் பொன் விளக்குகளாக மிளிர வேண்டுமெனத் திரு. கார்த்திகேசன் தெரிவித்தார். வீதிகளையும், பாலங்களையும் பெரிய கட்டடங்களையும் அமைப்பதற்கு மேலான யோசனைகளைக் கூறும் என்ஜினியர் மாணவர்களின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டுமென்பதுபற்றிக் கூறிய உருப்படியான கருத்துக்கள் அனுபவ உண்மைகளாக மிளிர்ந்தன.

அவ்வப்போது அறிஞர்களையும் பெருமக்களையும் அழைத்து வித்தியாலய மாணவர்களுக்கு அறிவு விருந்தூட்டிவரும் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், திரு. கார்த்திகேசனுக்கு நன்றி கூறியதுடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் மாணவர்களின் ஊக்கத்தையும் பெரிதும் பாராட்டினர். மாணவர் சங்கச் செயலாளர் திரு. அ. ஆனந்தக்குமாரசுவாமி சங்கச் சார்பில் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இப்படியான வைபவங்களின்போது மாணவர்கள் நாடகங்கள், ஆடல்பாடல் போன்ற நிகழ்ச்சிகளை அளித்துச் சபையோரை மகிழ்விப்பது வழக்கம். வலுவும் வனப்பும் மிக்க மாணவன் எஸ். அரியராஜாவின் உடற் பயிற்சி சாதனைகளும், ஜி. சிவசங்கரனின் ஜால வித்தைகளும் சபையோருக்கு மகிழ்ச்சி ஊட்டின.

### ஆங்கில நாடகம்

ஆங்கில நாடகங்கள் எழுதுவதில் கைவந்த திரு. லனரோல் எழுதிய 'பத்திரிகை ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது' (The Editor's Word is Final) என்ற ஆங்கில நாடகத்தை மாணவர்கள் திறம்பட நடித்துச் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றனர். பத்திரிகை ஆசிரியருக்கு வேம்பாகத் தோன்றும் விஷயங்கள் சந்தர்ப்பவசத்தால் கரும்பாகவும் மாறிவிடுகின்றதென்பதை உணர்த்திவைக்கும் வகையில் நகைச்சுவை மிக்க அந்த நாடகம் அமைந்திருந்தது. பத்திரிகை ஆசிரியராகவும்,அவரின் காரியதரிசியாகவும், சேவகனுகவும், உதவியாசிரியராகவும் தோன்றிய மாணவர்கள் தத்தம் பாகத்தைக் கச்சிதமாக நடித்தனர். பத்திரிகையின் நிர்வாகிகளில் ஒருவரான பெண்மணியின் உடையலங்காரமும் இயற்கையான நடிப்பும் குறிப்பிடத்தக்கது. எஸ். சண்முகநாதன், எம். நவரத்தினராஜா, எம். ஸ்ரீதரன், ஜி. சிவசங்கரன், எம். எம். மக்பூல் ஆகியோர் இதிற் பங்குபற்றி நடித்தனர்.

### தமிழ் நாடகம்

'துரோகம் தந்த பரிசு' என்ற தமிழ் நாடகம் சங்கிலி மன்னனின் நாட்டுப் பற்றைப் படம் பிடித்துக் காட்டுவது. சங்கிலியன், பரநிருபன், காக்கைவன்னியன், அப்பாமுதலி, அமுதா, தயாளன் ஆகிய பாத்திரங்களை முறையே அ. கந்தசாமி, நா. பாலசுப்பிரமணியம், குருசுவாமி, சி. தம்பியையா, தெட்சணமூர்த்தி, பரராஜசிங்கம் ஆகியோர் தாங்கி நடித்தனர்.

போர்த்துக் கீசர் சிறையிட்ட பின்னர் சங்கிலியன் தனது மனச் சாட்சியுடன் போராடும் உணர்ச்சிமிக்க கட்டமும், கைதிக் கூண்டில் நின்று வீராவேசத்துடன் பேசுவதும் நடிப்பின் சிகரத்தைத் தொடும் பகுதிகளாகும். ஏனையோரும் தாங்கள் மேற்கொண்ட பாகங்களை நன்கு உணர்ந்து நடித்துள்ளனர். 'மங்கியதோர் நிலவினிலே...', 'அந்தோ அந்தோ' ஆகிய பாடல்கள் நெஞ்சை விட்டகலாதவை. விறுவிறுப்பான இந் நாடகத்தை திரு. க. சொக்கலிங்கம் ஆக்கியுள்ளார்.

மாணவர்கள் மனம் வைத்தால் இப்படி எத்தனையோ நல்ல காரியங்களைச் சாதித்து முத்தமிழையும் வளர்க்கலாமன்றே.

# இந்தியா - சீன எல்லை விவகாரத்தில்

## இந்தியாவுக்கு கொம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

லடாக்கில் சென்ற மாதம் 21ஆந் திகதி சீனப்படைகளுக்கும் இந்திய எல்லைப் பொலிஸாருக்கும் இடையே நிகழ்ந்த கைகலப்பின்போது கைதுசெய்யப்பட்ட பத்து இந்தியப் பொலிசாரையும் கொல்லப்பட்ட ஒன்பதுபேரின் சடலங்களையும் கடந்த சனிக்கிழமை சீன அதிகாரிகள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். படுகாயமடைந்தவராகக் கருதப்படும் ஒரு இந்திய பொலிஸ்காரரைக் காணவில்லை என்பது உறுதியாயிற்று. கொல்லப்பட்டவர் என அறிவிக்கப்பட்ட தலைவர் கராம் சிங் என்பவரும் திரும்பி வந்துள்ளார். காஷ்மீர் இராச்சிய அரசாங்கம் கொல்லப்பட்ட ஒன்பதுபேரின் குடும்பத்தினருக்கு ரூபாய் 11,000 நஷ்டஈடாக வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

இந்திய எல்லையில் சீனம் மேற்கொள்ளும் பலாத்கார நடவடிக்கைகளை இந்திய பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன், உள்விவகார மந்திரி கோபிந் பலப்பந், அமெரிக்க இராஜாங்க மந்திரி கிறிஸ்தியன் ஹேட்டர் ஆகியோர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். அயல் நாடுகளின் உதவியின்றியும், பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளாமலும் இந்தியாவின் எல்லைகள் பாதுகாக்கப் படவேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் நேரு மீண்டும் வற்புறுத்தியிருக்கிருர்.

### எல்லை விவகாரம்

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய சபை, எல்லை விவகாரம் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையை ஆதரித்து தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. மக்மோஹன் கோட்டை இந்தியாவின் வட கிழக்கு எல்லையாகக் கருதவேண்டும் என்பதை வற்புறுத்தியும், பிரதம மந்திரி நேருவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பாராட்டியும், சீனமும் இந்தியாவும் எல்லைவிவகாரப் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு நிபந்தனைகளை விதிக்கக் கூடாதென்றும், டலாக்கிலும் வழக்கமான எல்லையை அங்கீகரித்துப் பின்னர் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தவேண்டும் என்றும் கொம்யூனிஸ்ட் கட்சி தீர்மானங்களை வெளியிட்டிருக்கின்றது.

இந்திய—சீன எல்லையில் 25 மைல் அகலமான ஒரு சூன்யப் பிரதேசத்தை அமைத்து எல்லைப்புற மோதல்களைத் தடுப்பதற்கு ஆலோசனைகள் கூறிச் சீனப் பிரதமர் சௌ என் லாய் கடந்தவாரம் அனுப்பிய கடிதத்திற்கு சென்ற திங்கட்கிழமை இந்திய அரசாங்கம் பதிலனுப்பியது.

இந்திய அரசாங்கம் சீனப்பிரதமரின் யோசனையை நிராகரித்தும் மக்மோஹன் எல்லைக்கோட்டை அடிப்படையாகக்கொண்டு

**இந்தியா**

பேச்சு வார்த்தைகள் நடாத்தப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியும் பதிலனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

இரு தரப்பினரும் எல்லைப்புறத்தில் நிகழக்கூடிய கைகலப்புகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகின்றன. மக்மோஹன் எல்லைக் கோட்டில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்தே இந்தியா பேச்சு வார்த்தை நடாத்த விரும்புகின்றது. மக்மோஹன் எல்லைக் கோட்டுக்குப் பதிலாக ஒரு புதிய எல்லையை நிர்ணயம் செய்ய சீன அரசாங்கம் எத்தனிக்குமானுல்இந்தியாவிட்டுக் கொடுக்க மாட்டாது எனத் தெரிகிறது.

சீனப் பிரதமர் சென்றவாரத்தில் கூறிய யோசனைகளுக்கு அடுத்த மாதம் அமெரிக்க ஜனதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்வது முக்கிய காரணமாக இருக்கலாம் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை எல்லை விவகாரம் பற்றிய ஒரு வெள்ளை அறிக்கை லோக்சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதமர் நேரு சீனப் பிரதமரின் யோசனைகளை சாத்தியமற்றவையென்றும் இந்தியா வேறு யோசனைகளைத் தெரிவித்துள்ளதாகவும் கூறியிருக்கிருர். அடுத்த புதன் கிழமை சீன எல்லை விவகாரம் லோக்சபையில் விவாதிக்கப்படும். வேறெரு வெள்ளை அறிக்கையும் வெளியிடப்படும்.

### பிரதமர் நேரு

சென்ற சனிக்கிழமை பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு தமது 70வது பிறந்ததினத்தை அமைதியாக இமயமலை அடிவாரத்திலுள்ள டெஹ்ராடுன்னில் கொண்டாடினர். உலகின் பலநாட்டுத் தலைவர்களும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர். அந்நாள் இந்தியா முழுவதும் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்பட்டது.

### இந்திய உணவு மந்திரி

சர்வதேச உணவு விவசாய மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு பிரிட்டனுக்கும் யூகோஸ்லேவியாவுக்கும் விஜயம் செய்து விட்டு கடந்த சனிக்கிழமை இந்தியாவின் உணவு மந்திரி, எஸ். கே. பட்டில்தாயகம் திரும்பினர். உலக உணவு வங்கி நிறுவப்பட வேண்டும் என்று இந்தியா கூறிய யோசனைக்குப் பலத்த ஆதரவு இருப்பதாகக் கூறினர்.

### எதியோப்பிய இளவரசர்

எதியோப்பியாவின் பட்டத்து இளவரசரும் இளவரசியும் இந்தியாவில் இரண்டு வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக சென்ற சனிக்கிழமை கல்கத்தா வந்து சேர்ந்தார்கள்.

### எல்லைத் தகராறுகள்

மேற்குப் பாகிஸ்தான்—இந்திய எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் 1960 ஜனவரியில் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# தமிழ்ச் சங்கங்களின் செயல் முறைகள்

## அவற்றை ஆராயப் புலவர் குழு முடிபு

தமிழகப் புலவர் குழுவின் மூன்ருவது கூட்டம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சமீபத்திற் கூடப்பெற்றது. அக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி பற்றி நிறைவெய்திய முடிபுகளுட் சில வருமாறு:-

ஆண்டுதோறும் தைத்திங்களில் தொல்காப்பியர் முதலிய புலவர் பெருமக்கள் விழாக்களைக் கொண்டாடும்படி பொது மக்களையும் கல்லூரி, பள்ளிக்கூடத் தலைவர்களையும் இக்குழு கேட்டுக் கொள்கிறது.

தமிழகம் முழுவதுமுள்ள எல்லா நகராட்சி, ஊராட்சி மன்றங்களையும் மடங்களையும் "ஸ்ரீ"க்கு மாற்ருகத் "திரு"வையே, தமிழ்ஆட்சிமொழியாகியுள்ள இக்காலத்திற் கையாள வேண்டும்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிலர் வைத்திருக்கின்ற தமிழ்ச் சங்கங்களை எண்ணிக்கையிட்டு அவற்றின் செயல் முறைகளை ஆராய்ந்து அறிந்து அவற்றுள் தமிழ்த் தொண்டு செய்யும் தமிழ்ச் சங்கங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளிப்பது.

தமிழகக் கோயில்களின் ஆட்சியாளர்களாகவும் ஆணையாளர்களாகவும் பள்ளியிறுதித் தேர்வுடன் வித்துவான் புலவர் பட்டம் பெற்றவர்களையும் நியமிக்குமாறு அறநிலையப் பாதுகாப்புத்துறையினரைக் கேட்பது.

தமிழகக் கோயில்களின் இடத்தின் பெயர்களுக்கும், இறைவன் பெயர்களுக்கும் முன்பிருந்த தமிழ்ப் பெயர்களையே வழங்கும்படி அரசினரைக் கேட்டுக்கொள்வது.

### ஆங்கிலத்தில் பெயர்த்தல்

தமிழில் உள்ள தொகை நூல்களை ஆங்கிலம் முதலிய பிறமொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு ஆவன செய்வது.

தமிழகத்திலும், தில்லியிலும் கொண்டாடப்பெறும் விடுதலை விழாக்களில் தமிழ்ப் புலவர்கட்கும் மற்றவரையொப்பச் சிறப்புச் செய்ய வேண்டும் என

(14 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியக் கடற் படையின் விமான நாசிக் கப்பல் வடக்கு இங்கிலாந்திலுள்ள றைன் என்னும் ஆற்றுப் பாதையிலிருந்து இறங்கிச் செல்லுகின்றது. இதன் பெயர் "ஐ. என். எஸ். பெற்வா".

## பூஜ்யம் தபால்

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்
காரியதரிசி, சமஷ்டிக்கட்சி
கொழும்பு.

டாக்டரே!

தாங்கள் இலங்கை பார்லிமெண்டின் இரு சபைகளிலும் இல்லையே என்றும் உங்கள் பேச்சுத் திறமையெல்லாம்வீணாகிறதே என்றும் வெகுகாலமாக நினைத்து ஏமாற்றமடைந்தவர்களில் நானுமொருவன். என்னை விட இப்போது பிரதமர் தகநாயக்காவும் அவரது சகாக்களும் இதுபற்றி அதிக ஏமாற்றமடைந்திருக்க வேண்டும்.

செனேட் சபையில் தாங்கள் மெம்பராக இருக்கையில், வீர கர்ஜனை செய்தீர்கள். பின்னர் அச்சபை மெம்பர் பதவியை ராஜினமாச் செய்து, பார்லிமெண்ட் சபையில் கர்ஜனை செய்ய இருமுறை முயன்றீர்கள். எவ்வளவோ தியாகம் செய்தீர்கள். ஆனல் வாக்காளரின் தவறு; இரு சபைகளிலும் உங்கள் கர்ஜனையும் சேவையும் நாட்டுக்குக் கிடைக்க முடியாது போயிற்று.

வவனியா தொகுதி இடைத் தேர்தல் மூலம் நீங்கள் பார்லிமெண்டுக்கு வரலாமென்று ஒரு செய்தி அடிபட்டதைக் கேட்டு மகிழ்ந்தேன். ஆனல் முடிவில் நீங்கள் அங்கு அபேட்சகராக நிற்க மறுத்து விட்டதாக அறிய ஏமாற்றமடைந்தேன். நீங்கள் போட்டியிட வந்தால், சுந்தரலிங்கத்தாரும் போட்டியிடுவதாகக் கூறியதாகவும் கேள்விப்பட்டேன். இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை. இரு சிங்கங்களின் கர்ஜனையும் இது சமயம் இரு சபைகளிலும் இல்லாமற் போனது, இச்சபைகளுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட பெரிய நஷ்டமே.

• என்றலும் இந்த நஷ்டம் தீரும் காலம் நெருங்கி வருவதற்கான நல்ல அறிகுறிகளை இப்போது காண்கிறேன். நீங்கள் இப்போது பார்லிமெண்டில் இல்லையே என்று நான் மட்டுமல்ல அரசாங்க உதவி மந்திரி ஒருவர்கூட வாய்விட்டு பகிரங்கமாகக் கூறுகிறர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி விவாதம் நடந்தபோது நீங்கள் மட்டும், அச்சபையில் இருந்திருந்தால், பிச்சுவாங்கியிருப்பீர்களே என்று பிரதமரும் இப்போது தவியாகத் தவிப்பதாக அறிகிறேன்.

நீங்கள் மட்டும் இப்போது மனம் வைத்தால், மந்திரிபதவியும், செனேட்சபை மெம்பர் பதவியும் உங்கள் காலடியில் வந்துவிழும். ஆனல் தமிழரசுக் கட்சி காரியதரிசி பதவி இதற்குக் குறுக்கே நிற்கிறதே என்று வருந்துகிறேன்.

இப்படிக்கு
**பூஜ்யம்**

குறிப்பு:—

நீதி மந்திரிமீது கொண்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, தமிழரசுக்கட்சி ஆதரிக்குமென்று தலைவர் செல்வநாயகம், எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவித்திருக்கையில், தாங்களோ, பொலிஸ் அதிகாரி ஸிட்னி சொய்ஸாவின் அறிக்கையை நீதி மந்திரி அனுமதித்தது மிகவும் சரியென்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்திருக்கிறீர்கள். உங்கள் கட்சிக்கு யார் தலைவர்? என்று ஆங்கிலப் பத்திரிகைகள் கேலி செய்கின்றன. ஆனல் பிரதமரை அவரது உதவி மந்திரிகளே பகிரங்கமாக எதிர்க்கும் இக்காலத்தில், உங்கள் சொந்தக்கருத்தை வெளியிட உங்களுக்கு மட்டும் உரிமை கிடையாதா? இதெல்லாம் எப்படியாயினும், இப்போது, அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சி, சமஷ்டிக்கட்சி, பத்திரிகைகள் இவையெல்லாமே உங்களைப் பற்றியே பேசுகின்றன. திடீரென இவ்வித புகழ்பெற்ற தங்களுக்கு மேலும் மேலும் அதிக புகழ் கிடைக்க வாழ்த்துகிறேன்.

**பூஜ்யம்.**

# மலை நாட்டுக் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் வெள்ளி விழா

— கே. பி. ஹரன் —

சென்ற வாரம் மலைநாட்டுக்குப் போயிருந்தேன். ஹட்டனிலே பொஸ்கோஸ் கல்லூரி தமிழ்ச் சங்கங்கள் 25வது வருட வெள்ளி விழாவைக் கொண்டாடுவதாயும் அதில் கலந்து கொள்ளுமாறும் அன்பழைப்புக்கிடைத்தது.

மலைநாடு செல்லுவதென்றலே எனக்கு மிக மகிழ்ச்சி. ஓயாது அலைமோதும் கடற்கரையிலே வசிக்கும் நம்மில் பலருக்கும் மனம் அலைமோதிக் கிடப்பது அரிதாகவுள்ளது. அமைதி வேண்டுவோர் மலைக்குச் செல்லவேண்டுமென்று ஒரு சமயம் விபுலானந்த அடிகளார் எனக்குச்சொன்னர். அதிலும் மலை நாட்டுத் தமிழ்க் குழந்தைகளின் தமிழ்விழாவில் கலந்துகொள்வதுபழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலிருந்தது.

நான் சென்றபோது மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து கொடிகளாலும் தோரணங்களாலும் கல்லூரியை மிகஊக்கத்துடன் அலங்கரித்துக்கொண்டிருந்தனர். வாசலின் முன்புறம், அழகான பலவர்ண மாலைகளால்ஆகியசித்திரமாய்க் கண்ணைக்கவர்ந்தது. மலைநாட்டுத் தமிழ்மாணவர் பலர் குழுமியிருந்தனர். அவர்களது எதிர் காலத்தைப்பற்றி நம்மில் பலரும் கவலைப்படுகிறேமல்லவா? படிப்பு முடிந்ததும் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று பல மாணவரையும் விசாரித்தேன். ஒருவர் பத்திரிகை ஆசிரியராக வரப்போவதாகக் கூறினர். மற்றொருவர் அரசியலில் ஈடுபடப் போவதாகச் சொன்னர். ஒருவர் டாக்டராகப்போவதாகத் தெரிவித்தார். இப்படி மலை நாட்டுத் தமிழ் வாலிபர் ஒவ்வொருவரும் எதிர் காலத்தைப்பற்றி மிக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அவர்களை எல்லாம் மூட்டை கட்டி, இந்தியாவுக்கோ அல்லது வேறு எங்கோ அனுப்பி விடவேண்டுமென்று சில அரசியல் வாதிகள் கனவு கண்டு வருகிறர்களல்லவா? ஆனல் இவ்வாலிபர்களின் எண்ணமெல்லாம் நேர்மாறனதாகவுள்ளது. "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்" என்று அமரகவி பாரதியார் பாடியதற்கேற்ப; மலை நாட்டுத் தமிழ்ப் பிள்ளைகள், மலைநாடு தங்களுடையதே என்று உணர்ந்து அங்கிருந்து வாழ்ந்து பல துறைகளிலும் பணி செய்யவும் உறுதி பூண்டிருப்பதையும் கேட்க மிக மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையூட்டுவதாகவுமிருந்தது.

### அரசினர் பராமுகம்

தினசரி 18 மைல் நடந்து சில மலை நாட்டு மாணவர்கள் அக்கல்லூரியில் படிக்க வருகிறர்களாம். அதிகாலை 3மணிக்கே எழுந்து வருவதாயும், அவர்கள் இளைக்க இளைக்க வகுப்புக்கு வரும் காட்சி கண்ருவி என்றும், உதவி அதிபர் மிக அனுதாபத்துடன் தெரிவித்தார். மலை நாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் அரசாங்கம் மாற்றந்தாய்க் கொள்கையைக் கைக்கொண்டு, பராமுகமாக இருக்கையில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அதிபர் ஞானசகோதரர் தோமஸும் அவரது சகாக்களும், இக்கல்லூரி மூலம், மலைநாட்டுக்குச் செய்யும் வித்தியாதார கல்விப்பணி மிகவும் போற்றத்தக்கது. இது எவ்வளவோ பெருகவேண்டும்.

கல்லூரியை விஸ்தரிக்க இடமே இல்லை என்றும், ஒரு ஏக்கர் பூமிக்கு நாற்பதாயிரம் ரூபாய் கேட்பதாயும் அதிபர் ஏமாற்றத்துடன் சொன்னர். பூமி ஆண்டவன் அளித்தது. மனிதன் உண்டாக்கவில்லை.

உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே என்று கோஷம் செய்யும் விநேபாபாவே இதுவரை 50 லட்சம் ஏக்கர் நிலத்துக்குமேல் பூமி தானமாகப் பெற்று, ஏழை மக்களுக்கு இலவசமாக விநியோகித்து வருகிறர். நாலாயிரம் கிராமங்களுக்கு மேல் தானமாகக் கிடைத்துள்ளதாம். பக்கத்திலுள்ள இந்தியாவில் நடைபெறும் இந்தப் புனித இயக்கம் இலங்கைக்கும் சீக்கிரம் வந்தாலே, இங்கு மக்களுக்கு இதுபோன்ற நல்ல காரியங்களுக்கு விமோசனம் பிறக்குமென்று எண்ணினேன். விநேபாஜிஆரம்பித்த'கிராமதானம்' என்ற உழைப்பு தானத்தை, இலங்கையில் ஒரு சிங்களவர் ஆரம்பித்துள்ளதாக ஒரு நற்செய்தியைப் பார்த்தோம். பூமி தானத்தை இங்கு ஆரம்பிக்கும் புண்ணியவான் யாரோ? எப்போதோ!

* * *

இலங்கையிலுள்ள இந்திய தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு. அய்யங்கார், அவ்விழாவில் கலந்துகொள்ள கொழும்பிலிருந்து மோட்டாரில் குடும்பத்துடன் புறப்பட்டு வந்தார். வழியிலே ஒரு சம்பவம். ஒவ்வொரு மூன்று நிமிஷத்துக்கு ஒரு தடவை மோட்டார் 'இடக்கு' செய்தது. இப்படிப் பலமுறை நடந்ததும், அவரும் அவரது குடும்பத்தாரும் இறங்கி, ரஸ்தா ஓரமுள்ள ஒரு வழிபடுமிடம் சென்று மனம் குவிந்து பிரார்த்தனை செய்தார்களாம். பிறகு மோட்டாரில் ஒரு கோளாறு மில்லாமல், ஹட்டனுக்குக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்ததாகச் சொல்லி பிரார்த்தனையின் பயனையும் இறை அருளின் மகிமையையும் வியந்தார்! நம்பினேர் நலமடைவர்; இது நான்கு மறைத் தீர்ப்பல்லவா?

### நாமன்றி வேறில்லை!

மண்டபம் தாங்காமல் கூட்டம். தமிழ்த் தாய்மார்கள் ஏராளமாக வந்திருந்தனர். ஹட்டனிலுள்ள வேறு இரு பள்ளிக்கூட ஆசிரியர்களும் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்திருந்தனர். அப்பள்ளிக்கூடங்களிலெல்லாம் தமிழ் மாணவர்கள்தான் அதிகமாம். ஹட்டன் பகுதி, தமிழ்ப்பகுதியாகவே காட்சி அளிக்கிறது. பார்க்குமிடமெல்லாம் நாமன்றி வேறில்லை. நோக்க நோக்கக் களியாட்டம் என்று பாரதியார் பாடியது நினைவுக்கு வந்தது.

அந்த விழாவில் என்மனத்தைப் பெரிதும் கவர்ந்தது, மாணவர்களின் முத்தமிழ்க் கலைச் சிறப்புத்தான். பேச்சிலும், இசையிலும், நாடகத்திலும், அந்த மலைநாட்டுச்சிறுவர்கள் காட்டிய திறமை வியக்கத்தக்கது. கொழும்பில் சில பள்ளிக்கூட நாடகங்களைப் பார்த்திருக்கிறேன். அதைத் தூக்கி அடிப்பதாக இருந்தன, அன்று அங்கு நடந்த இரு நாடகங்களும்.

எது இன்பம்? என்ற தலைப்புடன் கூடிய நாடகம், தோட்டத் தொழிலாளியை, சமூகம் எவ்வளவு இழிவாக ஒதுக்குகிறதென்பதைக் குத்திக் காட்டியது. தோட்டத்தொழிலாளியின் உழைப்பை நம்பியே இங்கு நம்மில் பலரும் வாழ்கின்றேம். இலங்கையின் செல்வச் சிறப்புக்கும் அந்த உழைப்புத்தான்முதுகெலும்பு. அவ்வித தொழிலாளியை எல்லாரும் மதித்துப் போற்ற வேண்டியிருக்க, சமூகம் அவர்களை இன்னும் இழிவாக மதித்து ஒதுக்குவதாயின், அது எவ்வளவு தவறு. நல்ல சீர்திருத்த நோக்கத்துடன் கூடிய இவ்வித நாடகங்கள், மக்களிடையேயுள்ள தவறன மனப்பான்மையை மாற்றவும் தொழிலாளியின் மதிப்பை உயர்த்தவும் பெரிதும் உதவவேண்டும்.

சில மாணவர்கள் பெண்கள் போல் வேஷம் போட்டு நடனமாடினர். பார்த்தால் அசல் பெண்கள் போலவே இருந்தது. ஒதுக்கப்பட்ட மலை நாட்டுத் தமிழரிடையே கலைச் செல்வம் எவ்வளவு அதிகரித்துள்ளதென்பதையும், தக்க உற்சாகமும் சந்தர்ப்பமும் அளித்தால், அவர்கள் இந் நாட்டிலேயே முன்னணியில் நிற்பரென்பதையும் உணரலானேன்.

### தப்பெண்ணம்

தமது மாணவரில் பலர் மிகவும் சிறந்து விளங்குவதாகப் பெருமையுடன் கூறினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அதிபர் தோமஸ். வாலிபத் துறவியான தோமஸ் ஒரு விஷயத்தைச் சிறிது வருத்தத்துடன் சொன்னர். மலை நாட்டிலே யாழ்ப்பாணத் தமிழன், இந்தியத் தமிழன் என்ற வேற்றுமை சில வட்டாரங்களில் இருப்பதாயும், யாழ்ப்பாணத்தவர் மீது தப்பெண்ணம் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

அரசியலில், சில தமிழ்த் தலைவர்கள் முன்னர் தவறு செய்திருக்கலாம். தவறு யார்தான் செய்யவில்லை? அவர்கள் இப்போது தங்கள் பழைய தவறுகளுக்காகப் பெரிதும்வருந்துவதையும் அறிவேன். என்றலும், ஒரு சிலர் செய்த அரசியல் தவறுக்காக ஒரு சமூகம் அனைத்தின் மீதும் பழி கூறுவது நேர்மையாகாது. தமிழரிடையே இன்று ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருக்க வேண்டிய இச்சமயத்தில், பிளவுகளையும், வேற்றுமைக் கருத்துக்களையும் வளர்ப்பது தற்கொலை செய்து கொள்வது போலாகும்.

இக் கல்லூரி மூலம் மலை நாட்டுத் தமிழருக்கு கல்விப் பணி செய்யும் அதிபர், உப அதிபர், ஆசிரியர்மார்கள் இவர்களில் பெரும்பாலாரும் யாழ்ப்பாணத் தமிழரே. சிறப்பாக உப அதிபர் வாமதேவன் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாக பி. ஏ. பட்டம்பெற்றவர். அரசாங்கத்தில் அன்று சேர்ந்திருப்பின், பெரிய பதவி வகித்திருக்கலாம். ஆனல் அதை விட்டு, மலை நாட்டுத் தமிழ்க் குழந்தைகளுக்கு, கல்விப் பணியை அக் கல்லூரி துவங்கியது மூலம் சென்ற கால் நூற்றண்டாகச் செய்து வருகிறர்கள்.

மலை நாட்டுத் தமிழருக்குச் சில அரசியல் தவறுகள் முன்னர் ஏதும் செய்யப் பட்டிருப்பினும், இப்பொழுது பத்து லட்சம் மலை நாட்டுத் தமிழருக்குக் கல்வி முதலிய பல துறைகளிலும் சேவை செய்ய, யாழ்ப்பாணத்துப் படித்த வாலிபர்கள் ஆவல் கொண்டு முன்வருகின்றர்கள். அந்தக் கல்லூரியின் வெற்றிகரமான கல்விப் பணியும், யாழ்ப்பாண கத்தோலிக்கத் துறவிமார்கள் செய்வதாகு மென்பதையும் மறக்க முடியாது. வேற்றுமையை வளர்ப்பதற்குக் காலம் இதுவல்ல. அது தற்கொலை செய்து கொள்வதாகும். ஒற்றுமையையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் கூடுமானவரை வளர்க்க வேண்டிய சமயம் இது.

மலை நாட்டுத் தொழிலாளர் வழித்தோன்றல்களில் சில வாலிபர்கள் பி. டி. பட்டம் பெற்று அங்கு கல்வித்தொண்டாற்றுவதைப் பார்க்க மிக மகிழ்ச்சி அளித்தது. அவர்கள் பல சங்கடங்களுக்கிடையே மெதுவாகத் தலைதூக்கி வருகிறர்கள். படித்த வாலிபர்களில் பலர் வேலையின்றி, பொறுமை இழந்து துடிதுடிப்பதையும், அவர்கள் மனத்தில் எரிமலை குமுறுவதையும் கண்டேன், கேட்டேன். "இளைஞன்குரல்" என்ற பத்திரிகையே இதற்கு அத்தாட்சி. அந்த உணர்ச்சிகளெல்லாம், பயனற்ற ஆத்திரமாக முடியாமல், ஆக்க வழிகளில் திரும்ப வேண்டும்.

ஐந்துமணி நேரம் இத் தமிழ்த் திருவிழா நடந்தது என்றலும் சற்றும் சலிப்பே தட்டவில்லை. எல்லாரும் மண்டபத்திலிருந்து இன்புற்றர்கள்.

### திக்கற்ற அனுதை

விழா முடிந்து மகிழ்ச்சியுடன் வெளியே செல்லுகையில் மழை பிசுபிசுத்தது. தெருவில் ஒரு கிழவனர், சாக்கைப் போர்த்துக் கொண்டு நடுக்கமும் தள்ளாட்டமுமாக ஏதோ முணு முணுத்துக் கொண்டு, கீழே பார்த்த வண்ணம் சென்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

### மலைநாட்டுத் தமிழருக்குச் சேவை செய்யும்

திருக்கோணமலையில் நிறுவப் படவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் முக்கியமாக மலைநாட்டுத் தமிழினத்திற்கே சேவை செய்யும் என, அட்டன் புனித யோவான் பொஸ்கோஸ் கல்லூரியின் 25ஆவது தமிழ்க்கழக ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், பேராசிரியர் சின்னத்தம்பி கூறினர்.

கல்லூரி அதிபர் வண. ஏ. எம். தோமஸ் தமது வரவேற்புரையில் மலைநாட்டு மாணவர்கள் பல இன்னல்களிடையே கல்வி பயில வேண்டி இருக்கின்றதெனவும் இவர்களிடையே பல சிறந்த மாணவர்கள் தோன்றினும், போதிய வாய்ப்புஇல்லாதகாரணத்தால் அவர்கள் முன்னேறமுடிவதில்லை எனக் கூறினர்.

பேராசிரியர் சின்னத்தம்பி தொடர்ந்து பேசியதாவது: தமிழ்ப் பல்கலைக்கழகம் மாணவரிடையே பாகுபாடின்றி உழைத்துவரும். பொதுவாகத் தமிழ்மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதுடன் தமிழ் மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றையும் அளித்து வரும். கல்வித்துறையில் நற்பணியாற்றிவரும் கத்தோலிக்கமத குருமார் தொடர்ந்து அதனைச் செய்துவரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வெகு சிறப்பாக நடைபெற்ற இவ் விழாவிற் பெருந்திரளான தமிழ்மக்கள் பங்குகொண்டனர். பேச்சு, பாட்டுப் போட்டிகளிலே பங்குபற்றிய மாணவர்களின் திறமையைச் சபையோர் மெச்சினர்.

இந்தியத் தூதுவர் காரியாலயக் காரியதரிசி திரு. ஐயங்கார், "ஆதியும் அந்தமும்" என்ற பொருள்பற்றியும், திரு. கே. பி. ஹரன் "மாணவர் எதிர்காலம்" என்பதுபற்றியும் பேசினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிஆசிரியர் திரு. சிவராமலிங்கம், "இளங்கோவின் இதயம்" என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

இருநாடகங்களில் திறமையாக நடித்தவர்களுக்கும், நடனமாடியவருக்கும், பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு கார்த்திகை மீ 5 உ (21-11-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## இலங்கை அரசியல் அலங்கோலம்

ஆசியாவிலேயே அரசியற் கொந்தளிப்பு அற்ற ஒரு நாடாக இலங்கை இருந்து வந்தது. ஆனால் என்று திரு. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டாரோ அன்றிலிருந்தே நாட்டின் அரசியல் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு வருகின்றது. அரசாங்கத்தின் மீது மக்கள் எப்பொழுதோ நம்பிக்கையை இழந்து விட்டனர். அத்துடன் அரசியல் தலைவர்களிடையே வளர்ந்து வரும் பிளவுகளும் போட்டி பொறாமையும் நாட்டை அல்லோல கல்லோலப்படுத்தி வருகின்றன. சந்தர்ப்ப வசத்தினால் பிரதம பீடத்துக்கு உயர்த்தப்பட்ட திரு. விஜயானந்த தகநாயக்கா ஆளும் கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்று படுத்தி வைப்பதற்குப் பிரம்மப் பிரயத்தனங்கள் செய்தும ஒன்றும் கைகூடுவதாகத் தெரியவில்லை.

ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன எம்.ஈ.பி. அரசாங்கத்தை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்குப் பலவகையிலும் காலாக இருந்து வந்தார் என்பதை மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்ட ஒருவரே இன்று பண்டார நாயக்காவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதிக் கைதியாக்கப்பட்டு விட்டார் என்றால் இலங்கையின் அரசியல் 'குட்டை' எவ்வளவுக்கு நாற்றமெடுக்கத் தொடங்கி விட்டதென்பதை ஊகித்துக்கொள்ளலாம். அது மாத்திரமன்றி மந்திரி சபையிற் பொறுப்பு வாய்ந்த பதவியை வகிக்கும் நிதி மந்திரி ஸ்டான்லி டி' சொய்சாவின் ஒரு சகோதரரும் சந்தேகத்துக்கு உள்ளாகியிருப்பதும், நிதிமந்திரி திடீரெனப் பரதேசம் பறந்ததும், இன்றுவரை அவர் இங்கு திரும்பாதிருப்பதும், அவருடைய மூத்த சகோதரர் டிக்கி சொய்சா இப்பொழுது கைதுசெய்யப் பட்டிருப்பதும் நாட்டின் அரசியல் அலங்கோலத்தை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

இதற்கிடையில் கவர்னர்ஜெனரல் வேறு தலைவர்களை அழைத்து அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பாரோ என்ற வதந்தியும் நிலவுகின்றது. இது சம்பந்தமாக டாக்டர் என். எம. பெரேரா, திரு. டல்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன. இந்நிலையில் கவர்னர் ஜெனரல் செய்யக்கூடியது ஒன்று உண்டு. அதாவது பண்டாரநாயக்காவின் கொலை வழக்கு விசாரணை முடியும் வரையிலாவது ஆட்சிப்பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்ட வழிவகைகளைக் கையாளவேண்டும். இல்லையேல் சனப்பிரதிநிதிகள் சபையில் இன்று அதிகசெல்வாக்கைப் பெற்றுள்ள தலைவர்களை அழைத்து அவர்களின் யோசனைப் பிரகாரம் ஒரு கூட்டுமந்திரி சபையை அமைப்பதற்கு முயலவேண்டும். இதன் பேறாக சென்ற மூன்றரை வருடகாலம் நாட்டில் ஏற்பட்டு வந்த இன மத பாகுபாடுகள் ஓரளவுக்காவது நீங்கி நாட்டில் மீண்டும் அமைதியும் சுபிட்சமும் நிலவுவதற்கான சூழ்நிலை ஏற்படுமென நாம் எதிர்பார்க்கலாமா?

---

## 'கவர்ச்சி'மிக்க முயற்சி

யாழ்ப்பாணக் குடா நாட்டையும்அதனைச் சுற்றிலுமுள்ள சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இடங்களையும், மற்றும் சிறப்புமிக்க ஸ்தலங்களையும் தரிசிக்க விரும்பும் உல்லாசப்பிரயாணிகளுக்கு அவை பற்றிய சகல விபரங்களையும் கூறும் 'வழிகாட்டி' நூல் இதுவரை செம்மையான முறையில் வெளியிடப்படவில்லை.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் 1951ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நான்காம் தமிழ் விழா நடைபெற்றது. அவ்விழாவுக்குத் தென் தமிழ் நாட்டிலிருந்தும் ஈழ நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகளும் பார்வையாளரும் வந்திருந்தனர். அவர்களுக்கு உபயோகப்படும் முறையில், யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றையும் உல்லாசப் பிரயாணிகள் தரிசிக்க வேண்டிய மிக முக்கிய இடங்களைப் பற்றியும் புகைப்படங்களுடன் இரத்தினச் சுருக்கமான ஓர் அழகியவெளியீட்டை நான்காம் தமிழ்விழாநிர்வாகக் குழுவினர் வெளியிட்டு உதவினர். அச்சிறிய நூலைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மிகுந்த ஆவல் உள்ளவர்களாக இருந்தனர். இதனை எதற்காகக் குறிப்பிடுகின்றோமெனின், யாழ்ப்பாணத்தைப் பற்றிய ஒரு விபரமான வழிகாட்டிநூல் மிக அவசியமென்பதை எடுத்துக் காட்டுவதற்கே.

வெளி நாட்டிலுள்ளவர்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்கும் நேரிலே வந்து தரிசிப்பதற்கும் அவர்களுக்கு நம் நாடு போதிய கவர்ச்சியளிக்கவேண்டும். இதற்கு வழிகாட்டி நூல்கள் பேருதவியாக இருப்பது உண்மையே. எனினும் உல்லாசப் பிரயாணிகள் சௌகரியமாகத் தங்கிநிற்பதற்குப் போதிய வசதிகளுடன் கூடிய மத்திய நிலையம் மிக அவசியமானது.

யாழ்ப்பாணத்தில் உணவு வசதியோடு கூடிய விடுதிச் சாலைகள் மிகக் குறைவு. நல்ல முறையில் ஒன்று இரண்டு இருப்பினும் அவற்றை ஆதரிப்பவர்கள்மிகக் குறைவான படியால் அவ் விடுதிச் சாலைகள் விரும்பத் தக்க முறையிற் செவ்வனே நடைபெறுவதில்லை. உல்லாசப் பிரயாணிகள் யாழ்ப்பாணத்தையும் தரிசிக்க வேண்டுமென விரும்பும் மேயரின் எண்ணம் வழிகாட்டி நூல் ஒன்றினை வெளியிடுவதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. அவர்கள் தங்குவதற்கேற்ற வசதிகள் அனைத்தும் கணிசமான முறையிற் கிடைப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்படல் வேண்டும்.

புகைப்படங்களுடன் கூடிய கவர்ச்சிகரமான வழி காட்டி நூல் மட்டும் உல்லாசப் பிரயாணிகளுக்குத் திருப்தியளிக்கப் போவதில்லை. நகரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் சுத்தமாகவும் அழகாகவும் மிளிர வேண்டும். ஆர்வம் மிக்க மேயர் இவற்றையும் கருத்திற் கொண்டு ஆவன செய்வாராயின் யாழ்ப்பாணம் உல்லாசப் பிரயாணிகளின் சுவர்க்க பூமியாக ஏன் மாறமாட்டாது?

---

## மூன்று மொழிகள்

அனுராதபுரத்தில் நடைபெற்ற கிராம சங்கத் தலைவர்கள் கூட்டத்தில், நிர்வாக மொழி விஷயமாக ஒரு தமிழ்த் தலைவர் முக்கிய கேள்வி ஒன்று கேட்டார். "நிர்வாகமெல்லாம் சிங்களத்திலேயே நடைபெற வேண்டுமாயின் எங்கள் சங்கத்தின் நிலை என்ன?" என்று அவர் கேட்டதற்கு ஸ்தலஸ்தாபன மந்திரி மெதிவாக்க "எல்லாவற்றையும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்றிலும் நடாத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாகும்" என்று பகிரங்கமாகக் கூறியதாகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இது உண்மையாயின் பெரிதும் வரவேற்கத் தக்கதுடன், மொழிப்பிரச்சினை மண்டையிடிகளும் தீர்ந்து, நாட்டில் வகுப்பு ஒற்றுமையும் பலப்பட வழி பிறக்கும்.

மொழி விஷயமாக ஏற்கனவே பெரிய தவறு செய்யப்பட்டுவிட்டது. சென்ற மூன்று வருட அனுபவத்தில் இதை உணர்ந்தபின், இதைத் திருத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதை வெளியிட்டால், அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற முடியாது போகுமே என்று, அரசாங்கக் கட்சியினர் கருதக்கூடும். ஆனால் மொழி வெறியால் எவ்வளவு கேடு நாட்டுக்கு ஏர்பட்டுள்ளதென்பதை பொதுமக்கள் உணர்ந்து வருகின்றனர். தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிதான், நாட்டுக்கு இந்தக் கதி ஏற்பட்டதற்குக் காரணமென்று சிங்களவரில் பலரும் உணர்ந்து வாய்விட்டுக் கூறுவதாக அறிகிறோம். ஆகவே மொழிவெறிக் கூச்சல்கள் இனி தேர்தலிலும் அதிகம் பயன்பட முடியாது.

பார்லிமெண்ட் சபையிலும், பிரதமர் உட்படப் பல அரசாங்கக் கட்சி அங்கத்தினரும், தனிச்சிங்களத்திலின்றி, ஆங்கிலத்திலேயே பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகவே, சமீபகால அனுபவங்கள் காரணமாக மொழிவிஷயத்தில், அரசாங்கத்தின் மனம் தாராளமான முறையில் மாறியிருப்பின், இம் மாறுதலை நாட்டின் நன்மையை முன்னிட்டு, சட்டபூர்வமாகச் செய்து, இனி நாட்டில் மொழிவெறியே கிளம்பாமல் தடுக்கலாம். இவ் விஷயத்தில் எதிர்க்கட்சியில் பெரும்பாலோரின் ஆதரவும் ஒத்துழைப்பும் அரசாங்கத்துக்குக் கிடைக்கும்.

---

## சங்கப் போட்டிக்கு மற்றொருவர் பலி

தோட்டத் தொழிலாளர் சங்கங்களின் போட்டிக்கு மற்றொரு தொழிலாளி பலியாகியிருப்பதாக இவ் வாரம் ஒரு துக்ககரமான செய்தி கிடைத்துள்ளது. தெகியோவிடாவைச் சேர்ந்த 36 வயதுள்ள சுப்பிரமணியமென்பவர் போட்டிச் சங்கச் சச்சரவு, காரணமாகப்படுகாயமடைந்து கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் மாண்டிருக்கிறார். இவ் வழக்கு நீதிமன்ற விசாரிணைக்கு வருமாதலால், அது குறித்து நாம் எதுவும் கூறுவது முறையாகாது.

ஆனால் இவ்வித படுபாதக சம்பவங்கள் நடப்பது இது முதல் தடவையல்ல. இதற்கு உண்மையில் யார் பொறுப்பு? போட்டி யூனியன்களிடையே ஏன் இவ்வித சச்சரவுகள் ஏற்படுகின்றன? இதை எப்படித் தடுப்பது? இவையே இன்று முக்கியமாக, தொழிலாளரின் நன்மையில் அக்கறை கொண்டவர்கள் கவனிக்க வேண்டிய கேள்விகள்.

பிரஜா உரிமையும், வாக்குரிமையும் இழந்து நாடற்றவர்களாகத் தோட்டங்களில் இத் தமிழ்த் தொழிலாளர் ஏற்கனவே தவிக்கின்றார்கள். போட்டிச் சங்கங்கள், இவர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, பலவீனப் படுத்துவதாயும், போட்டிச் சங்கங்கள் ஒன்றுபட வேண்டியது அவசியமென்றும், நாம் இப் பந்திகளில் பல முறையும் எழுதியுள்ளோம். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்தான் என்ற சட்டமிருப்பின்' இவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படாததுடன், தொழிலாளர்களது உரிமைப் போராட்டமும் வெற்றி பெற வழி பிறக்கும்.

இதற்கான சட்டம் செய்யப்படும் வரை, தொழிலாளரின் நன்மையிலே உண்மையில் அக்கறையுள்ள தலைவர்கள், மாநாடு கூடிப் பேசி, இவ்வித சச்சரவுகள் ஏற்படாமல் தடுக்க வழி செய்ய வேண்டும். போட்டிச் சங்கங்கள் இருக்கும் வரை, ஆள் பிடிக்கும் போட்டிகள் வளர்ந்து, தொழிலாளர் நிம்மதியாக வாழ முடியாமல் போகிறது. இதற்கான பெரும் பொறுப்பும் தலைவர்களையே சாரும். அவர்கள் இனியாவது முன் வந்து, இவ்வித போட்டிகளையும், சச்சரவுகளையும் தவிர்க்க முயல வேண்டும். அன்றேல் அரசியல் விழிப்படைந்து வரும் தொழிலாளரின் நம்பிக்கையை அவர்கள் பெரிதும் இழந்து விடுவர்.

---

## படித்த வாலிபருக்கு நேருஜி போதனை

உஜ்ஜைனியிலுள்ள விக்கிரம பல்கலைக் கழக புதிய பட்டதாரி மாணவர்களுக்குப் பாரத நாட்டுப் பிரதமர் நேரு கூறியுள்ள நல்லதொரு யோசனை இலங்கையிலுள்ள படித்த மாணவர்களுக்கும் பயன்படும். மாணவருக்கு மன ஒழுக்கம் வேண்டுமென்பதை அவர் வற்புறுத்திவிட்டு, "அரசாங்க உத்தியோகங்களுக்காகப் பட்டதாரிகள் தவிக்கவேண்டாம். வயலுக்குச் சென்று மண்வெட்டி பிடித்து வேலை செய்யுங்கள். கைராட்டையில் நூல் நூற்றுங்கள். அதில் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது நான்கு பணம் கிடைத்தாலும் கூட, மனமும், உடலும் சோம்பியிராமல், சுறுசுறுப்பாக இருக்கும்" எனக் கூறினார்.

பொதுவாகப் படித்த மாணவர்களில் பலரும் உடல் உழைப்பான வேலை செய்வது மதிப்புக் குறைவெனக் கருதி, வேலையற்றவர்களாகவேனும் இருக்கின்றனர். வாலிப வயதில் வேலையின்றிச் சோம்பி இருப்பதால், அது வாழ்க்கையையே பாழ்படுத்தி விடுகின்றது.

பொழுதைப் பொன்னாக்க வேண்டுமென்பது ஆன்றோர் வாக்கு. அதற்கு வழி தெரியாவிட்டால், சோம்பேறியாகக் காலத்தைக் கழித்து தம் வாழ்வையே குட்டிச்சுவராக்கிவிடாமல், நூல் நூற்பது போன்ற ஏதாவது பயனுள்ள ஒருவேலையில் வாலிபர்கள் ஈடுபடுவது, அவர்களின் உள்ளமும், உடலும் உறுதிபெறச் செய்ய உதவும். சோம்பேறியாக வேலையற்றிருக்கும் வாலிபர்கள் தங்களுக்கு மட்டுமன்றி, சமூகத்துக்குமே தீங்காவார்கள்.

---

## பளுவு நீங்கியது!

சில நாட்களுக்கு முன்பாக, ஓர் அரசியல் தலைவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். தமிழுக்கும் சிங்களத்தைப்போல் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்றும், மலைநாட்டுத் தமிழருக்கெல்லாம் வாக்குரிமை பிரஜாஉரிமை வழங்க வேண்டுமென்றும் துணிச்சலுடன் பேசுகிறவர் அவர். அதனால் அவர் மீது எனக்கு அதிக மதிப்பும் நம்பிக்கையும் உண்டு. பகல் 2 மணிக்கு அவர் வருமாறு நேரம் குறிப்பிட்டிருந்தார். குறித்த நேரத்தில் அவர் வீட்டுக்குச் சென்றேன்.

* * *

முன்புறத்தில் தனிச் சிங்களத்தில் எழுதிய ஓர் அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. எனக்கு அது ஒன்றும் விளங்கவில்லை.

சிங்களம் தெரியாதது எனது குறைதான் என்றாலும் மொழியிலே சம அந்தஸ்து வேண்டுமென்று கர்ஜனை செய்த அந்தத் தலைவர் வீட்டில் தனிச் சிங்கள விளம்பரம் இருப்பதைக் கண்டதும் எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

தமது வீட்டுக்கு வந்து தம்மைக் காண்பவரனைவரும் சிங்களம் தெரிந்திருக்குமென்று அவர் நினைத்திருக்கிறாரா? சிங்களம் தெரியாதவர் அவர் வீட்டுக்குச் செல்வதில்லையா? மொழியில் சம அந்தஸ்து வேண்டுமென்று பொது மேடைகளில் கர்ச்சித்த அவர், தமது வீட்டில், தமிழுக்கு நியாயமான இடமாவது ஒதுக்க வேண்டாமா? அல்லது இப்போது மொழிவிஷயமாகத் தமது மனத்தை மாற்றிக் கொண்டுவிட்டாரா? என்று என் மனத்தில் ஏதேதோ எண்ணங்களெல்லாம் ஓடிக்கொண்டிருந்தன.

* * *

முன்புறம் இருந்த ஆசனத்தில் நண்பருடன் இருந்தேன். சிறிதுநேரம்கழிந்து உள்ளிருந்து யாரோ ஒருவர் வந்தார். தலைவர் தூங்குவதாயும் சற்றே இருக்கும்படி கூறியதாகவும் தெரிவித்தார். மணி மூன்றாயிற்று! திரும்பியிருப்பேன். என்றாலும் மனிதனுக்கு என்ன அசதியோ என்று நினைத்து, பொறுமையுடன் காத்திருந்தேன்.

பிறகு அவர் வந்தார். வந்தவர், தாமதத்துக்கு வருத்தம் தெரிவிப்பார் என்று எதிர் பார்த்தேன். ஒரு வார்த்தையும் கூறவில்லை. முகத்திலும் அன்புக்கான அறிகுறி சற்றுமில்லை. சாதாரண மனிதப் பண்பு கூட இல்லாத இவரிடத்தில் ஏன் வந்தாய்? என்று என் மனம் ஒவ்வொரு விநாடியும் கேட்டது.

* * *

பிச்சைக்காகவோ, தயவு பெறவோ நான் செல்லவில்லை. அரசியல்நிலைபற்றி அவர் கருத்தைக் கேட்க அவர் குறிப்பிட்ட நேரத்துக்குச் சென்றேன்.

எனது துரதிஷ்டமோ அல்லது அதுதான் அவரது சுபாவமோ? இது எப்படியாயினும், கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதிலைக் குறித்துக் கொண்டு திரும்பியும் பாராமல் என் கடமையை முடித்து வந்துவிட்டேன். இதை நான் எழுதியபின்பே, என் மனப் பளுவும் சற்றே நீங்கியது.

— ஐயாறன்

# "கட்சி வேற்றுமைகளை விட்டு தமிழர் ஒன்றுபட வேண்டும்"

—திரு. சோமசுந்தரம்

"தமிழர் இன்று பல கட்சிகளாகப் பிரிந்து பலவீனமடையக் கூடாது. தமிழர் அனைவரும் ஒன்றுபட்டுமுதலில் தங்களதும் பொருளாதார நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கிடையே சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய இயக்கங்களை ஆரம்பித்தால் தமிழ்ப் பகுதிகளுக்குப் புறம்பாக வசிக்கும், மலைநாட்டுத் தமிழர் உள்ளிட்டு லட்சக்கணக்கான தமிழரின் நிலை ஆபத்தாகும். அவர்கள் நிலை பிணையிலுள்ளது போலானது.

"வெளியில் மாதம் 500ரூபாய் சம்பாதிக்கும் ஒருவருக்கு தமிழ்ப் பகுதியில் 100 ரூபாய் வருமானம் கிடைக்கத் தக்கதாக வேனும், நிர்மாண திட்டங்களை இந்தியாவில் காந்தி அடிகள் ஆரம்பித்ததுபோல், தயாரித்து பலப்படுத்த வேண்டும். இதுதான் ஈழத்திலுள்ள தமிழ்த் தலைவர்கள் இன்று கவனிக்க வேண்டிய முதல் விஷயம். பொருளாதாரத்துறையில் தமிழர் பலமடைந்து தங்களிடையே ஐக்கியப்பட்டிருந்தால்தான், மற்ற சமூகத்தவர்கள் தமிழரை மதிப்பர். அவர்களது நியாயமான உரிமைகளும் கிடைக்க முடியும். பிறரது அரசியல் பலவீனத்தின் மூலம் தமிழருக்கு நீடித்த நன்மை கிடைப்பது அரிது. தமிழர் தங்களுக்கிடையே கட்சி வேற்றுமைகளை விட்டு ஒன்றுபட்டு, ஆக்க திட்டம் தயாரித்து, தங்களைப்பலப் படுத்திக் கொண்டால்தான் அவர்களுக்கு விமோசனம் உண்டு" என்று 'தமிழ் யூனியன்' தலைவரும், 'சட்ட மன்ற' உப தலைவருமான புரக்டர் திரு.எஸ். சோமசுந்தரம் "ஈழநாடு" பிரதிநிதியிடம் தெரிவித்தார். அவர் மகாத்மா காந்தி, நேருஜி முதலிய இந்தியத் தலைவர்களின் நண்பராவார்.

# தகநாயக்கா ஆட்சிக்கு அந்தியகாலம்

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு, மந்திரிசபை அனைத்தும் பொறுப்பாக வேண்டும். அப்படிப் பார்த்தால், நிதி மந்திரியின்மீது கொண்டுவரப்படும் பிரேரணை, மந்திரிசபை அனைத்தின்மீதும்கொண்டுவரப் படும் பிரேரணையே. அது நிறைவேறினால், மந்திரி சபையே ராஜினமாச் செய்ய வேண்டியதே ஜனநாயக தர்மம். ஆனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறினாலும், குறிப்பிட்ட மந்திரி மட்டுமே விலகவேண்டுமேயன்றி மந்திரிசபையைக் கலைக்கத் தேவையில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். கூறுகின்றார்.

• இப்போது ஒரு மந்திரி விலகுவதாயின், பின்னர் வேறு மந்திரிகள்மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படலாம். இதையெல்லாம் பிரதமர் தவிர்த்து, இந்த மந்திரிசபை ஆட்சியை எப்படிக் கொண்டு செலுத்தப்போகிறார்? அவர் நிலைமை இப்போது மிகவும் கடினமானது. இந்தக் கண்டங்களுக்கெல்லாம் தப்பி, அவர் ஆட்சியை நீடிக்கமுடியுமாயின் அது பெரிதும் ஆச்சரியப்படத் தக்கதே.

ஆனால் ஒரு விஷயம் அவருக்குசாதகமாகவுள்ளது. பார்லிமெண்டைக் கலைத்துவிடுவதாக அவர் பல தடவையும் எச்சரித்துள்ளார். இதற்கு சபையிலே பெரும்பாலோர் தயாரில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினாலும் சபையைக் கலைக்கவேண்டியதில்லை என்றும், வேறொருவரைக் கொண்டு புதிய மந்திரி சபையை அமைக்கும்படி கவர்னர் ஜெனரல் செய்யலாமென்றும் டாக்டர் என். எம். கூறுகிறார். இதற்கு பிரதமர் தகநாயக்கா இடமளிப்பாரா என்பது சந்தேகம்.

அப்படிப் புதிய ஒருவர் மந்திரிசபை அமைத்தாலும், அதற்கும் எதிர்ப்புகள் பலமாக இருக்கலாம். சர்வகட்சி கூட்டு மந்திரி சபையே சிறந்தது. ஆனால் அதற்கு சாதகமான நிலை இன்று காணோம்.

நாட்டில் பொதுவாக அரசியல் நிலை, பண்டாரநாயக்கா கொலைக்குப்பின் பெரிதும் குழம்பியுள்ளது. அரசாங்கத்தின்மீது பொது மக்களின் நம்பிக்கை மிகவும் குறைந்துள்ளது.

அடுத்தபடி என்ன? டக்டர் என். எம். பெரேராவை கவனர்-ஜெனரல், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அழைத்து அரசாங்கம் அமைக்கும்படி கேட்பாரா? அல்லது, டக்டர் என். எம். பெரேராவுடன் வேறு தலைவர்களையும் கூடவே அழைத்து, ஒரு சர்வ கட்சி அரசாங்கம் அமைக்க எத்தனிப்பாரா? அல்லது, தாமே ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடாத்துவரா! என்ற கேள்விகளே இன்று நாட்டு மக்களிடையே எழுந்துள்ளன.

# தமிழரும் பல்கலைக் கழகமும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக் கழகமாவது முதலில் ஆரம்பிக்கவேண்டும். தமிழரின் எதிர்கால நலனுக்கு இது அவசியம். யாழ்ப்பாணத்தில், மருத்துவம் விவசாயம், கலாசாரம் முதலிய பகுதிகளையும், திருக்கோணமலையில் பொறியியல் சாஸ்திரங்களையும் கற்பிக்க ஒழுங்குசெய்யலாம். புகழ் பெற்ற துறைமுகமுள்ள திருக்கோணமலையில் கடல் என்ஜினீயரிங் பயிற்சியை அளிக்கப் பல வசதிகளும் உண்டு. தமிழர் உலகமெலாம் பரவிப் பணிசெய்ய இந்த இடம் மிக வாய்ப்பாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தைக் காலம் கடத்தாமல் பயன்படுத்தி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பார்லிமெண்ட் சட்டமூலம் அங்கீகரிக்கச் செய்துவிட்டால், பின்னர் அதைப் படிப்படியாக அபிவிருத்தி செய்யலாம். மலைநாட்டுத் தமிழர் உள்ளிட்டு இலங்கையிலுள்ள எல்லாத் தமிழர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் இந்த நன்முயற்சிக்குக் கிடைக்குமாயின், இந்தப் பல்கலைக்கழகம் வெகு சீக்கிரத்தில் முன்னேறிச் செழித்தோங்கி, நற்பணியாற்றும்'' என்றார் திரு. திருச்செல்வம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தனியாக ஆரம்பித்தால், இலங்கைப் பல்கலைக்கழகம் சிங்களமயமாகி தமிழருக்கு அங்கு இடம் இல்லாது போய்விடுமா? என்றகவலை சில வட்டாரங்களில் இருக்கின்றது. அவ்விதம் ஆகமுடியாதென்றும் தீவிலுள்ள எல்லாச் சமூகத்தவருக்கும் அது பொதுவானதாக இருந்துவர வேண்டுமென்றும் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தார் தெரிவித்தனர்.

# இடைத் தேர்தல்களில் மூன்று விதவைகள்

அத்தனகல்லை தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக முன்வந்துள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குப் போட்டியாக, காலஞ்சென்ற டேவிட் ஸில்வாவின் மனைவியார் போட்டியிடுகின்றார். இருவரும் சமீப இலங்கை அரசியல் சதுரங்கத்தில் கணவன்மார்களை இழந்த விதவைகளாவர்.

ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு மூன்று குழந்தைகள். ஸ்ரீமதி ஸில்வாவுக்கு ஏழு குழந்தைகள். இவர் பேருவெலையைச் சேர்ந்தவர். சென்ற வகுப்புக் கலவர அவசரகாலத்தில், இவரது கணவனுர் பொலிஸாரால்கொல்லப்பட்டதாகப் பார்லிமெண்ட் சபையில் புகார் கூறப்பட்டது. புருஷனின் உடல் என்ன ஆயிற்றென்பதும் அவருக்கு இதுவரை தெரியாதாம்.

தேர்தலில் அவருக்கு 'சான்ஸ்' எப்படி என்று விசாரித்ததில், சென்ற அவசரகால ஆட்சியில் நடந்த கொடுமைகள் அம்பலமாக, இத்தேர்தல் உதவுமென்றும், அவருக்கும் 'சான்ஸ்' இருப்பதாயும் சமாஜவாதித் தலைவரொருவர் தெரிவித்தார். இந்த இடைத்தேர்தல் போட்டி ருசிகரமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோப்பாயில் ஸ்ரீமதி வன்னியசிங்கத்தின் மனைவியாருடன் மற்றும் இருவர் போட்டியிடுகிறார்கள். அவசரகாலம் நீடிக்கிறதென்றாலும், இடைத் தேர்தல் பிரசாரங்களும் பொதுக் கூட்டங்களும் தீவிரமாக நடைபெறுகின்றன.

இலங்கை அரசியலில், பார்லிமெண்ட் தேர்தலிலே மூன்று விதவைகள் போட்டியிடமுன் வந்தது இதுவே முதல் தடவையாகும்.

# மாநகரசபையின் திட்டங்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீக்கிரத்தில் சரித்திராசிரியர்கள், வித்தியா பிரமுகர்கள் மற்றும் அறிவாளிகள் கொண்ட ஒரு மாநாட்டைத் தாம் கூட்ட விரும்புவதாகவும், இப்புது அபிவிருத்தித் திட்டங்களுக்கு காரண கர்த்தாவாகிய யாழ்ப்பாணத்தின் மேயர் திரு. தங்கராசா துரையப்பா தெரிவித்தார்.

## புதிய வாடிவீடு

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்பவர்கள் தங்கியிருப்பதற்கு நவீன வசதிகளுடன் கூடிய ஒரு வாடிவீடு இல்லாதது பலகாலமாகப்பெரும்குறையாயிருந்தது. இக்குறையும் விரைவில் நிவர்த்தியாகுமென எதிர்பார்க்கலாம். முன்பெல்லாம்ஸ்தலஸ்தாபனங்கள் வாடிவீடுகளைத் தாபரிக்க அனுமதி இருந்ததேயன்றி அவற்றைக் கட்டும் உரிமை அவற்றிற்கில்லை அரசாங்கம் இப்பொழுது குறித்த சட்டத்தைத்திருத்தி ஸ்தலஸ்தாபனங்களும் வாடி வீடுகளைக் கட்டலாமென்று அநுமதி கொடுத்திருக்கிறது. இதைப் பயன்படுத்தி மாநகரசபை, பண்ணையில் யாழ்ப்பாணக் கடலேரியைநோக்கினாற்போல ஒரு புதிய வாடிவீட்டை எழுப்பத் திட்டமிட்டிருக்கிறது. இதற்காக 2 லட்சம்ரூபாய் கடன் தருவதாக மத்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இப் புதிய வாடிவீடு சகல வசதிகளையும் கொண்டதாயிருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமிராது. பிற நாட்டு பிரயாணிகள் களைதீர நின்று தங்குவதற்கு ஏற்ற சுவாத்தியமான இடத்தில் இது கட்டப்படுவது பலருக்கும் மகிழ்ச்சியைத் தரும்.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

யாழ்ப்பாணம் மாநகரசபையானது காணி வரி வசூலிப்பதில் கையாண்ட புதுமுறை பொது மக்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்து வந்தது. காணி வரி இறுப்போர் நகரசபைக்குச் சென்று பணத்தைக் கட்டவேண்டுமென்ற சட்டத்தைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். இச்சட்டம் மக்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கின்ற தென்பதைக் கண்ணுற்ற நகரபிதா ஒருவர், காணி வரி வசூலிப்பதில்பழைய முறையே ஏற்றதென்பதை உணர்ந்தார். அதாவது, முன்னர் இருந்ததுபோல வரி வசூலிப்பவர் மூலம் வரிப்பணத்தை அறவிடுவதே விரும்பத்தக்கதென்பதை மாநகரசபைக்கு அவர் எடுத்துக் காட்டினார். இது விஷயத்தில் மாநகரசபை அங்கத்தினரிடையே கருத்து வேற்றுமை எழுந்ததாகத் தெரியவில்லை. எனவே, முன்போலவே வரி வசூலிப்பவர் மூலம் வரிப்பணத்தை அறவிடுவதென மாநகரசபை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு வரியிறுப்போருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்திருப்பதுடன் அவர்களின் தலையிடியையும் போக்கியிருக்கின்றதென்றே கூற வேண்டும். அதே வேளையில் வரி வசூலிப்பவர்களுக்கு வேலையையுங் காட்டி வரி வசூலிக்கும் தலையிடியையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றது!

## படலையும் சங்கடமும்

இப்பழைய முறை வேறுமொரு வகையில் சாதாரண மக்களுக்கு சாதகமாக இருந்ததென்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். வரி வசூலிப்போர் தவணை தவறாமல் அவர்களுடைய படலைகளைத் திறக்க வேண்டிய சங்கடத்துக்குள்ளாகியிருப்பதால், வரியிறுப்போரும் பின் போடாமற் செலவோடு செலவாக வரிப் பணத்தையும் எடுத்து விசிக்கி வந்தனர். இது வரியிறுப்போரின் சுமையை எவ்வளவோ குறைத்து வந்தது.

குறித்த தவணைக்குள் பணஞ் செலுத்தத் தவறினால் வீட்டிலுள்ள சட்டி பெட்டி, உரல் உலக்கை, அம்மி குழவி போன்ற தட்டுமுட்டுச் சாமான்களை வரி வசூலிக்கும் 'புலி'கள் பறிமுதல் செய்வதுண்டு. அப்படியிருந்தும் இது அவர்களுக்கு எவ்வித இக்கட்டையும் கொடுக்கவில்லை. வரிப் பணத்தைக் கட்டிப் பறி முதல் செய்த பொருள்களை மீண்டும் வீடுகளுக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுவார்கள்.

## மாநகர சபைக்கு ஜே!

இன்னுமொன்று: வரி கட்டுவதற்காக மக்கள் மாநகர சபைக்குச் செல்வதென்றால் அது அவர்களுக்கு அரை நாள் வேலை. வரி எங்கு கட்டுவதென அங்குள்ளவர்களைக் கேட்டு அந்த இடத்தைத் தேடிப் பிடித்தாலும் நேர காலத்துக்குப் பணத்தைச் செலுத்தி விட முடியாது. ஏற்கனவே அங்கு சென்றோர் காரியாலயத்தை முற்றிக்கை யிட்டுவிடுவார்கள். இதற்குள் அங்கு கடமையாற்றுவோர் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திணறிப் போய் விடுவார்கள். இந்த வில்லங்கங்கள் எல்லாவற்றுக்கும் ஒரேயடியில் தலை முழுக்கு வைத்துள்ள மாநகர சபைக்கு 'ஜே!'

## அரசியல் அணங்குகள்

கணவரை இழக்கும் சில பெண்மணிகளை அதிர்ஷ்ட தேவதை தொடர்வதுண்டு. சமீபத்தில் தமிழ் எம். பி. ஒருவரும், இலங்கைப் பிரதமரும் நித்திய அமைதி நிலையை அடைந்தனர். இதனால் அவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவிகளைச் சிரமத்துக்குள்ளாக்கி விட்டனர் என்றே கூற வேண்டும். கணவன்மாரை இழந்த இந்த அணங்குகளை வாக்காளர் அரசியல் அரங்கில் ஏற்றியிருக்கின்றனர். தமது தலைவர்கள் மீதுள்ள அபிமானத்தை இம்மாதிரியெல்லாம் சந்தியில் இழுத்து விட்டு வேடிக்கை பார்க்கின்றார்களேயென எவரும் கருத வேண்டியதில்லை. சிவில் சேர்விஸ் பதவிகளே பெண்குலத்தைப் பார்த்து தவங்கிடக்கும் போது அரசியல் அரங்கு அப்படி என்ன பெரிய இடத்துச் சம்பந்தமா?

# 'நாடற்ற' இந்தியர்களுக்கு

## இலங்கை அரசினரின் புதிய வசதிகள்

இலங்கையிலுள்ள சுமார் ஒன்பது லட்சம் 'நாடற்றவர்கள்', இந்தியாவுக்குப் பிரயாணம் செய்ய முடியாமல் பல வருஷங்களாகத் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தடையை இலங்கை அரசாங்கம் நீக்கி, அவர்கள் இந்தியா சென்று திரும்பக்கூடிய முறையில் புதிய வசதிகளைச் செய்ய முன்வரலாமென்று அறிகிறேன்.

இலங்கையில் பிரஜா உரிமைக்கு மனுச்செய்து அது நிராகரிக்கப்பட்டவர்கள், திரிசங்கு சுவர்க்கத்திலிருப்பது போல், இங்கு "நாடற்றவர்" என்ற பெயரிடப்பட்டு தவிக்கிறார்கள். அவர்களனைவரும் இந்தியரென்கிறது இலங்கை அரசாங்கம். அவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களென்கிறது இந்தியா.

ஆகவே அவர்களுக்கு இரு அரசாங்கங்களும் பிரயாண தஸ்தாவேஜு அளிக்க மறுக்கின்றன.

இது காரணமாக தோட்டங்களில் ஜனக்கூட்டமும் வேலையில்லாக் கஷ்டமும் பெருகிறதென்றும், பிரயாணத்துக்கு வசதி செய்தால், அவர்களில் எவராவது இந்தியா சென்று, தங்கள் உறவினருடன் சேர்ந்து, அங்கேயே வேலை தேடிக் கொள்ளலாமென்றும், ஆகவே அவர்களுக்கு பிரயாணம் செய்யும் உரிமையை இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டுமென்றும் இலங்கை தோட்ட முதலாளிமார் பெடரேஷன் கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அச்சங்கப் பிரதிநிதி, சபையில் நியமன எம். பி யாக இருப்பதாலும் நியமன மெம்பர்கள் இன்று அரசாங்கத்தின் உயிராக இருப்பதாலும், இத்தீர்மானத்தை அரசாங்கம் உடன் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

பிரயாண உரிமைகளை மறுப்பதால், இலங்கைக்குத் தீமையே தவிர நன்மை எதுவுமில்லை. இந்திய அரசாங்கமும் இவ்விஷயத்தில் உறுதியாக இருக்கின்றது. பிரயாண உரிமை அளிப்பதால் மட்டும், இங்கு நாடற்றவர் பிரச்சினை தீரமுடியாதென்றும், சம்பந்தப்பட்ட மக்களுக்கு இது பெரிய கஷ்ட நிவாரணமாக இருக்குமென்றும் இ. தொ. காங்கிரஸைச் சேர்ந்த ஒரு முக்கிய தலைவர் தெரிவித்தார்.

## உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டி நூல்

### யாழ்ப்பாண மாநகரசபையின் முயற்சி

"யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதைச் சுற்றிலுமுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் விசேஷ ஸ்தலங்களையும் தரிசிக்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கான வழிகாட்டி நூல் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. உல்லாசப் பிரயாணிகள் விரும்பிச் சென்று பார்க்கக்கூடிய இப்பேர்ப்பட்ட இடங்களின் விபரங்களை மாணவர்கள் சேகரித்துத்தர வேண்டும். எங்கள் கலாசாரத்தையும் பொருளாதாரத்தையும் வளர்ப்பதற்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்வது அவசியம். ஆகையால் பிறர் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போகும்படி நாம் அவர்களுக்குப் போதிய கவர்ச்சி அளிக்கவேண்டும். இவ்வாறு சென்றவாரம் கொக்குவில் இந்துக்கல்லூரி சரித்திரக் கழகத்தின் ஆண்டுவிழாவின்போது யாழ்ப்பாண மேயர் திரு. ஏ. தங்கராசா துரையப்பா கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். எச். பேரின்பநாயகம் பேசுகையில் யாழ்ப்பாணத்தின் இளம் மேயர் வெகு உற்சாகத்துடன் பல முன்னேற்றத் திட்டங்களை இயற்றி வருகிருரென்றும், நகரசபையில் நிலவிய கைலஞ்சம் முதலிய ஊழல்களை அகற்றியது அவர் செய்த பெரும் நன்மைகளில் ஒன்று என்றும் கூறினர்.

## இப்படியும் சொன்னர்கள்

புத்தபெருமான் வாழ்ந்த காலத்திலே, அவருக்கு 'தேவ தத்தா' எனப்படும் எதிரி இருந்தான். ஆனல், இன்றைய 'தேவ தத்தா'க்கள் யாரெனில், பதவி மோகம் பிடித்த சில அரசியல்வாதிகளேயாகும்.

—தபால் மந்திரி மரிக்கார்.

மேற்கு நாடுகளுக்கு அவ்வளவு சக்தி இல்லை; அவைகளுக்குக் கிழடு தட்டிவிட்டது.

—குருஷேவ்.

கொழும்பு நகரசபைத் தேர்தலில் யூ. என். பி. தனியாக நின்றே போராடும். எங்களுக்கு எங்கள் சக்தியில் நம்பிக்கையுண்டு.

—டட்லி சேனநாயக்கா.

சிங்களவர், தமிழர் போன்று, பண்பாடு, சமயம் இவற்றில் மிகுந்த நெருங்கிய தொடர்புள்ள வேறு இரு இனங்கள் கிடையாது.

—டி. பி. முனக்குலாமே.

(i) என்னையும், இன்னுமொரு மந்திரியையும் பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சி, ஒரு பிரமாண்டமான கொம்யூனிஸ்ட் திட்டத்தின் அம்சமாகும்.

(ii) தீவிர இடதுசாரிகள் எனக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வருவதால், தற்காலிகமாக நான் ராஜினமாச் செய்வது நன்ருக விருக்கலாம்.

—ஸ்ரான்லி டி' சொய்ஸா.

இந்தியப் பிரதமர் நேரு ஒரு ஜனநாயக சர்வாதிகாரியாவர்.

—ஜெயபிரகாஷ் நாராயணன்.

தொல்காப்பியம் பார்ப்பனரின் சிருஷ்டி. தொல்காப்பியத்தைத் தமிழர் காப்பியமென நாம் ஏற்பது தகாது.

—பெரியார் ஈ. வே. ரா.


நான் விரும்புவது


நெஸ்டோமோல்ட்

ஏனெனில்

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது..






மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

**நெஸில்ஸ்**

**இலவச சாம்பிள்**

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

**நெஸ்டோமோல்ட்**

விட்டமின் B1 அடங்கியது.


## மலைநாட்டுத் தமிழ் விழா

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

ருர். அந்தக் கிழவனர் முன்னர் ஒரு தோட்டத் தொழிலாளியாம். பல்லாண்டுகள் தோட்டத்தில் உழைத்துவிட்டு, இன்றுதிக்கற்ற அனதையாகத் தெருவில் இப்படித் திண்டாடுவதாயும், ஒதுங்கவும் இடமில்லையென்றும், என்னுடன் வந்த உப அதிபர் வாமதேவன் கூறினர். அந்தக் கல்லூரியில் தினசரி மத்தியான உணவு கொடுப்பார்களாம். அதைச் சாப்பிட்டுவிட்டு வெளியே தள்ளாடிச் செல்லுவதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்கவும், பார்க்கவும் பரிதாபமாக இருந்தது. தமிழ் விழாவின் இன்பம் என் மனத்தை விட்டுப் பெரிதும் அகன்றது. உள்ளங்காலிலே வெள்ளெலும்பாட ஓடி உழைத்த ஒரு உத்தம உழைப்பாளியின் கதி இதுதான? இந்த மாதிரி வேறு யாரும் இருக்கிருர்களா? என்று விசாரித்தேன். நூறு பேருக்கு மேல் இப்படித் தெருவில் பிச்சைக்காரராகத்திரிவதாகவும், வெள்ளிக்கிழமைகளில், அட்டன் கடைவீதியில் இந்தக் கண்ருவியைக் காணலாம் என்றும் தெரிவித்தார்.

இந்த விஷயத்தில் அட்டன் நகரசபை ஏதும் உதவி செய்யக்கூடாதா? இது நகருக்கே அவமானமல்லவா? என்று கேட்டேன். நகரில் தமிழரே அதிகமென்ருலும் அவர்களுக்கு வாக்குரிமை இல்லை. ஆகவே சபையில் அதிகமானவர் சிங்களவர். இதுபோன்ற விஷயத்தைக் கொணர்ந்தால், "ஓ இது இந்தியர் விஷயம். நமக்கென்ன? இந்திய அரசாங்கம், தோட்டத்துரை, அல்லது காங்கிரஸ் கவனித்துக் கொள்ளட்டும்" என்று தட்டிக்கழித்து விடுவதாக யு. டி. ஸி. மெம்பரான திரு. வாமதேவன் வருத்தத்துடன் தெரிவித்தார். அட கடவுளே!

என் பக்கத்தில் இந்திய ஹை கொமிஷன் அய்யங்கார் இருந்தார். அவர் என்ன நினைத்தாரோ? ஒன்றும் பேசவில்லை. தோட்டத் துரைமார்கள் மனம் வைத்தால், இந்தத் தள்ளாதவர்கள் ஒண்டியிருக்க, ஒரு தர்மம் செய்யலாம். ஆனல் இந்த அனதைகளை யார்தான் கண்ணெடுத்துப் பார்க்கிருர்கள்?

"பசிக்கிறது" என்று அந்தக் கிழவனர் தனக்குத்தானே கீழே குனிந்தபடியே கத்தினர். பக்கத்திலிருந்த சில தமிழ் வாலிபர்கள், இங்கு எழுதக் கூடாத சில வார்த்தைகள் சொல்லி அக் கிழவனரை நையாண்டி செய்தனர். இதைக் கேட்க வெட்கமும் துக்கமும் தாங்கவில்லை. அட தமிழ்ச் சமூகமே! ஏழைகளுக்கு உன்னல் உதவி செய்ய முடியாவிடினும், இவ்வித அன்பற்ற தீய சொல்லம்புகளையாவது பிரயோகிக்காமல் இருக்கப்படாதா? தமிழனின் பண்பு, அன்பு என்று பேசுவதெல்லாம் எந்த அளவில் மலைநாட்டிலே இருக்கிறதென்பதற்கு, அந்த அனதைக் கிழவனர் நேரில் ஓர் அத்தாட்சியாகக் காட்சியளித்தார். (தொடரும்)

# சிறுவர் பகுதி

## ஜோர்ஜ் ஸ்டிபென்ஸன்

— சோ. மகிந்தா - ப. எண். 269 —

ஜோர்ஜ் ஸ்டிபென்ஸன் இங்கிலாந்து நாட்டில் நியூகாசில் என்ற நகரத்தில் பிறந்தார். அவர் தந்தை ஓர் இயந்திரத் தொழிலதிபர். ஸ்டிபென்ஸனின் இளமைக்காலம் வறுமையில் கழிந்தது என்ருலும், அவர் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பொறியியல் வல்லுநர் பட்டம் பெற்ருர். கில்லிங்வொர்த் நிலக்கரிச் சாலையில் எஞ்சினியராகப் பணியாற்றினுர். பலகஷ்டமான முயற்சிகளுக்குப் பின் இங்குதான் 1814ல் முதன் முதலாக நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதை இயக்கினர். தன்னுடைய நீராவி இயந்திரத்தின் அமைப்பை அங்கிருந்தே அபிவிருத்தி செய்தார். இதன் பயனுக 1821-ம் ஆண்டு அவர் டார்லிங்டன் ரயில்வேயில் பிரதம எஞ்சினியராக அமர்த்தப்பட்டார். அவர் பெயராலேயே அன்று உலகின் முதல் ரயில் (1821ல்) வண்டியும் பெயரிடப்பட்டது. அதைத் தொடர்ந்து அவருக்கும் அவருடைய சேவைக்கும் புகழ் ஏற்பட்டதால் பல ரயில்வேக்கம்பனிகள் அவரை வரவேற்றன. 1826ல் மாஞ்செஸ்டர் – லிவப்பூர் ரயில்வேயின் பிரதம எஞ்சினியராக வேலை பார்த்தார்.

எனவே தான் இன்று உலக ரயில்வே சாதனங்களுக்கு அவரே தந்தை என்று அழைக்கப்படுகிருர். அவரைத் தொடர்ந்து அவர்மகன்ரொபேர்ட் ஸ்டிபென்ஸன் இங்கிலாந்தின் பல ரயில்வேப்பாலங்களின் அமைப்பாளராகப் பணி புரிந்து தந்தையின் புகழை மேலும் பெருக்கினர். இன்றும் புகழ்ந்து போற்றப்படும் நியூகாசில் ரயில்வே பாலத்தையும் இவர்தான் அமைத்தார். தந்தையும் மகனும், உலகின் போக்குவரத்து விருத்தியடையப் பெரிதும் உதவி புரிந்துள்ளனர். ஜோர்ஜ் ஸ்டிபென்ஸன் தமது 67-வது வயதில் உயிர் நீத்தார்.

## காலைப் பொழுது

(பி. ஆறுமுகம் - ப. எ. 555)

உலகமெல்லாம் விழிப்புறும் நேரம். உதய சூரியன் உதயமாகும் நேரம். ஆம், அதுதான் காலைப்பொழுது. சேவல் கூவுகின்றது, குருவிகள் ஆர்ப்பரிக்கின்றன; தாமரைகள் மலர்கின்றன. ஆலயங்களில் மணிகள் கணீரென ஒலிக்கின்றன. மக்கள் தம் கடமைகளை நிறைவேற்றத் தொடங்குகின்ருர்கள்.

மங்கையர் தம் இல்லங்களைக் கூட்டித் துடைத்து அனைத்தையும் புனிதமாக்க முயலுகின்றனர். ஆடவர்கள் தம் அலுவலகங்களுக்குச் செல்வதற்கான அடுக்குகளைப் பார்க்கின்ருர்கள். சிறுவர் சிறுமியர் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு ஆயத்தம் செய்கின்ருர்கள். எங்கும் கடமை உணர்வு பரவுகிறது. சுறுசுறுப்பு, உழைப்பின் உற்சாகம் மக்களிடையே நிலவுகிறது.

மலர்ந்த முகத்துடன் மனைவியிடம் விடை பெற்றுச் செல்கின்ருன் கணவன். 'பாடசாலைக்குப் போய்வா' என்று பெற்ற அன்னை தன் மகனை வழி அனுப்பி மகிழ்கிருள். மாலையிற் பிரிந்த நண்பர்களுடன் கூடி ஆனந்தம் காண்கின்ருன் சிறுவன்.

உண்மையில் காலைப்பொழுது ஒரு உற்சாக மூட்டும் நேரம் உழைப்புக்குஊக்கம்காட்டும்நேரம். கடமையை நினைவூட்டிக் களிப்பையூட்டும் நேரம், காலைநேரம்.

## தொழிற் கல்வி

[ஞா. யேசுதாசன்—ப. எ. 565]

மக்களின் வாழ்வுக்குத தொழிற்கல்வி பேருதவிபுரிவதாகும். நாட்டிற்கு நலன் அளிப்பதும் செல்வத்தைப் பெருக்கிச் சீரடையச் செய்வதும் தொழிற் கல்வியே.

தொழில்வளர்ச்சிக்கும், கமத்தொழில் விருத்திக்கும் உதவுவதும் தொழிற் கல்வியே. ஆகாயத்தில் பறந்து செல்லும் ஆகாயவிமானம், நீரினுள் நுழைந்து செல்லும் நீராவிக் கப்பல், தரைமீது ஊர்ந்து செல்லும் வாகனங்கள் இவை யாவும் தொழிற் கல்வியின் வளர்ச்சியால்தான் உருவாக்கப்பட்டன. இன்னும் உணவு உற்பத்திப் பெருக்கத்தில் இன்று உறுதுணை புரியும் இயந்திரக் கருவிகளெல்லாம் தொழிற் கல்வியால் அமைக்கப்பட்டவையே.

அமெரிக்கா, ருஷியா, ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் இவ்வளவு முன்னேற்ற மடைந்ததற்குக் காரணம் அங்கு அவர்கள் தொழிற் கல்விக்கு அளித்துவரும் ஊக்கமே. கைத்தொழில் வளமுற, போக்குவரத்துக்கள் துரிதமடைய, தொழிற்கல்வி அவசியமானது. உணவு உற்பத்திக்கும் அதிக துணிமணி தயாரிப்பதற்கும் மக்களுக்குத் தேவையான வேறுபல பொருள்கள் தயார் செய்வதற்கும் தொழிற்கல்வி பெரிதும் பயன்படுகிறது.

முன்னேற்றமடையாத நம் நாட்டில் இவ்வித தொழிற் கல்விக்கு ஆதரவு அளித்து மதிப்புக் கொடுத்தால் நம் நாடும் முன்னேற்றம் அடையும் என்பது உறுதி.

செல்வக் குழந்தைகளே:–

வணக்கம். உங்களிற் பலர் எழுதி அனுப்பும் சில கதைகளும் கட்டுரைகளும் ஏற்கனவே வேறு பத்திரிகைகளில் வெளி வந்தன என்று உங்கள் நண்பர்கள் ஆதாரத்துடன் எனக்குக் கடிதங்கள் எழுதி வருகின்றனர். பிள்ளைகளே, உங்களுடைய சொந்த முயற்சியில் நம்பிக்கை வைத்து நல்ல விஷயங்களை எழுதி அனுப்புங்கள். வளர்ச்சிக்கு அதுவே நல்லவழி.

சின்னமாமா

## நடைப் பிணம்

[க. ஆனந்தராஜா — ப. எண். 592]

(சென்றவாரத் தொடர்ச்சி)

சில நாட்களாகவே அவன் எதையோ பறி கொடுத்தவனுகப் பைத்தியக்காரன் போன்று தெருவழியே நடந்து கொண்டிருந்தான். அதேபோன்று ஒரு நாள் ஜம்புலிங்கம் பண்ணையாரின் வயலின் வரம்பு வழியே நடந்து கொண்டிருந்தான். இரு மருங்கும் பச்சைப் பசேலென்று நெற்பயிர்கள் காட்சியளித்தாலும் அக்காட்சி அவனுக்கு வெறுப்பையே தந்தது. அப்பொழுது சிறிது தூரத்துக்கப்பால் "ஐயோ! இங்கு காப்பாற்ற யாருமில்லையா! ஐயோ! என் மகள்..." என்னும் குரல் கேட்டது. அத்திக்கை நோக்கி ஓடினன் சின்னன். அவன் ஓடிக்கொண்டிருக்கும்போதே தூரத்தில் அப்படிக் குளறியது ஜம்புலிங்கம் பண்ணையாரின் மனைவியென்று தெரிந்தது. அதோடு அவள் நின்றது ஒரு குளத்தின் கரைஎன்பதைஅறிந்ததும் அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. குளிக்கவந்த பண்ணையாரின் மகளை நீர் அள்ளிக் கொண்டு போகிறது. அதனல் அவள் கரையேற வழியில்லாமல் தத்தளிக்கின்ருள். குளக்கரைக்கு வந்ததும், அவன் பேசாமல் நின்ருன். அவன் முகத்தில் வெறிகொண்ட ஒரு மகிழ்ச்சி. ஒரேஒரு ஐந்துரூபாய் நோட்டுத் தராததால் என் மகளைப் பறிகொடுத்தேனே. அதேபோல் இக்குழந்தையைப் பறிகொடுத்துப் பண்ணையார் படும் பாட்டைக் காணலாம் என்ற பூரிப்பில் அவன் நின்ருன். தான் இவ்வளவு நாளாகக் கொண்டிருந்த அவா நிறைவேறப்போகிறதே என்ற மகிழ்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

ஆனல்......

"தம்பி...என் மகள் தண்ணீரில் தத்தளிக்கிருள். அவளை நீ காப்பாற்றமாட்டாயா? ஐய்யா! என் மகள். தம்பி நீயுமொரு ஆம்பிள்ளையா? உன்மகள் இப்படித் துன்பப்பட்டால் உன் மனம்......"


அதன்பின் அவனல் கேட்க முடியவில்லை. இப்பொழுதுதான், தன் மகள் இறந்ததும் தான்பட்டபாட்டை நினைத்தான். ஐயோ! அப்படித்தானே இப்பெண்ணைப் பெற்றெடுத்த தாயும் துடிக்கிருள். பண்ணையாரை வஞ்சம் தீர்க்கவேண்டுமென்ருல் ஒன்றுமறியாத ஒரு பெண்ணின் பாபத்தைக் கட்டிக் கொள்வதா? அடுத்த கணம் இரக்க உணர்ச்சியினல் உந்தப்பட்டு நீருக்குள் பாய்ந்தான்.

பண்ணையாரின் மனைவியின் கூக்குரலைக் கேட்டு தூரத்திலே பலர் ஓடிவந்தாலும் அவர்களால் என்னசெய்ய முடியும். பண்ணையாரின் மகளை மயக்க முற்றநிலையில் தூக்கிக்கொண்டு கரைவந்தடைந்தான் சின்னன். இதற்குள் பல ஆட்களும் வந்து சேர்ந்துகொண்டார்கள். எல்லோருமாகப் பண்ணையாரின் மகளைச் சிகிச்சை செய்வதற்காக அவர் வீட்டுக்குக்கொண்டு ஓடினர்கள். ஒருவன் மட்டும் சிறிது முன்னுற் சென்று பண்ணையாருக்கு நடந்த விஷயத்தைச் சொன்னன். "சிவசிவா! சிவசிவா!" என்று பதட்டத்துடன் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தார் பண்ணையார். சின்னனை, அந்தத் தீண்டப்படாதவனைக் கட்டிப்பிடித்துத் தழுவினர். "தம்பீ என்னை மன்னித்திடடா" என்று கண்ணீருக்கிடையே விக்கி விக்கிக் கூறினர்.


பின்னர், அவர் ஓர் அறைக்குட் சென்று ஒரு நூறுரூபாய் நோட்டைக் கொண்டுவந்து சின்னனின் கைக்குட் திணித்தார். அதைப்பார்த்ததும் அவன் முகத்தில் ஆத்திரமும் குரோதமும் பிரதிபலித்தன. தன் கைக்குள்ளே திணித்தகாசைக் கசக்கினன். அடுத்த கணம் பண்ணையாரின் முகத்தை நோக்கி எறிந்தான். ஓர் அசட்டுத்தனமான வெறிச் சிரிப்புச் சிரித்துவிட்டுத் திரும்பி விறு விறுவென நடந்தான். அன்று தொடக்கம் இப்படி நடைப்பிணம்போல்நடந்து கொண்டேஇருக்கிருன். 'காசுக்காகக் காப்பாற்றவில்லை. கருணை என் நெஞ்சோடு கலந்து இருக்கிறது. அதனல் காப்பாற்றினேன்' என்ருன்.

பண்ணையார் கண்களில் அன்றுதான் முதன் முறையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. (முற்றும்)

## தெரிந்து கொள்ளுங்கள்







கிழக்கு நாடுகளில், ஒட்டகத்தின் உபயோகம் இன்றியமையாத தொன்ருகும். போக்குவரத்துக்கு உதவும் இந்த ஒட்டகங்களின் மயிர், துணி நெய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றது. பருகுவதற்குப் பாலும் அவை அளிக்கின்றன. அவற்றின் எலும்புகள் தந்தம் போல் வழவழப்பானவை. பொதுவாக நம்பப்படுவது போல், அவை தமது கூனல் முதுகில் நீரைச் சேகரித்து வைப்பதில்லை. அவற்றின் தசையிலே நீர் தங்கி நிற்கும். வியர்த்துக் கொட்டும் பொழுது கூட, இந்த நீர் செலவழிக்கப்படுவதில்லை.

உலகத்திலேயே மிக்க செல்வம் படைத்த கனி உலோகக் கலவை நிறைந்த சுரங்கமொன்று, ஓர் அணிலின் முயற்சியினுல் தான் கண்டுபிடிக்கப்பட்டது என்பதை நம்புவீர்களா? ஆனல், 1859 ஆம் ஆண்டில், அமெரிக்காவிலுள்ள நெவாடாப் பட்டினத்தைச் சேர்ந்த ஒரு சுரங்கத் தொழிலாளியும், மூன்று நண்பர்களும் உலாவச் சென்ற போது, இந்த அணில் நிலத்தில் துவாரம் துளைப்பதைக் கண்டனர். துவாரத்திலிருந்து கிளம்பிய மண்ணை எடுத்துப் பார்த்தபோது அது தங்கமெனத் தெரிந்தது!

ஐக்கிய அமெரிக்காவில் ரஷ்மூர் என்னும் மலையில் உள்ள பாறையில், நான்கு அமெரிக்க ஜனதிபதிகளின் முகங்கள்செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை உருவாக்கிய சிற்பியை, அவை எவ்வளவு காலம் நீடித்திருக்கும் என்று ஒருவர் கேட்டபொழுது, அவர் "இக் கருங்கற் பாறையின் ஓர் அங்குலம் 100,000 வருடங்களுக்கு ஒரு முறை தான் அழியும் என்று அறிந்த நான், ஜனதிபதி வோஷிங்டனின் மூக்குக்குப் பன்னிரெண்டு அங்குலம் சேர்த்துள்ளேன். இதனல், அவருடைய உருவம் ஒரு கோடி வருஷத்துக்கும் நிலைக்கலாம்" என்ருர்.

## இன்பமுள்ள ஏடு

ந. திருநாவுக்கரசு

(பதிவு எண் 8)

ஈழநாடு எங்கள் நாடு இன்பமுள்ள ஏடு
ஆழமுள்ள கட்டுரைகள் கதைகள் நிறை ஏடு
வாழவழி வகுத்துத்தரும் வளமுடைய ஏடு
ஈழமெங்கும் சென்றுசெய்தி எடுத்தியம்பும் ஏடு

பாலர் முதல் கிழவர்வரை பார்த்து மகிழ் ஏடு
ஞாலமதின் செய்தியாவும் நயந்துரைக்கும் ஏடு
காலமதால் அழியாத கன்னித் தமிழ் ஏடு
சீலமுள்ள சின்னமாமா சிரிக்கவைக்கும் ஏடு

பலாக்கனிபோல் இனிமைநிறை பண்புடைய ஏடு
காலாநிலையப்பதிப்பகத்தார் கனிந்தளிக்கும் ஏடு
துலாக்கோல்போல் நடுவுநிலை நாட்டுகின்ற ஏடு
நிலாப்போல ஒளிவீசும் நிகரற்ற ஏடு

# தேவாலயம் செல்லத்தவறிய இளவரசி

## அதிகாலையில் பிஷப் அடைந்த ஏமாற்றம்

புவியாளும் வேந்தர்களாயினுமென்ன, அன்றேல் அவர்களின் குடும்பத்தவர்களாயினுமென்ன, அரசியல் தலைவர்களாயினுமென்ன, மதத் தலைவர்களின் முன்னிலையில் அவர்களெல்லாம் பரிதிமுன் பனி போன்றவர்களே.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இது. ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் இளவரசி அலக்சாந்திரியா, சமீபத்தில் ஞாயிற்றுக் கிழமையொன்றின் பிரார்த்தனைக்காகக் கோவிலுக்குச் செல்லவில்லையாம். சும்மா விட்டாரா மதகுரு. பெரிய ஆட்சேபங்களைக் கிளப்பி விட்டுவிட்டார்.

ஆஸ்திரேலியாவில் புதிய தென் வேல்ஸ் மாகாணத்தில் சுற்றுப் பிரயாணங்களில் ஈடுபட்டிருந்தார் இளவரசி. மேற்குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய தினமாகிய சனிக்கிழமையன்று இளவரசியின் நிகழ்ச்சி நிரலில் அதிகமான அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. பகல் முழுதும் அத்தேசம் முழுவதிலும் சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த இளவரசி மாலையில் குதிரைச் சவாரியில் பொழுது போக்கினார். உடனடியாக அவர் சிட்னிக்கு விமான மூலம் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. அதிக அலைச்சல்களினால் ஏற்பட்ட அலுப்புக்காரணமாகவும் மிகப் பிந்தியே படுக்கைக்குச் சென்றதனாலும் அலக்சாந்திரியா இளவரசியினால் அதிகாலையில் எழுந்திருக்க முடியவில்லை. பிரார்த்தனையில் கலந்துகொள்ளவும் முடியவில்லை.

அர்மிட்டேல் பகுதியிலுள்ள பிரதான ஆலயத்தின் பிஷப்பும் ஏராளமான மக்களும் இளவரசி அதிகாலைப் பிரார்த்தனையில் கலந்துகொள்ள வருவாரென ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். வெகு நேரத்தின் பின்னர் பிஷப்புக்கு இளவரசி வரமாட்டாரென அறிவிக்கப்பட்டது. இதை பிஷப் கடுமையாக ஆட்சேபித்தார். இளவரசியின் முதல் நாள் நிகழ்ச்சிகள்பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர் இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியோரில் குற்றஞ்சாட்டினர். ஞாயிற்றுக் கிழமையில் இளவரசி தன் மத கடமைகளை அனுசரிக்கக்கூடிய முறையில் சனிக்கிழமை நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கவேண்டும் எனக் கூறினர் பிஷப்.

* * *

### ஒரு சிறுமியின் கட்டுரை நீதிமன்றம் சென்றது

ஆசிரியர் ஒருவர் மாணவர்கட்கு எழுத்து வேலையொன்று கொடுத்தார். விரும்பிய ஒரு பொருள்பற்றிக் கட்டுரையெழுதுவதே அவ்வேலையாகும். எட்டு வயதுச் சிறுமியொருத்தி தான் முந்திய இரவில் கண்டதொரு நிகழ்ச்சியை வரைந்தாள். ஆசிரியரின் மனத்தை உருக்கிவிட்டது அக்கட்டுரை. அவர் அதைத் தலைமையாசிரியரிடம் காட்டினர். தலைமையாசிரியரோ அக்கட்டுரையில் குறிப்பிட்ட சம்பவம்பற்றி நடவடிக்கையெடுக்க விரும்பினர். அக்கட்டுரை றோயல் சங்கத்தினர்க்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதன் காரணமாக இங்கிலாந்திலுள்ள நோர்போக் இளம் குற்றவாளிகளுக்கான மன்றத்தில் இரு சிறுவர்கள் நிறுத்தப்பட்டனர். அவர்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு யாது?

முறையே பதின்மூன்று வயதும், பத்து வயதும் கொண்ட அச்சிறுவர்கள் இருவரும் பிறந்து பதினன்கு தினங்களே கழியாத இரு பூனைக்குட்டிகளைத் தூக்கிச்சென்று நீர் நிறைந்த குட்டையொன்றின் நடுவில் எறிந்தனர். மிகக் கஷ்டத்துடன் அவைகள் கரையையடைந்தபோது அவர்கள் திரும்பவும் அவற்றைப் பிடித்து குட்டையின் நடுவே எறிந்தனர். மீண்டும் அவைகள் கரைக்கு வர முயற்சித்தபோது அவைகளின் மேல் கற்களை எறிந்து சித்திரவதை செய்தனர். இச்சிறுவர்களின் கொடுமைகளினால் கூக்குரலிட்ட வண்ணம் அந்த இரு வாயில்லாப் பிராணிகளும் சொற்ப நேரத்தின் பின்னால் நீருள் அமிழ்ந்து போயின. சிறுவர்களிருவருக்கும் ஆளுக்குப் பத்து சிலிங் அபராதம் விதிக்கப்பட்டது. நீதிபதி அவர்களின் தந்தையை வளர்ந்தோர் மன்றத்தில் ஆஜர் செய்யும்படி உத்தரவிட்டார். காரணம் தந்தையே அப்பூனைக் குட்டிகளை நீருள் ஆழ்த்தும்படி கூறியிருந்தார்.

வளர்ந்தோருக்கான நீதிமன்றத்தில் தந்தைக்கு ஒரு பவுண் அபராதம் விதிக்கப்பட்டது. தேவையில்லாத பிராணிகளைக் கொன்று விடுவது குற்றமல்ல. ஆயினும் அவைகளைச் சித்திரவதை செய்து கொல்லுதல் மிகக் கேடுகெட்ட செயலாகும் என நீதிபதி கூறினர்.

### ஒரு வீட்டுக்காக ஒரு குழந்தை

தனக்குச் சொந்தமாக ஒரு வீட்டை வாங்குவதற்கெனத் தனது குழந்தையையே அளிக்க முன்வந்துள்ள அன்னையொருத்தியைப்பற்றி அறிவீர்களா! இது நடந்தது இங்கல்ல, இங்கிலாந்தில்.

அந்த அதிசய அன்னையின் நாமம் திருமதி அமி கம்மிங்ஸ் என்பது. அவளின் வயது 36. தனது குடும்பத்தினர் தங்குவதற்கு ஒரு வீட்டை வாடகைக்கு யாராவது பெற்றுத்தந்தால்

## விசித்திர உலகம்

தனக்கு இம்மாதத்தில் (நவம்பரில்) பிறக்கவிருக்கும் குழந்தையைத் தருவதாக அவள் விளம்பரஞ் செய்தாள். காரணம்?

திரு. கமிங்ஸ் ஸ்கொத்திலாந்திலுள்ள எண்ணெய்க் கம்பெனியொன்றில் கடமையாற்றி வந்தார். அவரது குடும்பத்தினர் தங்குவதற்கு வீடும் அளிக்கப்பட்டது. கடந்த வருடக் கடைசியில் அந்தக் கம்பெனி வேறிடத்திற்கு மாற்றப்பட்டமையால் அவரின் வேலைபோய் விட்டது. ஆகவே, வீடும் போய் விட்டது. இரண்டு வயதிலிருந்து பன்னிரண்டு வயது வரைக்குமுள்ள தனது ஏழு குழந்தைகளையும் மனைவியையும் எங்கே தங்கச்செய்வது? அதிர்ஷ்டவசமாக அக்குடும்பத்தின் உறவினர் ஒருவரின் வீட்டில் ஓர் அறை இந்த அகதிக் குடும்பத்துக்குக் கொடுக்கப்பட்டது. வேறோரிடத்தில் திரு. கமிங்ஸ் வேலையும் கிடைக்கப் பெற்றார். ஆயினும் சுகாதாரப் பகுதியினர் அந்த வீட்டுத்தலைவருக்குச் சமீபத்தில் ஒரு அறிவித்தல் விடுத்தனர். அவரது வீட்டில் இரண்டு குடும்பங்கள் தங்குவது சுகாதாரவிதிகளுக்குப்புறம்பாக இருப்பதாகவும் அதிக அங்கத்தவர்களைக் கொண்ட மற்றொரு குடும்பத்தினரை வெளியேற்றிவிட வேண்டுமெனவும் அறிவித்தலில் காணப்பட்டது. அரசாங்க அறிவித்தலுக்கு அமைய வேண்டியது அவசியமல்லவா? ஆகவே தான் முன்னர் கூறிய வண்ணம் திருமதி அமி விளம்பரஞ் செய்தாள்.

இந்த விளம்பரத்திற்கு விரைவில் பதில் கிடைத்தது. நியூகாசில் பகுதியில் வசிக்கும் செல்வந்தரான குழந்தைகளில்லாத தம்பதிகள் குழந்தைக்காக வீடொன்றை அளிக்க முன் வந்தனர். அந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளப் போகும் தருணத்தில் மற்றொரு பதிலும் அக்குடும்பத்தினருக்குக் கிடைத்தது. அரசாங்க ஒப்பந்தகாரரான ஒருவர் திரு. அமிக்குத் தான் வேலையளிப்பதாகவும், தனது மற்றைய கூலியாட்கள் தங்குவதற்கு அளிக்கப்பட்டிருப்பதைப்போல அமி குடும்பத்தினர்க்கும் ஒரு வீடு அளிக்கப்படுமெனவும், ஆகவே பிறக்கப் போகும் குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்துவிட வேண்டாமெனவும் திரு. அமிக்கு அறிவித்தார். இந்த இரு அன்பளிப்புகளில் எதை ஏற்றுக் கொள்வது?

நீண்ட ஆலோசனைக்குப்பின் திருமதி அமி பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியதாவது:— ஒப்பந்தக்காரரின் ஆலோசனையை நாங்கள் நிராகரித்துவிட்டோம். ஏனெனில் அவரிடம் என் கணவர் வேலைபார்க்கும் வரைக்கும் தான் நாங்கள் குடியிருக்க வீடு கிடைக்கும். பின்னர் நாம் நடுத்தெருவில் நிற்கவேண்டியதுதான். இந்த அனுபவம் எங்களுக்கு முன்னரே உண்டு. எங்களுக்கு வீடொன்றைப் பெற்றுத்தர உடன்பட்ட தம்பதிகளுக்கு அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டதாகப் பதிலளித்துவிட்டோம். அவர்கள் எங்களுக்காக வீடொன்றை ஒழுங்கு பண்ணிவிட்டார்கள். எனது பிரசவம் முடிந்த உடனேயே அவர்கள் எங்கள் குழந்தையை எடுத்துச் செல்வார்கள். எங்கள் புதிய குழந்தை எங்களிடத்தில் வளர்ந்து வருவதிலும் பார்க்கச் சிறப்பாக அவர்களிடம் வளர்ந்து வரும்.

### 4. சேர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் விருப்பம்- புலிப் பெண் நிராகரித்தாள்

இரண்டாவது உலகயுத்த காலப் பிரதமராக உலகப்புகழ் பெற்ற சேர்வின்ஸ்டன் சேர்ச்சிலின் வேண்டுகோளொன்றைச் சமீபத்தில் ஒரு பிரபல பாடகி நிராகரித்துவிட்டார். இப்பாடகியின் பெயர் மரியா என்பது. நிமிடத்துக்கு நிமிடம் குணம் மாறும் தன்மையையுடைய இந்த அழகியைப் புலிப் பெண் எனப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

சமீபத்தில் வின்ஸ்டன்சேர்ச்சில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒருகப்பலில் இப்பாடகியும் தன் ஓய்வு நாட்களைக் கழிப்பதற்காகச் சென்று கொண்டிருந்தாள். அவளின் பாடலை வானொலிமூலம் கேட்டு ரசித்த சேர்வின்ஸ்டன் சேர்ச்சில் அவளது பாடலை நேரிடையாகக் கேட்டு ரசிக்க விரும்பினர். இக்கோரிக்கை பாடகிக்கு அறிவிக்கப்பட்டபோது சீறி விழுந்தாள். அப்பெண் 'நான் ஓய்வுபெறுவதற்காகப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறேன். பாடுவதற்காக அல்ல' என்று பதிலளித்தாள்.

பின்னர் அவளின் கணவன் சேர்ச்சிலிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

—பெனற்


# யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.


கண்ணோட்டம் 19

# கிராமங்களைக் கவனிப்பாரில்லையா?

விண்ணுலகையே மனிதன் எட்டிப்பிடிக்கும் இந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல கிராமங்களுக்கு இன்னும்தான் மின்சாரம் கிடைக்கவில்லையென்பது வெட்கத்துக்குரிய தொன்றாகவே யிருக்கின்றது. நகரத்தில், பலவிடங்களிலும் மின்சார ஒளி விளக்குகள் அங்கும் இங்குமாக மின்னியபடி மக்களைப் பார்த்துக் கண் சிமிட்டுகின்றன. நகரத்துத் தெருக்களை அலங்கரிக்கும் மின்சாரம், கிராமத்து மக்களின் வயிற்றுப் பிழைப்புக்கு உதவ முன்வராதிருப்பது ஆச்சரியமே.

கிராமங்களில், மின்சாரம் மிக்க உபயோகமான தொன்று. விவசாயிகளின் பல பிரச்சினைகளையும் இது தீர்க்க வல்லது. குறைந்த செலவில், மின்சாரத்தின் உதவியுடன், விவசாயிகள் தமது உற்பத்தியைப் பெருக்க முடியும். இன்று உலக உற்பத்தியில் முன்னுக்கு நிற்கும் நாடுகளெல்லாமே மின்சாரத்தின் உதவியைப் பெரிதும் நாடுகின்றன.

இனி, நாம் கிராமங்களில் கவனிக்கவேண்டிய வேறு விஷயங்களுமுண்டு. கிராமங்கள், அதிக ஜன சந்தடி இல்லாத இடங்களாகும். இரவு ஒன்பது அல்லது பத்துமணிக்கு மேல் தெருக்களெல்லாம் வெறிச்சென்றிருக்கும். கிராமங்களில் ஒழுங்கைகளும் அதிகம். ஆகவே தான், கிராமங்களில் உள்ள வீடுகளில் திருட்டுக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. திருடினாலும் திருடியதுதான்—திருட்டுக்குப்பின், திருடனைக் கண்டுபிடிப்பதோ அல்லது களவாடப்பட்ட பொருள்களை மீட்பதோ சுலபமான காரியமல்ல. ஆனல், மின்சாரம் கிராமங்களுக்கு வந்துவிட்டாலோ இத் திருட்டுக்களைத் தடை செய்ய அது பெரு உதவியாக இருக்கும். மின்சாரம் வந்துவிட்டால், தெருக்களில் இரவு முழுவதும் வெளிச்சமாக விருக்கும். அத்துடன், அதிகமான வீடுகளில், டெலிபோன் வசதியையும் மக்கள் செய்துகொள்வார்கள். ஏதாவது ஆபத்து நடந்துவிட்டால், டக்டருக்கோ, பொலிஸ் நிலையத்திற்கோ, அன்றேல் தீயணைக்கும் படையினருக்கோ உடனேயே அறிவிக்கக்கூடிய முக்கியமான வசதியை டெலிபோன் கிராம மக்களுக்கு அளிக்கும்.

சட்டத்தை நிறுவுவதற்கெனக் கடமையாற்றும் பொலிஸ்காரர் கூட, கிராமங்களைப் புறக்கணித்து விடுகிறார்கள் என்றால், பாருங்களேன்! ஏதாவதொரு திருட்டு, ஒரு கொலை, ஒரு விபத்து நடைபெற்றுவிட்டால் மட்டும் இரண்டு, மூன்று நாட்களுக்குப் பொலிஸார் கிராம வீதிகளில் நடமாடக் கூடும். மற்றும்படி அவர்களுக்குக் கிராமங்களைப்பற்றி அக்கறையேயில்லை. கிராமங்களில் பல கடைகளில், பொருள்களின் விலை சட்டத்தின்படி கூறப்பட்டிருக்கும் விலையிலும் அதிகமாக விற்கப்படுகின்றன. கிராமத்துச் சந்தைகளில் விற்கப்படும் காய் கறிகளின் விலைக்குஎந்தவித கட்டுப்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுமாத்திரமா? கிராமங்களில் உள்ள சந்திப்புக்களில், ஒழுங்கீனமாக, அபாயத்தை உண்டு பண்ணும் முறையில், நிறுத்தப்படும் வண்டிகள், மோட்டார் கார்கள்பற்றி எந்தப் பொலிஸ் உத்தியோகத்தராவது கவனிக்கிறரா? கொக்குவிலிலுள்ள ஒரு தெருவில், இப்பொழுது பல வாரங்களாக வெட்டி வீழ்த்தப்பட்ட ஒரு பெரிய மரம், தெருவின் குறுக்கே கிடக்கின்றது. இது எவ்வளவு அபாயகரமானது என்பதைப் பற்றி எவருமே சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்பொழுது, கிராம மக்களைக் கவனிக்க இந்த நாட்டின் அரசாங்கத்துக்கோ அல்லது அதன் உத்தியோகத்தருக்கோ, அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. கிராமங்களின் இந்த நிலைக்கு, முக்கிய பொறுப்பாளர்கள் கிராமச் சங்க அங்கத்தினரே எனின் அது மிகையாகாது. இதில் ஒரு விசேஷமென்னவெனில், மக்களின் நலன்களைக் கவனிக்காத இக்கிராம சங்கங்களைக் கவனிப்பதற்குக் கூட மேலதிகாரிகளுக்குப் போதியபொறுப்புணர்ச்சி இல்லாததேயாகும். கிராமச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் பணம் எவ்விதங்களில் பயன்படுத்தப்படுகின்றன, கிராமத்து மக்களின் அத்தியாவசிய தேவைகளை உணர்ந்து, கிராம சங்கங்கள் அவற்றைப் பூர்த்தி செய்து கொடுக்க முயற்சிக்கின்றனவா, கிராம சங்கங்களில் கடமையாற்றுபவர்களுக்குத் தமது கடமைகளைத் திறமையுடன் நிறைவேற்றத் தகுதியும், ஊக்கமும் இருக்கின்றனவா என்பன பற்றி மேலதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று அறிய எத்தனிக்கிறார்களா? இல்லவே இல்லை.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் அரசாங்க அதிபருடனும், கிராம சங்கத் தலைவர்களுடனும் சில மணி நேரம் பேசிவிட்டுப் பின் தாம் வந்தவழி போய் விடுகிறார்கள். அத்து

(15ஆம் பக்கம் பார்க்க)

அருள்வழி

# உலக வாழ்வில் ஏற்றத் தாழ்வு

## ஞானிகளுக்குப் பொன்னும் மண்ணும் ஒன்றே

## ஆண்டவன் முன்னிலையில் ஆன்மாக்கள் எல்லாம் சமம்

— ப. முருகன் —

(தமிழ்ப் பேராசிரியர் - அரசினர் கலைக் கல்லூரி, கோவை)

ஒருவனுடைய வாழ்க்கை காவிரிக் கரையோரத்தில், கண்ணையும் கருத்தினையும் கவரக் கூடிய மாடமாளிகையில் தொடங்குகின்றது. மற்றொருவனுடைய வாழ்க்கை கழிவு நீர் ஓடும் சாக்கடையிலே காற்றுக்கும் மழைக்கும் போராடிக் கொண்டிருக்கும் சிறு குடிசையில் தொடங்குகின்றது. செல்வ மனையிலே பிறந்தவனுக்குப் பொழுதினைப் போக்குவது எப்படி என்று தெரியவில்லை; அவனுக்குப் 'பொழுது போக்கு' நிறையத்தேவைப்படுகின்றது. ஆனால் குடிசையில் பிறந்தவனோ காலைமுதல் இரவு வரை கைவண்டியை இழுத்துச் சென்றாலும் அரை வயிற்றுப் பட்டினியாகவே இருக்கின்றான்; அவனுக்கு எப்படிப் பொழுதினைப் போக்குவது என்று தெரியவில்லை. உலகத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளைக் காண்கின்றோம்; காணுந்தோறும் ஏன் இத்தகைய ஏற்றத்தாழ்வு என்று மனம் புழுங்குகின்றது. ஏற்றத் தாழ்வினைப் போக்க வழிதேடியலைந்து, மனவேதனையிடமிருந்து விடுதலை பெற நாடக அரங்கை நாடிச் செல்கின்றோம்.

### நாடகமும் உலகமும்

கண்ணைக்கவரும் கவின்மிகு அரண்மனைத்திரை பின்பக்கம். ஓவியம் என அமைந்த மகளிர் இருமருங்கில்; கற்பனையும் செய்து பார்க்கமுடியாத ஒப்பனையமைந்த அரியணை; அதன் மீது மணிமுடிதாங்கிய மன்னன் கொலுவீற்றிருக்கின்றான். அவன் பக்கத்தில் நின்றும் இருந்தும் ஏத்துவோர் பலர், அவன் புகழ்பாட, நாடகமேடை மீது ஒரு காட்சி கனவோ என மருளுமாறு நம் கண்முன் விரிகின்றது. அதே நாடகமேடையில் மற்றொருகாட்சி, பின்பக்கத்தில் கலகலத்துப்போன குடிசை; கிழிந்த ஆடை, ஒட்டிய வயிறு; ஒளியிழந்த கண், நடக்கவும் முடியாது கோல் காலாக நொண்டி, நொண்டி நடந்து, "ஐயா! பிச்சை!" என்று இரு கைகளையும் நீட்டிக்கொண்டு வருகின்றான் ஒரு முதியவன். முதற் காட்சியில் அரசனை அவன் தன் அரியணையில் அமர்ந்திருக்கக் கண்டு மகிழ்ந்தோம். இரண்டாவது காட்சியில், பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதனையும் கண்டு மகிழ்கின்றோம். நாடகத்தில் அடுத்தடுத்து வரும் இவ்விரு காட்சிகளும் நம்மை மகிழ்விப்பதில் ஒரே நிலையில் உள்ளன; இரண்டிற்கும் எந்த வேறுபாடும் இல்லை. அரசன் மேடை மீது தோன்றியதும், நாம் எழுந்து நின்று அவனைப் புகழ்வதும் இல்லை, பிச்சைக்காரனின் வறுமை நிலைகண்டு இரங்கி, அவன் தன் வறுமையினைப் போக்கக் காசு பணம் கொடுப்பதும் இல்லை. ஆனால் வாழ்க்கையில் இந்த ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு விட்டால் மனம் வருந்துகின்றோம்!

நாடகம் காண்கின்றபோதும், காவிரிக்கரையில் பிறந்து வளர்ந்த பெருநிலக்கிழாரும், தெருவோரத்தில் பிறந்து வளர்ந்த கைவண்டிக்காரனும் நம் மனத்திரையினை விட்டு நீங்குவதில்லை. நமக்கு நாம் காணும் காட்சிகள் இரண்டும் வேறு வேறானவையாகத் தோன்றுகின்றன. நாடகம் நாடகமாகத் தோன்றுகின்றது; வாழ்வு வாழ்வாகவே தோன்றுகின்றது. ஆனால் வாழ்வை நாடகமாகவும், நாடகத்தை வாழ்வாகவும், ஒரு சிலர் காண்கின்றனர். பொன்னையும் ஓட்டினையும் ஒப்ப எண்ணுகின்ற ஞானிகளுக்கு இருகாட்சிகளும் ஒன்றாகவே தோன்றுகின்றன!

அவர்களுக்கு உலகமே நாடக மேடை! உலகில் ஆடவராகவும், மகளிராகவும் நடமாடுகின்றோர் அனைவருமே நாடக மாந்தர்கள். ஏழையாகவும், பணக்காரனாகவும், தொழிலாளியாகவும், முதலாளியாகவும், மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் வாழ்கின்றோர் அனைவருமே நாடகப்பாத்திரங்கள். வாழ்க்கையில் காணும் பிச்சைக்காரன் உண்மைப் பிச்சைக்காரனுமல்லன்; பணக்காரன் உண்மையில் பணக்காரனும் அல்லன். எல்லாம் வேடம், எல்லாம் நடிப்பு!

### நாடக இயக்குநன்

உலகமாகிய நாடகமேடையில் நடைபெறும் இந்நாடகத்தினை இறைவன் முன்நின்று நடத்துகின்றான். இறைவன் ஆட்டுவிக்க எல்லோரும் மேடையில் ஆடுகின்றனர். முழுமுதற் பொருளாகிய இறைவன் 'பதி' என்று சைவசித்தாந்திகள் கூறுவர். இறைவன், நாடகமாகிய உலகத்தினை இயக்கிக் கொண்டு செல்கின்றான். அதனால் இறைவனை இந்த நாடகத்திற்கு இயக்குநன் (Director) என்று கூறலாம். அவன் எங்ஙனமெல்லாம் இயங்க வேண்டும் என்று விரும்புகின்றானோ அதற்கேற்பவே எல்லோரும் இயங்குகின்றனர். இதனைத்தாம் "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்று கூறுகின்றனர் போலும்.

### பாத்திரங்களும் வேடமும்

நாடகத்திலே பங்கு கொள்ளும் பாத்திரங்கள் அனைத்தும் ஆன்மாக்கள் எனப்படும். ஆன்மாக்களை 'உயிர்' என்றும், 'பசு' என்றும் கூறுவதுண்டு. இவ்வுயிர் அல்லது பசு, இறைவன் அல்லது பதி தருகின்ற பாத்திரத்தினை ஏற்று, அவன் இயக்குமாறு உலகமாகிய நாடகமேடைமீது நடிக்கின்றது. இறைவன், ஆன்மாக்களுக்குப் பல வேடங்களைத் தருகின்றபோது, அவைகளின் ஆற்றலுக்கு ஏற்பத் தருகின்றான். அந்த ஆற்றல் ஆன்மாக்களின் 'பாசத்'திற்கேற்ப அமைகின்றது. உயிர்களின் பாசத்திற்கேற்ப அவைகளின் ஊழ்வினை அமைகின்றது. அவ்வூழ்வினைக்கேற்ப, ஆன்மாக்களின் வடிவமும், செல்வ நிலையும், குரலும் நிறமும் பிறவும் அமைகின்றன. ஒருவன் நெட்டையாகவும் மற்றொருவன் குட்டையாகவும் இருக்கின்றான். இவைக்கெல்லாம் காரணம் ஆன்மாக்களின் பாசமே. கூனையும் குறளையும் அரசனாக நடிக்கச் செய்ய முடியாது. கொழு கொழுவென வளர்ந்து, தொந்தி பெருத்த ஒருவனைப் பிச்சைக்காரனாக நடிக்கச் செய்ய முடியாது. தத்தித் தத்திப் பேசும் ஒருவன் கவிஞனாக நடித்தால், இயல்புக்கு மாறாகத் தோன்றும். ஒவ்வொருவருடைய வடிவத்திற்கும், குரலுக்கும், நடிப்புத் திறமைக்கும் ஏற்பப் பல வேடந் தாங்கி நாடக மேடையில் தோன்றி நடிப்பதைப் போல், நல்வினை செய்த ஒருவன் நாடக உலகில் பணக்காரனாக வேடந் தாங்கி வருகின்றான், தீவினை செய்த ஒருவன் பிச்சைக்காரனாக வருகின்றான். நாடக இயக்குநனாகிய இறைவன், ஆன்மாக்களின், இயல்புணர்ந்து ஏற்ற பாத்திரம் கொடுத்து நடிக்கச் செய்கின்றான்.

### எல்லோரும் பாத்திரங்களே

நாடக ஆசிரியனுக்கு எல்லாப் பாத்திரங்களும் ஒன்றே. அவன் எல்லோரையும் ஒரே நிலையில் வைத்துக் காண்கின்றான். அரசனாக நடிக்கின்றவனைக் கட்டித் தழுவிக் கொள்வதில்லை, ஆண்டியாக நடிக்கின்றவனை உதறித் தள்ளுவதுமில்லை. அவர்களின் திறனுக்கேற்ப அரசனாகவும் ஆண்டியாகவும் வேடம் கொடுத்திருக்கின்றான். ஆனால் அன்பு காட்டி நடிக்கச் செய்வதில் இருவரையும் வேறு படுத்துவதில்லை, சம நிலையில் வைத்தே பாராட்டுகின்றான். அதே நிலையில் தான் இறைவனும், நாடகப் பாத்திரங்களாகிய ஆன்மாக்களிடத்தில் ஒரே தன்மைத்தாகிய அனபினைக் காட்டுகின்றான். இறைவன் எதிரில், எல்லோரும் ஒரே நிலையிலுள்ள ஆன்மாக்களே. காவிரிக் கரையில் ஏழு நிலை மாடத்தில் வாழ்கின்றவனும் ஓர் ஆன்மா தான்; சாக்கடையோரத்தில் நாயுடன் போட்டியிடுபவனும் ஓர் ஆன்மா தான். இறைவனுக்கு ஓர் ஆன்மா உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்பதில்லை. எல்லாம் ஒன்றே! எல்லாரும் நாடகப் பாத்திரங்களே!

நாடகத்தில் சில பாத்திரங்கள் முதற் காட்சியிலிருந்து கடைசி வரை வருகின்றன. வேறு சில இடையிடையே தோன்றி மறைகின்றன. நாடகமாகிய உலகத்திலும் நீண்ட காலம் வாழ்கின்றவர்களும் உண்டு. இடையிடையே மறைகின்றவர்களும் உண்டு. நாடக இயக்குநன் யாரை எங்கே புகுத்த வேண்டும் என்று தெரிந்து புகுத்தி நாடகத்தை நடாத்திக் கொண்டு போவதைப் போல, இறைவனும் ஆன்மாக்களைப் பல் வேடத்தில் புகுத்தித் திடீரென மறையச் செய்தும், நீண்ட காலம் வாழச் செய்தும் உலகினை நடாத்திக் கொண்டு போகின்றான். நாடகத்தில் முதற் காட்சியில் பிச்சைக்காரனாக வருகின்றவன், அடுத்த காட்சியில் அரச வேடத்திலும் வருதல் உண்டு. அதற்கு வேண்டிய ஆற்றல் அவன்பால் அமைந்திருந்தால் அதைப் போலவே உலகத்திலும் நல்வினை செய்திருந்தால், முதலில் பிச்சைக்காரனாக வருகின்றவன் பிற் காலத்தில் பணக்காரனாகவும் ஆதலுமுண்டு.

### இன்பியலும் துன்பியலும்

ஒருவன் நடிப்பது நாடகம் ஆகாது; பலர் நடிக்க வேண்டும். பலரும் ஒரே வேடந் தாங்கி நின்றாலும் நன்றாக இராது. பலர் பல வேடத்தில் வந்தால் தான் நாடகம் காண்போர்க்கு இன்பத்தை நல்கும். எல்லா நாடகமும் இன்பமயமாகவே முடிந்தாலும் நன்றாக இருப்பதில்லை. இடையிடையே துன்பமும் பரவி வருதலும் வேண்டும்.

அப்போதுதான் காண்கின்றவர்களுக்கு சோர்வு தட்டாது; நாடகமும் சுவை குன்றாமலிருக்கும். உலகத்தின் இயல்பினை யுணர்ந்த இறைவன், வாழ்வு சுவைபட அமைவதற்காகவே, இன்பமும் துன்பமும் கலந்த நாடகத்தினை ஆன்மாக்களின் துணைக்கொண்டு நடாத்திக் கொண்டு செல்கின்றான். நாடகமேடையில் இன்பியல் நாடகத்தினைப் பெரிதும் விரும்புவதும், துன்பியல் நாடகத்தினை அறவே வெறுப்பதும் இல்லை. எந்த நாடகமாக இருப்பினும், கலைக்கண் கொண்டு பார்த்து, நடிக்கப்படும் திறன்கண்டு பாராட்டுகின்றோம். நாடக மேடையில் ஒருவன் கொலை செய்யப் பெற்று விட்டால், அவன் கொலை செய்யப் பெற்ற திறன் அழகாக இருக்கின்றது என்று பலபடப் பேசுகின்றோம். ஆனால் உலகில் ஒருவன் இறந்து பட்டால், மதிமயங்கி அழுவது வியப்பாக இருக்கின்றது. நாடகமேடையில் கொலை செய்யப் பெற்றவன் உண்மையில் இறக்கவில்லை; அத்துடன் அந்த வேடத்தை அவன் கலைத்துவிடுகின்றான். வேறு காட்சியில் வேறு பாத்திரமாக வரலாம். அவனுடைய கொலையைப் போலத்தானிருக்கின்றது உண்மையுலகில் நாம் காணும் கொலையும். ஆன்மா அழியவில்லை; ஆனால் ஆன்மா தாங்கிக் கொண்டுவந்த வேடம் கலைக்கப்படுகின்றது. இறப்பதும் பிறப்பதும் வேடத்தினைக் கலைத்தலும் வேறு வேடந்தாங்குவதும் போல்வதாகும்.

### எல்லாம் நடிப்பே!

நாடகமேடையில் தோன்றும் அரசன், தான் நடிப்பதனைவிட்டுத் தனக்கு அந்தப் பாத்திரத்தைக் கொடுத்த நாடக இயக்குநனைப் புகழ்தலில்லை; மற்றும் தனக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் வேடத்திற்காக இறுமாப்புக் கொள்வதும் இல்லை. அவன் விரும்பி முயலுவதெல்லாம் நல்ல நடிப்பே. அதைப்போலவே நாடக மேடைப் பிச்சைக்காரனும், தன்னுடைய வேடத்திற்காகக் கவலை கொள்ளுவதில்லை; நடிப்பதை விட்டு விட்டு மேடையில் நின்று கொண்டு, தனக்குப் பிச்சைக்கார் வேடத்தினைக் கொடுத்து விட்டான் நாடக இயக்குநன் என்று ஒருநாளும் சொல்வதில்லை. ஆனால் உலகில், செல்வன், தனக்குக் கிடைத்துள்ள நிலைகண்டு பெருமை கொள்கின்றான், பிறரை இகழ்கின்றான். பிச்சைக்காரனோ, தான் இழி நிலையிலிருப்பதாக எண்ணிச் செல்வர்களின் சிறந்தநிலையோடு ஒப்பிட்டு வருந்துகின்றான். இப்படி வீணே பெருமை கொள்வதற்கும், வருந்துவதற்கும் காரணம் "நாடகமே உலகம்" என்பதனை உணர்ந்துகொள்ள மாட்டாமையேயாகும்! இதனையுணர்ந்து கொண்டால், உலகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் போலி என்பது தெரியவரும்!

---

## மகாவித்துவான் கணேசையர் நினைவு விழா

அகில இலங்கைத் தமிழ்ச் சங்கத்தினரால் மகாவித்துவான் கணேசையாவின் நினைவு விழா சித்திரமேழி பழனியானந்தன் சபை மண்டபத்தில் அதன் துணைத்தலைவர் சைவப் புலவர் வ. செல்லையா தலைமையில் சமீபத்திற் கொண்டாடப்பட்டது.

சைவப்புலவர் வ. செல்லையா தலைமை தாங்கிப்பேசும்போது, ஐயா அவர்கள் நாவலர் பரம்பரையில் வந்தவர் எனவும் அவர்கள் தமிழுக்குச் செய்த பணிகளை மறக்கமுடியாது என்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் ஐயா அவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே ஒரு பல்கலைக்கழகத்தை நடாத்தித் தமிழை வளர்த்தார் என்றும் குறிப்பிட்டார்.

இளவாலையில் கிளைத் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஆரம்பித்துப் பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## அரசியலில் புத்த பிக்குகள் தலையிடக் கூடாது

புத்த பிக்குகள் யாரும் இனி அரசியலில் ஈடுபடக் கூடாதென்றும், சாஸன மண்டலாயாவின் அங்கீகாரமின்றி சம்பளத்துக்குச் சேவை செய்யப்படாதென்றும், புத்த பிக்குகள் சங்கத்தைப் புனிதமாக்க வேண்டுமென்றும், புத்த பிக்குகளடங்கிய சாஸன கொமிஷன் ஏகமனதாகச் செய்துள்ள சிபார்சுகள் பொது மக்களால் வரவேற்கப்படுகின்றன.

இது சட்டமானால் இலங்கையின் அரசியல் வாழ்வு புனிதப் படுமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் மத வெறியை நம்பியுள்ள சில அரசியல் வாதிகளுக்கு இந்த அறிக்கை பிடிக்கவில்லை. இதை இந்த அரசாங்கம் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டு வருமா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

இவ்வறிக்கை திரு. பண்டாரநாயக்காவின் மரணத்திற்கு முன்னதாகவே சமர்ப்பிக்கப் பட்டதாகும்.

---

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

**'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்**

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

- போட்டோவின் அளவு, 6" X 4"
- முடிவு திகதி 31-12-59.

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப் படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

# அடிமைத்தளை அறுத்த அண்ணல் ஆபிரகாம் லிங்கன்



ஜனநாயகம், மனித மகத்துவம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டாக விளங்கிய ஆபிரகாம் லிங்கனின் 150-வது பிறந்த தின வருடமாக 1959-ம் ஆண்டு விளங்குகிறது. அமெரிக்காவின் பதினறுவது ஜனதிபதி ஆபிரகாம் லிங்கன் கருணை, பொறுமை, அன்பு ஆகியவற்றின் வடிவமாக இலங்கியவர். இன்று ஆபிரகாம் லிங்கன் கனிந்த மனிதப் பண்பு, ஜனநாயக ஆட்சி முறை ஆகியவற்றின் மாண்புமிக்க எடுத்துக்காட்டாக அமெரிக்க மக்களுக்கும், மற்றும் பல நாட்டு மக்களுக்கும் விளங்குகிருர்.

1863-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் நாள் அமெரிக்காவில் கெட்டிஸ்பேர்க் என்னுமிடத்தில் போர் வீரர்களின் சமாதிகளின் அருகே ஆபிரகாம் லிங்கன் தனது இரத்தினச் சுருக்கமான, ஆனல் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினர்.

அவரது பிறந்த நாள் பெப்ரவரி 12 ஆயினும் ஆண்டு முன்னூற்று அறுபத்து ஐந்து நாளும் அவரது நினைவைப் பல வடிவிலே பொறித்து அழியாமல் காக்கிருர்கள்.

### கெட்டிஸ்பேர்க் சொற்பொழிவு

1863-ம் ஆண்டு சுதந்திர தினத்திற்கு சற்று முன்பாக கெட்டிஸ்பேர்க் போர் முடிவிற்கு வந்தது. இந்த முக்கியமான போர் நடந்துகொண்டிருக்கும்பொழுது இப்பேருரை நிகழ்த்தப்படவில்லை. போரில் அவ்வீரர்கள் உயிர்த் தியாகம் செய்து கடமையைச்செய்தனர். அந்த உயிர்த் தியாகம் தான் இந்த சரித்திர முக்கியத்துவம் பெற்ற சொற்பொழிவை ஆற்ற லிங்கனைத் தூண்டியது.

கெட்டிஸ்பேர்க் சொற்பொழிவு தியாக வீரர்களுக்கு செலுத்திய இறுதி மரியாதை மட்டுமல்லாது சுதந்திர பிரியர்களுக்கு விடுத்த வேண்டுகோளுமாகும்.

இந்த சொற்பொழிவின் போது தான் ஜனநாயக லட்சியத்தை இலக்கிய சிறப்புடன் விளக்கும் சாகா வரம் பெற்ற சொற்களை அவர் உதிர்த்தார். "மக்களுக்காக மக்களாலான மக்களாட்சி இத் தரணியிலிருந்து அழியாது" என்பதே அவர் அருளிய அமர வாசகம்.

# நாகர்கோவில் மகாதேவன்

## இலங்கை விஜயம்

சிறந்த திரைப்பட நடிகரும், பாடகருமான நாகர் கோயில் கே. மகாதேவன், எட்டியாந்தோட்டை கல்வி விருத்திச் சபையின் பாடசாலை நிதிக்காக பலஇசைக்கச்சேரிகள் நடாத்த இம்மாதம் இலங்கைக்கு வருகிருர். இவரது கச்சேரிகள், கொழும்பிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை முதலிய முக்கிய நகரங்களிலும், மற்றும் மலைநாட்டிற் சில இடங்களிலும் நடைபெறவிருக்கின்றன. 44 வயதான மகாதேவன் 20 திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இவர் அசோக்குமார் என்ற படத்தில் புத்த பிக்குவாக மிக உணர்ச்சி ததும்ப நடித்தார். இவர் ஸ்ரீ வள்ளி என்ற படத்தில் பாடியுள்ள "முருகன் திருமால் மருகன்" என்ற பாடலும், ரத்னகுமார் என்ற படத்தில் "பம்பரம் போலே" என்ற பாடலும் இன்றைக்கும் பிரபல்யமாக உள்ளன.

திரு. மகாதேவன் சிறந்த நடிகரும், பாடகரும்மட்டுமல்ல சிறந்த எழுத்தாளருமாவார். இவர் எழுதியுள்ள 'நினைவு' என்ற சிறு கதைப் புத்தகம் 'பேசும் படம்' காரியாலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

இவரது முதலாவது கச்சேரி கொழும்பில், எட்டியாந்தோட்டை கல்வி விருத்திச் சபையின் பாடசாலை நிதிக்காக, கொழும்பு, மேட்டுத் தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில், இம் மாதம் 22ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

# "அந்த நாள் இனி வருமோ ?"

## இரு சிங்களப் பிரமுகரின் கருத்து

### 1. ஆனந்த குருகே

2000 ஆண்டுகளாக ஒன்று கூடி வாழ்ந்து, பரஸ்பரம், கலாசார பரிவர்த்தனை செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்த இந்து சமுதாயமும் பௌத்த சமுதாயமும் மறுபடியும் ஒற்றுமைப்பட்டால் தான், நல்லெண்ணத்தையும், பொறுமையையும் அடிப்படையாகக்கொண்ட ஓர் ஐக்கிய தேசத்தை உண்டுபடுத்தலாம் என்று வித்தியோதய பல்கலைக் கழகத்தின் நிர்வாகத் துணைவர் டாக்டர் ஆனந்தா குருகே சென்ற வாரம் யாழ்ப்பாணம் சரித்திர ஆராய்ச்சி சங்கத்தின் ஆதரவில் வைத்தீசுவர வித்தியாலயத்தில் விரிவுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

மதம், கலாச்சாரம் முதலிய விஷயங்களில் எப்பொழுதும் சிரத்தை காட்டும் யாழ்ப்பாணத்து மக்களைப் பாராட்டி, கலாசார விஷயங்களில் தம்முடன் முன்பு ஒத்துழைத்த பழைய நண்பர்களைத் திரும்பவும் சந்திப்பது பற்றி அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

" இந்திய தத்துவத்தில் பௌத்தம் வகிக்கும் இடம் " என்னும் பொருள்பற்றி அவர் பேசினர். சரித்திர ஆராய்ச்சி சங்கத்தின் தலைவர் திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமை வகித்தார்.

### 2. பி. வீரமன்

சிங்களவர், தமிழர், பறங்கியர் என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் குறிப்பிடாத அந்த நாள் இனி வருமோவெனக் கூட்டுறவு அபிவிருத்திகொமிஷனர் திரு. பி. ஈ. வீரமன், யாழ்ப்பாணம் சென்ற். ஜோன்ஸ் கல்லூரி விழாவொன்றின் போது குறிப்பிட்டார். இவ்விழா சென்ற வாரம் நடைபெற்றது.

பல்கலைக் கழகத்தில் தாம் படிக்கும் போது கழக யூனியன் உத்தியோகமொன்றுக்குத் தாம் ஒரு தமிழருடன் போட்டியிட்டதையும், பல தமிழ் மாணவர்களின் வாக்குகளால் தாம் இறுதியில் வெற்றி பெற்றதையும் அவர் நினைவூட்டிக்கொண்டார்.

எல்லோரும் ஒரே குலம் என்ற எண்ணம் எல்லாருடைய மனத்திலும் பதியா விட்டால் எமது நாட்டின் வருங்காலம் மிகவும் மோசமானதாய் இருக்கும் என்றும் திரு. வீரமன் தெரிவித்தார். கூட்டுறவு முறையின் நன்மைகளை யாழ்ப்பாணத்தவர்கள் நன்ருக உணர்ந்திருக்கிறபடியால் தான் அத்துறையில் அவர்கள் முன்னேற்றமடைந்துள்ளார்களென்றும் அவர் குறிப்:பிட்டார்.

# றுவாண்டாவில் 200 ஆபிரிக்கர்கள் கொலை

## சூடானில் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி

### உலக நிலை

ஆபிரிக்காவில் பெல்ஜியன் கொங்கோவிற்கு கிழக்கே பெல்ஜியத்தின் ஆட்சியில் சிறிய நாடாகிய றுவாண்டாயுறுண்டி இருந்துவருகின்றது. இங்கு சென்ற இருவாரங்களாக வற்றூற்சி, பகுற்று ஆகிய ஜாதியினருக்கிடையே உள்நாட்டுக் கலவரங்கள் நிகழ்ந்துவருகின்றன. இதன் விளைவாக 200 ஆபிரிக்கர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஆயிரத்துக்கு அதிகமானோர் கைதாகியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பெல்ஜியன் கொங்கோவில் இருந்து இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது. 5,000 விவசாயிகள் தமது விளைநிலங்களிலிருந்து பயந்து ஓடிவிட்டமையால் உணவுப் பஞ்சம் ஏற்படுவது சாத்தியம் எனத் தெரிகிறது. ஐக்கிய நாடுகளின் தர்மகர்த்தா சபையின் மேற்பார்வையில் பெல்ஜியத்தினுல் நிர்வகிக்கப்படும் இந்நாட்டிற்கு சுயாட்சி வழங்கப்பட்டால் பகுற்று ஜாதியினர் வற்றூற்சியினரின் அடிமைகளாக மீண்டும் வாழவேண்டி நேரிடும் என அஞ்சியே இக் கலவரங்களைத் தொடக்கினராம். நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இராணுவ அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

### சூடானில் இராணுவப் புரட்சி

கடந்த 10ஆந் திகதி சூடானின் ஜனதிபதியாகிய ஜெனரல் இப்றஹிம் அபூட் என்பவவரின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சி பலனளிக்காமையால் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்ட காலந் தொடக்கம் ஜெனரல் அபூட் சூடானின் ஜனதிபதியாக இருந்துவருகிருர். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு இராணுவ நீதிமன்றம் கைதிகளை விசாரணை செய்யத் தொடங்கியது.

# மாநகரசபை செய்துள்ள முடிவு

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

யப்பா யோசனை சொன்னர். ஆனல் அங்கத்தவர்கள் அதற்கு சம்மதப்படவில்லை. விவாதமின்றியே பிரேரணை நிறைவேறியது.

### கடைகளுக்கு வரி

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியிலுள்ள கடைகளுக்கு விதிக்கப்படும்வரிகளை திருத்தி அமைப்பது சம்பந்தமாக திரு. எஸ். இராசரத்தினம், திரு. மன்மதராயன், திரு. கி. துரைசிங்கம் முதலியோர் கொண்ட ஓர் உப குழு அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சேறுவாரி சுத்தம் செய்யவேண்டுமென்றும், ஏழாம் வட்டாரத்திலுள்ள நாயன்மார் குளத்தை ஆழமாக்கி, சுவர் கட்டி, நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுத்தவேண்டுமென்றும் திரு. கி. துரைசிங்கம் கொண்டுவந்த பிரேரணைகளும் விவாதமின்றியே நிறைவேறின.

யாழ்ப்பாணத்துக்கு சமீபத்தில் விஜயம் செய்தபோது தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்காக நன்றிகூறி ஸ்தலஸ்தாபன அமைச்சர் எம். பி. டபிள்யூ. மெதிவாக்க அனுப்பிய கடிதமொன்றை மேயர் சபைக்கு வாசித்தார்.

# தமிழ்ச் சங்கங்களின் செயல் முறைகள்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பேரரசைக் கேட்பது.


மதுரையில் ஒருபல்கலைக்கழகம் அமைவதற்கேற்ற கல்லூரிகளை ஏற்படுத்தித் தொண்டு செய்யும் திரு. கருமுத்து தியாகராய செட்டியார் அவர்களைப் பாராட்டுவதோடு, அங்கு விரைவில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்வது.

இந்தியப் பேரரசு அஞ்சல் தலைகளில் திருவள்ளுவர் உருவம் பொறிக்க இசைந்தமைக்கு, இக்குழு பாராட்டுவதோடு உருவம் அமைக்கும் பொழுது இக்குழுவைக் கலந்து அமைப்பது நல்லது எனவும் தெரிவித்துக் கொள்கிறது.

அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டைத் தமிழ்ப்பெருமக்களைக் கலவாமல் ஏற்பாடு செய்தது தவறு என்று இக்குழு வருத்தத்தைத் தெரிவிக்கிறது.


மகத்தான 3-வது வாரம்!

முருகன் (ஜிந்துப்பிட்டி) ஓடியன் (கல்கிசை) லிபர்ட்டி (பதுளை)



★ ஜெமினி கணேசன் ★ ராஜசுலோசனு
★ சாவித்திரி ★ வி. ஆர். ராஜகோபால்
★ எம். என். நம்பியார் ★ எம். எஸ். எஸ். பாக்கியம்

முதலியோர் நடித்த

பாக்கிய தேவதை

(தமிழ்)

குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணம் செய்கிருள் கடமை உணர்ச்சியுள்ள ஒரு பெண்!

தன் கணவனின் வீண் சந்தேகத்தைப் போக்கடித்துத் தனது நேர்மையை நிலைநாட்டப் பல கஷ்டங்களையும் எதிர்த்துப் போராடுகிருள் இன்னுமொரு பெண்!

இவர்கள் இருவரையும் "பாக்கிய தேவதை"யில் நீங்கள் சந்திக்கலாம்!

சினிமா உலகம்

# லண்டனில் இந்தியப் பட விழா

அடுத்த கோடை காலத்தில் லண்டன் நகரிலுள்ள நஷனெல் பிலிம் தியேட்டரில் இந்தியப் பட விழாவொன்றை நடாத்த, அத் தியேட்டரின் நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர். அண்மையில் இங்கு காண்பிக்கப்பட்ட சத்ஜியத் ரேயின் 'அப்புவின் உலகம்' என்ற படத்தின் மூலம், இந்தியப் படங்களுக்கு லண்டனில் 'கிராக்கி' ஏற்பட்டுள்ளது.

50,000 அங்கத்தவர்களைக் கொண்ட லண்டன் நஷனெல் தியேட்டர் நிர்வாகிகள், இவ் விழாவை வெற்றிகரமான முறையில் நடாத்துவதற்காக, இந்தியப் பட இயக்குநர், தயாரிப்பாளரின் ஆலோசனையையும் கேட்டுள்ளனர். இதுவரை 28 இந்தியப் படங்களை அவர்கள் தேர்ந்துள்ளனர். இந்த விழா ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு நடைபெறலாம் எனத் தெரிகிறது.

## முதல் மந்திரி

'அவன் அமரன்' என்னும் படத்தைத் தயாரித்த பீப்பிள்ஸ் பிலிம்ஸார், தமது 'இரண்டாவது தயாரிப்பாக முதல் மந்திரி' என்ற பெயரைக் கொண்ட படத்தைத் தயாரித்து வருகிருர்கள். நாகர் கோயில் எஸ். நாகராஜன் இப் படத்தின் கதை, வசனத்தையும் எழுதி, அத்துடன் படத்தை இயக்கவும் செய்கிருர். பரமவுண்ட் ஸ்டுடியோவில் வளர்ச்சி பெற்று வரும் இப் படத்தில் எம். ஆர். ராதா, எஸ். வி. சுப்பையா, நாகையா, சந்திரகாந்தா, எஸ். எம். குமரேசன், சுந்தரி, கணபதி முதலியவர்கள் நடிக்கின்றனர். இசையமைப்பு டி.எம். இப்ராஹிம் பொறுப்பில்.

## சொந்த ஊரே சொர்க்க பூமி

இப் படம் வெகு விரைவில் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலு புரொடக்ஷன்ஸாரின் இப் படத்தில் என். டி. ராமராவ், சௌகார் ஜானகி, சுலோசனு, ரீற்ரு, சந்திரகாந்தா, ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் தோன்றுகின்றனர்.

## வீனஸ் பிக்ஸர்ஸாரின் அடுத்த தயாரிப்பு

'உத்தம புத்திரன்', 'கல்யாணப்பரிசு' போன்ற படங்களைத் தயாரித்துப் புகழ் பெற்ற வீனஸ் பிக்ஸர்ஸ் கொம்பனி, தமது அடுத்த படத்திற்கு 'தேன் நிலவு' என்னும் பெயரை அளித்திருக்கிருர்கள். இப் படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் முதலிய பொறுப்புகள் இளைஞர் ஸ்ரீதரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. அதோடு, இவர் சம்பூர்ண பிலிம்ஸாருக்காகவும் ஒரு படத்திற்கான கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றுள்ளார். இவ்விரு படங்களிலும் ஜெமினி கணேசன், சரோஜாதேவி இருவரும் காதல் ஜோடிகளாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர். இச் செய்தி சினிமா ரசிகர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தியென நாம் நிச்சயமாக நம்பலாம்.

## மத சம்பந்தமான படங்கள்

### அமெரிக்க மக்களின் விருப்பம்

அண்மையில் அமெரிக்காவில்நடாத்தப்பெற்ற ஓர்ஆராய்ச்சியின் முடிவு, அமெரிக்க மக்களுக்கு மத சம்பந்தமான படங்களிலேயே அதிகவிருப்பம் என்னும் உண்மையை வெளிக்கொணர்ந்துள்ளது. ஆபாசம், காதல், பலாத்காரம் இவ்வித உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய படங்களிலும் பார்க்க, கிறிஸ்தவ மதத்துடன் சம்பந்தப்பட்ட படங்களையே அமெரிக்க மக்கள் விரும்புகின்றனர் என்றும், இப் படங்களே வசூலிலும் வெற்றி காண்கின்றன என்றும் அந்த ஆராய்ச்சி கண்டுள்ளது.

## ஆங்கிலப் படத்தில் நடிக்க சந்திரபாபுவின் ஆவல்

ஆங்கிலப் படமொன்றில் நடிக்க வேண்டுமென்பதே எனது நெடு நாளைய ஆசையாகும். கூடிய சீக்கிரத்தில், எனது விருப்பம் நிறைவேறுமென நம்புகிறேன். இவ்வாறு தமிழ் ஹாஸ்ய நடிகரான சந்திரபாபு கூறியுள்ளார்.

சந்திரபாபு விரைவில் யப்பானுக்கும், இலங்கைக்கும் விஜயம் செய்யவிருக்கிருர். இலங்கையில் அவர் ஒரு சிங்களப் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

அவர், முதல் முதலாகச் சிவகாமி பிக்ஸர்ஸாரின் 'குமாரராஜா'வில் கதாநாயகனக நடித்துள்ளார். அவருடன் கூடவே எம். என். ராஜம், சூர்யகலா, டி. எஸ். துரைராஜ், டி. எஸ். பாலையா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## நாடகத்திரைக்குப் (பின்)னணி வேண்டாம்!

சினிமாவில், பின்னணி சங்கீதம் நிலையானவொரு இடம் பெற்றுவிட்டதென்றே சொல்ல வேண்டும். ஆனல், அதற்கு நாடகத்தில் இடமளிக்கக் கூடாது. சினிமாவிலும், மேடையிலும் நடித்து வரும் டி. கே. பகவதியின் கருத்து இதுவாகும். 'நாடகக் கலையில் ஈடுபட்டுள்ளவர்கள் சங்கீதம் தெரிந்த கலைஞர்களைக் கொண்டு நாடகத்தை நடாத்த வேண்டும். அப்படியான கலைஞர்கள் கிடைக்கவில்லையேல், நாடகத்திலிருந்து இசை அம்சத்தை நீக்கிவிட வேண்டும்' என்று கூறுகிருர் அவர்.

## 'யூத' பூதம் எமக்கு வேண்டாம்!

ஐக்கிய அரபியக் குடியரசில் அமெரிக்க நடிகையான மரிலின் மொன்ரூ நடிக்கும் படங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், அண்மையில் இந்த நடிகை யூத மதத்தில் சேர்ந்து கொண்டதேயாகும். இதே காரணத்திற்காக, இன்னும் இரு அமெரிக்க நடிகைகளின் படங்களும் அரபிய குடியரசில் காண்பிக்கப்படமாட்டா.

## "ஹொங்–கொங்"

இந்திய சினிமாக் கோஷ்டி ஒன்றுபம்பாயிலிருந்து ஹொங்-கொங்நகருக்குச் செல்லவிருக்கிறது. 'ஹொங்-கொங்' என்னும் தமது படத்திற்கான காட்சிகளைப் படம் பிடிப்பதற்காகவேஅவர்கள் அங்குசெல்கின்றனர். இப்படம்ஈஸ்ற்மன்கலரில் தயாரிக்கப்படும்.

இரத்தினங்கள் களவாடும் சர்வதேசக் கொள்ளைக் கூட்டத்தாரைப் பற்றியதே இப் படத்தின் கதையாகும். அசோக் குமார், இப்படத்தில் ஒரு உயர்தர பொலிஸ் அதிகாரியாக நடிப்பார். பம்பாயிலிருந்து ஹொங்-கொங்குக்குத் தப்பியோடும் கொள்ளைக் கூட்டத்தைத் துரத்திக் கொண்டு, இவரும் ஹொங்-கொங் செல்வார். படத் தயாரிப்பாளருக்கு ஹொங்-கொங் பொலிஸ் இலாகா எல்லா உதவிகளையும் அளிக்க முன்வந்துள்ளனர்.

இந்தி, தமிழ்ப் படங்களில் நடனமாடி மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து வரும் நடிகையான ஹெலன், ஹொங்-கொங் இரவு-விடுதிகளில் நடைபெறும் பல புதுமையான நடனங்களில் பங்குபற்றுவார்.

படத்தின் இசையமைப்பை, புகழ்பெற்ற இந்தி இசையமைப்பாளர் ஓ. பி. நாயர் பொறுப்பேற்றுள்ளார்.

## பிரபல அமெரிக்க நடிகை பலசரக்குக் கடையில் விற்பனையாளர்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் புகழ் ஏணியின் உச்சியில் நின்ற அமெரிக்க நடிகையான ஜீன் றியேர்னி என்பவர், இப்பொழுது அமெரிக்கப் பட்டினமான கான்ஸாஸில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் விற்பனையாளராகப் பணியாற்றுகிருர். 1955ஆம் ஆண்டில் இவர் நரம்புப் பலஹீனத்தால் நோய்வாய்ப்பட்டார் இவருக்கு டக்டர்கள் சிபார்சு செய்துள்ள சிகிச்சையில், விற்பனையாளராக வேலை பார்க்க வேண்டியதும் அவசியமாகியுள்ளது. இதன் பயனகவே, அந்த நடிகை விற்பனையாளராக வேலை பார்த்து வருகிருர்.

## பம்பாயில் பிறநாட்டுப் படங்கள்

பம்பாய்

பிறநாடுகளில் தயாரிக்கப்படும் சிறந்த படங்களை இங்கு வரவழைத்து, அவற்றை உள்நாட்டுத் திரைகளில் காட்சியளிக்கச் செய்ய, பம்பாய் நகரில் ஒரு புதுத்திட்டம் உதயமாகியுள்ளது. இங்குள்ள இளம் சினிமா உற்பத்தியாளர்களும், வினியோகஸ்தர்களுமே இத் திட்டத்தைத் தயாரித்துள்ளனர். இவர்கள் ஒன்றுசேர்ந்து 'அகடெமி சினிமா' என்ற சங்கத்தை உருவாக்கியுள்ளனர்.

பிறநாட்டுச் சிறந்த படங்களைக் காட்டுவதற்காக ஒரு பிரத்தியேகத் தியேட்டரை இச் சங்கம் கட்டி முடிக்கும். இத் தியேட்டருக்கான சாதனங்களை ஜெர்மனியிலிருந்து இறக்குமதிசெய்யவும் அவர்கள் யோசித்துள்ளார்கள். இத் தியேட்டரின் பெயர் 'ஆர்ற் சினிமா' என்பதேயாகும்.

இத் தியேட்டரில் காண்பிக்கப்படும் படங்களுக்கு பிரவேச விகிதங்கள் 25 சதம் தொடக்கம் 1 ரூபாய் மட்டுமே. தியேட்டரில் எல்லாமாக 1,500 ஆசனங்கள் இருக்கும். பல்கனி கிடையாது.

ஆர்ற் சினிமாவின் முக்கிய கடமைகளில், சர்வ தேசப் படவிழாக்கள் நடாத்துவதும் ஒன்ருக வ[illegible]ம்.

## பிரபல ஆங்கில ஆசிரியரின் நூல்கள் படமாக்கப்படும்

எட்கார் வல்லஸ் என்ருல் ஆங்கிலம்படித்தவர்கள்உடனே யாரென்று கூறிவிடுவர். அவருடைய நூல்கள் மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நாவல்களாகும். பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் இன்றும் அவரது புத்தகங்களை வாங்கி வாசிக்கின்றனர்-அவர் இறந்து பல வருடங்களாகியும்.

இவருடைய நூல்களில் ஏறத்தாழ 30 நூல்களைப்படமாக்க 'சிட்னி பொக்ஸ் அஸ்ஸோஸியேட்ஸ்' என்னும் படக்கொம்பனி தயார்செய்து வருகிறது. அடுத்த ஜனவரி மாதம் தொடக்கம் லண்டனிலுள்ள 'றுவிக்கென்ஹாம்' என்ற ஸ்டூடியோவில் படப் பிடிப்பு ஆரம்பமாகும். ஒரு வருடத்திற்குப் பத்துப் படங்களாக மூன்று வருடங்களில் 30 படங்களையும் எடுக்க யோசித்திருக்கிருர்கள் தயாரிப்பாளர். ஒரு படம் எடுத்து முடிய 3 கிழமைகள் செல்லும். ஒவ்வொரு படத்தினதும் நேரம் 60 தொடக்கம் 75 நிமிடங்கள் வரையே.

எட்கார் வல்லஸ் 1932 ஆம் ஆண்டில் இறந்தார். அவர் 150க்கு மேற்பட்ட துப்பறியும் கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஒரு வருடத்தில் அவரது புத்தகங்களின் பிரதிகள் 5,000,000 விற்பனையாகியிருக்கின்றன.

தெளிவான திட்டம், சிதருத மனித சக்தி, புத்தம் புதிய சிந்தனைகள், கூட்டுறவு உழைப்பு, தன்னம்பிக்கை நிறைந்த முயற்சி, தொழிலுக்குப் பணியும் அடக்கமுள்ள மனப்போக்கு இவை இருந்தால் எதிர்காலம் திரை உலகின் நற்காலமாகும் — **அகிலன்.**

# இலங்கைத் தமிழரின் பொருளாதாரம்

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரிக்கும் ஏற்றுமதி பிறநாட்டு வருவாயுடன் பிறநாட்டு மூலதனத்தையும் வரவழைக்க ஏதுவாக இருக்கும். அத்துடன் முன்னேறிய நாடுகளின் அரசாங்கங்கள் கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தி அவற்றின் மூலம்கடன் வசதி தொழில்நுட்ப உதவிகளும் கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும். 3. விவசாய உற்பத்தித்துறையில் நவீன முறைகளைக் கையாளுமிடத்து உற்பத்தி அதிகரிக்குமேயானல் மூலதனமும் மனித சக்தியும் கிராமங்களில் இருந்தே கைத்தொழில் நகரங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும். செழிப்புற்று இருக்கும் கிராமிய மக்கள் கைத்தொழிற் பொருள்களை வேண்டக்கூடிய சக்தியுடையவர்களாக இருப்பர். இதனல் கைத்தொழில்களை இலாபகரமாக நடாத்தவும், இங்கே கிடைக்கும் மூலப்பொருள்களைக் கைத்தொழில்கள் மூலம் பாவனைப் பொருள்களாக்கவும் வசதிஏற்படும். 3. நாடு முன்னேற்றமடையும்போது தொழில் நுட்பக் கல்வி வசதிகள், வீடமைக்கும் திட்டங்கள் போன்றவற்றிலே விருத்தியேற்படும். மேற்கூறிய நான்கு முக்கிய அம்சங்களும் விருத்தியடையும்பொழுது நாடும் முன்னேற்றமுறும்.

## அபிவிருத்தித்திட்டங்கள்

இவ்வாறு இடப்படும் மூலதனத்தின் முழுப்பேறுகளையும் அடைவதற்கு நவீன விஞ்ஞான முறைகளையும் செலவினங்களைக் குறைக்கக்கூடிய முறைகளைக் கையாளக்கூடியவர்களின் சேவை அவசியமும், மக்களும் தங்கள் பணத்தை இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூலதனமாய்க் கொடுத்து தங்கள் வருவாயை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு உருவாகும் ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் ஒழுகிக் கொள்ளப் பழக வேண்டும். காலத்துக்குக்காலம் மாறுதல் அடையும் தமது பொருளாதார அமைப்பைத் தளராது நடாத்தக்கூடிய சக்தி சமூகத்திற்கு ஏற்பட வேண்டும். மூலதனம் அதிகரிப்பதால் வருவாய்கள் அதிகரிப்பதோடு சமுதாயம் விஞ்ஞான அறிவைப் பெற்று புத்துணர்ச்சியுடன் தொழில்துறைகளில் ஈடுபட ஏதுவாகும். தொழில் ஸ்தாபனங்களின் தன்மைகளைக் கவனித்தே முதலீடு செய்யும்முறை நிர்மாணிக்கப்பட வேண்டும். விலைவாசி குறைந்து வருவாய் அதிகரிக்கக்கூடியதாகவும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும் இத்திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். (தொடரும்)

## கிராமங்களைக் . . .

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் கிராமங்களின், கிராம மக்களின் குறைகள் தீர்க்கப்பட்டு, தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, வசதிகள் அளிக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவு காணப்பட்டுவிட்டது என்ற எண்ணமோ அவர்களுக்கு? கிராமங்களின் முன்னேற்றத்தில் அரசாங்கம் அவசியம் அக்கறை காட்டவேண்டும்; இப்படி மேலோட்டமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது.


வி
ன்
டோ
ஜெ
னே




எல்லா வலிகளையும் அதிவிரைவில் குணமடையச் செய்யும் வலி நிவாரணி.

எல்லாவித தசைப்பிடிப்பு, தலைவலி, நரம்புத்தளர்ச்சி, கீல் வாதம், இடுப்புவலி, முடக்குவாதம், தொண்டைப்புண், தடிமன் போன்ற வியாதிகளிலிருந்து உடன் குணமடையச் செய்கிறது.

போலிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:

**சிலோன் அன் போரின் ட்ரேட்ஸ் லிமிட்டெட்**

ஏக விநியோகஸ்தர்கள்:

**புரோவின்ஷியல் சப்ளையர்ஸ் லிமிட்டெட்**

125, மெயின் வீதி, கொழும்பு. போன்: 78653

வெற்றி வாகை சூடும் **6**-வது வாரம்!

கிங்ஸ்லி - பிளாஸா (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை)

விஜிதா (மஸ்கேலியா) நியூ சினிமா (குருணைகலை) லக்ஷ்மி (ரத்தினபுரி)

★ கவர்ச்சி அளிக்கும் கருத்தோடு பூத்த கதை!
★ உள்ளத்தோடு உறவாடும் உணர்ச்சி மிகுந்த சம்பவங்கள்!!
★ மங்கையரின் வாழ்வில் நேரும் அதிர்ச்சிகளை சித்தரிக்கும் ஓவியம்!!!
★ மனச்சாட்சியை மதித்து தன் வாழ்வையே சிறப்பித்த பெண்ணின் காவியம்!!!!




நடிகர்கள்:

**ஜெமினி கணேசன்**
**பி. சரோஜாதேவி**
**நாகேஸ்வரராவ்**
**விஜயகுமாரி**
**நம்பியார்**
**தங்கவேலு**
**எம். சரோஜா**

கதை - வசனம்
டைரக்ஷன்:
**ஸ்ரீதர்**

சங்கீதம்:
ஏ. எம். ராஜா

பின்னணி:
ஏ. எம். ராஜா, ஜிக்கி, சுசீலா, ஜமுனாராணி.

**வீனஸ் பிக்சர்ஸ்**

# கல்யாண பரிசு

---

கொழும்பில் **14**-வது வாரம்!

**இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!** **கெபிட்டித் திரையில்**

சிவாஜி கணேசன், பத்மினி, ஜெமினி கணேசன், எஸ். வரலட்சுமி, ஓ. ஏ. கே. தேவர், ராகினி

முதலியோர் நடித்த

# வீரபாண்டிய கட்டபொம்மன்

(முழுநீள டெக்னிக்கலர்)

---

**5-வது வாரம்!**

செல்லமஹால் [கொழும்பு]

தினசரி மாலை 2-00, 6-30, இரவு 9-30
காலைக்காட்சி ஞாயிறு 10-00 மணிக்கு


பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், சந்திரபாபு, ராகினி,
ராஜசுலோசனா, என். எஸ். கே. மதுரம், டி. பி. முத்துலட்சுமி

மற்றும் பலர் நடித்த

# பாண்டித்தேவன்

(தமிழ்)

கதை-டைரக்ஷன்:
**கே. சுப்பிரமணியம்**



**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) **இப்பொழுது திரையிடப்படுகிறது!**

# மனைவியே மனிதனின் மாணிக்கம்

(தமிழ்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் திகதி வெளியிடப்பெற்றது.